# தமிழரசு

பிப்ரவரி 16-28, 1998 ரூ.3





கபிலர் குன்று, திருக்கோவிலூர்

# இந்த இதழில்...


குறைமதி விடுத்து நிறைமதி கொள்வீர்!
- கலைஞர் கவிதை ..... 2

“தியாகிகளுக்கு நாம் செலுத்தும் மரியாதை
அமளி மூளாமல் நாட்டைக் காப்பதுதான்”
- கலைஞர் உரை ..... 3

சக்தித் தாண்டவம்
- பொன்னீலன் ..... 9

சாமிநாதர் சகாப்தம்
- சோழராஜன் ..... 13

சின்னச் சின்ன இழை
பின்னிப்பின்னி வரும் சித்திரக் கைத்தறி ..... 17

தமிழர் நேசன்
- முனைவர் இராம. குருநாதன் ..... 26

இந்த நகரத்தைத் தூங்க வைக்கவேண்டும்!
- மனுஷ்ய புத்திரன் ..... 30

கபிலர் குன்று
- இராம. ஆநிரைக்காவலன் ..... 32

சிறுகதைக்கோர் புதுமைப்பித்தன்
- தொ.மு.சி. ரகுநாதன் ..... 38

எங்கள் ஊர்ப் பிரச்சினை ..... 42

மருத்துவம் ..... 47



## தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2029
மாசி
பிப்ரவரி 16 - 28, 1998
மலர் : 28 இதழ் : 16
விலை ரூ.3/-

# குறைமதி விடுத்து நிறைமதி கொள்வீர்!

தீவிர வாதமெனும் தீக்கொள்ளி ஏந்திகளே!
ஈவிரக்கமெனும் ஒரு பொருளிலா விலங்குகளாய் ஆனீரோ?
மன்னிக்க வேண்டும் மதிப்புமிகு விலங்கினங்கள் என்னை,
விதிவிலக்குகள் அவற்றிடையும் கண்டு வியக்கின்றேன் நான்!
எத்தனை மலர்கள் எத்தனை அரும்புகள் எத்தனை தளிர்கள் -
பொத்தென உதிர்வது இத்தரை மீது?
உதிரும் மலரும் அரும்பும் உமது பெண்டு பிள்ளை எனில்
பதறும் நெஞ்சம் உமக்குப் பற்றி எரியாதோ?
யாரோ எவரோ அப்பாவி மக்கள் எனும் அலட்சியந்தானே
தீராத விளையாட்டாய்த் திடீர்க் குண்டு வைக்கின்றீர்!
சற்றே நிதானித்துச் சிந்தித்துப் பாரீர்,
சாகும் மக்களில் உம்முடன் சேர்ந்து பிறந்த
சகோதர - சகோதரிகள் இல்லாவிடினும்
சாவின் மடியில் உம்மால் சாய்ந்தோர் அனைவரும்
கூடப் பிறவாத, உம் குடும்பத்து உறுப்பினர் தானென்று
குறைமதி விடுத்து, நிறைமதி கொள்வீர்!

- கலைஞர்



# “தியாகிகளுக்கு நாம் செலுத்தும் மரியாதை அமளி மூளாமல் நாட்டைக் காப்பதுதான்!”

**சர்தார் வேதரத்தினம் பிள்ளை**
அஞ்சல் தலை வெளியீட்டு விழாவில்
**கலைஞர் உரை**

**ச**ர்தார் வேதரத்தின்ம் பிள்ளை அஞ்சல் தலை வெளியீட்டு விழாவில் பங்கேற்று, அஞ்சல் தலையினை வெளியிட்டு, 25.2.98 அன்று உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

“இந்த நிகழ்ச்சி நம்மைப் பெருமைப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையிலே நாம் நடத்துகின்ற ஒரு நிகழ்ச்சியாகும். அன்பிற்குரிய மூப்பனார், அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்தில உத்தமர் காந்தியடிகள் வழி நின்று, அந்தப் போராட்டத்தில் நடைபெற்ற பல்வேறு கிளர்ச்சிகளில் - குறிப்பாக உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் மூதறிஞர் ராஜாஜி அவர்களின் தலைமையில் அன்றைக்கு போர்க்களம் புகுந்தவர்.

1930ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் அவர் கலந்து கொண்டு புகழ் ஈட்டியதன் காரணமாக, அடுத்த ஆண்டு 31 ஆம் ஆண்டு - நெல்லையில் நடைபெற்ற விவசாயிகள் மாநாட்டில் அவருக்கு ‘சர்தார் வேதரத்தினம் பிள்ளை’ என்ற பட்டம் சூட்டப்பட்டது. அவருடைய நூற்றாண்டு பிறந்த நாளில் அஞ்சல்தலை வெளியிட வேண்டும் என்ற ககருத்தினை 17.7.96 அன்று சட்டப்பேரவையில், நிதிநிலை அறிக்கையில் வெளியிட்டேன்.

### தமிழ்நாட்டுப் படேல்

அந்த வாசகத்தில், “அண்ணாவின் பண்பார்ந்த மொழியை மனதில் கொண்டு அனைத்து இயக்கங்களின் மறைந்த தலைவர்களுக்கு மரியாதை செலுத்துவதை இந்த அரசு என்றுமே மறந்ததில்லை. அந்தத் தமிழ்ப்பண்பாடு ஒளிவிடும் முத்தார வரிசையில் ஒன்றாகத்தான் ‘தமிழ்நாட்டுப் படேல்’ எனப்படும் சர்தார் வேதரத்தினம் அவர்களின் நூற்றாண்டு விழா 25.2.97ல் வரும்போது, அவர் நினைவாக அஞ்சல்தலை வெளியிடுமாறு மைய அரசுக்கு எழுதியுள்ளோம்” - என்று பட்ஜெட் உரையிலே நான் குறிப்பிட்டேன்.

15.7.96ல் கடிதம் எழுதி விட்டுத்தான் 17-ந் தேதி பட்ஜெட் உரையிலே அதைக் குறிப்பிட்டேன். ஆனால் எந்த அரசாங்கம் இருந்தாலும் - “சிகப்பு நாடாமுறை” என்ற ஒன்று இருப்பதை இன்னும் யாரும் முழுமையாகத் தவிர்க்கவில்லை என்பதற்கு அடையாளமாக 97-ல் வெளியிடப்பட்டிருக்க வேண்டிய அந்த அஞ்சல் தலை 98-ல்தான் வெளியிடப்படுகிறது.



### மத்திய அரசுக்குக் கடிதம்

இந்த அரசின் சார்பில் மீண்டும் ஒரு கடிதம் 12.3.97ல் மத்திய அரசின் செய்தித்துறை அமைச்சர் ஜெய்பால் ரெட்டி அவர்களுக்கு எழுதப்பட்டது. உடனடியாக அவர் பதில் எழுதினார். "இது பற்றிப் பரிசீலித்து கவனிக்கப்படும்" என்று எழுதினார். பின்னர் மீண்டும் ஒரு நினைவூட்டல் கடிதம் 17.6.97ல் நானே எழுதினேன். அதற்குப் பிறகு 16.7.97ல் மற்றொரு கடிதம் எழுதினேன். பிறகு 10.9.97ல் மற்றொரு கடிதம் எழுதினேன். பிறகு 6.10.97ல் மற்றொரு கடிதம் எழுதினேன்.



இப்படி 'முரசொலியில்' கடிதம் எழுதுவதைப்போல மத்திய அரசுக்கு நாள்தோறும், வாரந்தோறும் கடிதம் எழுதி, பிறகு இப்பொழுது அவர்கள் "25.2.98ல் இந்த நிகழ்ச்சியை வைத்துக்கொள்ளுங்கள்" என்று எனக்கு முதன்மை அஞ்சல் துறைத் தலைவர் மூலமாக அரசுக்கு ஒரு தாக்கீது வந்தது. உடனடியாகப் பெரிய அளவில் விழா நடத்த முடியாது. ஏனென்றால், தேர்தல் நேரத்தில் அரசு விழாக்களைப் பெரிய அளவில் நடத்தக்கூடாது என்கின்ற ஒரு விதிமுறை இருக்கின்ற காரணத்தால் - என்ன செய்வது என்று எண்ணியபோது, எனது வீட்டிலேயே அஞ்சல் தலையை வெளியிட்டுவிடலாம் என்று சொன்னார்கள்.

### விழா நடத்தப் பொருத்தமான இடம்

"இல்லை, இல்லை அந்த அளவிற்குச் சிக்கனம் இருக்கலாம். ஆனால் கஞ்சத்தனம் கூடாது" என்று அவர்களிடத்திலே குறிப்பிட்டு - "இதற்குப் பொருத்தமான இடம் ராஜாஜி மண்டபம்தான். ஏனென்றால், ராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில்தான் வேதரத்தினம் பிள்ளை புகழ் பெற்றார். எனவே, ராஜாஜி மண்டபத்திலேதான் இந்த விழா நடைபெற வேண்டும்" என்று நான் குறிப்பிட்டு, அவ்வாறு இந்த விழா நடைபெறுகிறது.

நேற்று, காலையில்தான் விளம்பரம் செய்யப்பட்டு, அழைப்பிதழ்கூட முறையான அழைப்பிதழாக இல்லாமல், அரைவர்களுக்கும் குறிப்புக்கள் அனுப்பப்பட்டு, தொலைபேசிச் செய்தி சொல்லப்பட்டு இந்த மண்டபம் நிரம்புகின்ற அளவிற்கு நீங்களெல்லாம் வந்திருப்பதற்காக நான் என்னுடைய சார்பிலும், அரசின் சார்பிலும், வேதரத்தினம் பிள்ளை அவர்களின் குடும்பத்தார் சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒன்றை உங்களுக்கு நான் நினைவுபடுத்த வேண்டும். நான் 1957ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலே வெற்றி பெற்று, குளித்தலை தொகுதி சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றிருந்தபோது, என்னோடு நான்கு ஆண்டு காலம் சட்டமன்றத்திலே பணியாற்றியவாகள் - மன்னிக்க வேண்டும் - அவரோடு நான்காண்டு காலம் சட்டமன்றத்திலே பணியாற்றியவன் நான். அப்போது எனக்கும் அவருக்கும் நெருக்கமான பழக்கம் உண்டு. சட்டை அணியாமல் துண்டு மாத்திரம் அணிந்துகொண்டு அந்நாளில் சட்டமன்றத்திலே கலந்துகொண்டவர் அவர்.

### வழிகாட்டியாகத் திகழ்ந்த வேதரத்தினம் பிள்ளை

இன்னொரு சிறப்பு என்னவென்றால்; சட்டமன்றம் நடைபெறுகிற எந்த நாளிலும், ஒருநாள் கூட தவறாமல் மன்றத்திற்கு வரக்கூடியவர்களில் வேதரத்தினம் பிள்ளை ஒருவர் என்று சொன்னால் - அது மிகையாகாது. அது மற்றவர்களுக்கெல்லாம் வழிகாட்டக்கூடிய ஒன்றாக இருந்தது. அவர்கள் 61ஆம் ஆண்டு மறைந்தார்கள். மறைவதற்கு இரண்டு நாளைக்கு முன்புகூட, அவருக்கு உடல்நலம் சரியில்லாமல் இருந்தபோது கூட, அவர் மருத்துவமனையில் இருந்து வந்து சட்டமன்ற நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொண்டார். அப்படிப்பட்ட பெரிய உள்ளம் படைத்தவர் - சமுதாயத்திற்காகத் தொண்டாற்ற வேண்டும் என்று கருதியவர் - பலமுறை சிறைச்சாலைக்குச் சென்றவர் சர்தார் வேதரத்தினம் பிள்ளை.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு அவருக்குச் சொந்தமான நிலம், வேதாரண்யத்தில் 30 அல்லது 40 ஏக்கரா நிலத்தில் அன்னை கஸ்தூரிபாய் நினைவாகக் 'கன்னியா குருகுலம்' ஒன்றைத் தொடங்கினார். அப்படித் தொடங்கியபோது, அந்தக் குருகுலத்திலே சேர்ந்த பெண் ஒரே ஒரு பெண்தான் - நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு! இன்றைக்கு அந்தக் குருகுலத்தில் 2000 பெண்கள் இருக்கின்றார்கள். 50க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் அந்தக் குருகுலத்திலே இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

**"பெரிய உள்ளம் படைத்தவர் - சமுதாயத்திற்காகத் தொண்டாற்ற வேண்டும் என்று கருதியவர் - பலமுறை சிறைச் சாலைக்குச் சென்றவர் சர்தார் வேதரத்தினம் பிள்ளை".**

### மத்திய அரசுக்கு நன்றி

வெளிநாட்டுத் துணிகளைப் புறக்கணிக்க வேண்டும் என்ற காந்தியடிகளின் அன்புக்கட்டளையை ஏற்று சர்தார் வேதரத்தினம் அவர்கள், தாம் கதர் தவிர வேறு எதுவும் உடுத்துவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டது மாத்திரமல்ல; அவர் வெளிநாட்டுத் துணிகள் எல்லாம் விற்கக் கூடிய துணிக்கடை ஒன்றை வைத்திருந்தார். அந்த துணிக்கடையைக்கூட மூடிவிட்டார்கள் என்பது அவரது சீர்மிகுந்த வரலாறாகும். அப்படிப்பட்ட வரலாற்றுக்குரிய பெருமகனை இன்றைக்கு நாம் கவுரவித்திருக்கிறோம். மத்திய அரசு மாநில அரசின் வேண்டுகோளைத் தாமதமாக ஏற்றுக்கொண்டது என்றாலும் கூட, ஏற்றுக்கொண்டதற்காக மத்திய அரசுக்கும், அஞ்சல் துறை அதிகாரிகளுக்கும் இந்தத் துறையை நிர்வகிக்கின்ற அமைச்சருக்கும் தமிழக அரசின் சார்பாக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### தியாகிகளை மறக்காது

இந்த அரசு என்றைக்கும் மதிப்பு மிகுந்த தியாகிகளை மறந்தது கிடையாது. அப்படி மறக்கவில்லை என்பதற்கு

அடையாளமாகத்தான் கோட்டைக்குப் பக்கத்தில் கட்டப்பட்டுள்ள பத்துமாடி கட்டடத்திற்கு "நாமக்கல் கவிஞர் மாளிகை" என்ற பெயரைச் சூட்டியிருக்கிறோம்.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன்; எந்தத் தியாகியாக இருந்தாலும் அவரவர்களுடைய கொள்கைக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சமீபத்தில்கூட, பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு நினைவுச் சின்னம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. தேர்தல் நேரம் என்ற காரணத்தால் 13-ஆம் தேதி அன்று திறக்கப்பட வேண்டிய நினைவுச் சின்னம், விரைவில் இன்னும் ஓரிரு வார காலங்களில் திறக்கப்பட இருக்கின்றது.

பெருந்தலைவர் காமராசர் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைத்தபோது அவருக்கு மிகவும் விருப்பமான கைராட்டையைத்தான் அங்கே அந்த மண்டபத்தின் முகப்பிலே வைத்தோம் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும்.

பெரியாருக்கு நினைவுச் சின்னம் அமைத்தபோது, அவர் புரட்சிக்காரர் என்பதை விளக்குகின்ற வகையிலே, ஒரு கையிலே தீச்சுடரை ஏந்திய வண்ணம் நினைவுச் சின்னம் அமைத்தோம்.

என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு முதலிலே நான் அமைத்த நினைவுச் சின்னம் குடை சின்னம். பலபேருக்கு அவர் நிழலாக இருந்தார் என்பதை விளக்க அந்தக் குடையை நான் அமைத்தேன். ஆனால், பிறகு அது மாற்றப்பட்டுவிட்டது. அதைப் பற்றி நான் பேச விரும்பவில்லை.

## தியாகிகளுக்கு மரியாதை

அதைப்போல ராஜாஜி அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைத்த நேரத்தில், "அந்த ஸ்தூபி முகப்பு எப்படியிருக்க வேண்டும்" என்று கேட்டபோது நான் சொன்னேன் - "ராஜாஜி சக்ரவர்த்தித் திருமகன் என்ற தொடர் எழுதியவர். அவர் ராமரிடத்திலே நல்ல நம்பிக்கையும், சிறந்த பற்றும் கொண்டவர். எனவே அந்தக்கோபுரம் ராமருடைய கிரீடத்தைப் போல் இருக்கவேண்டும்" என்று நானே அந்த மாதிரியை வரைந்து கொடுத்து, அச் சின்னம்தான் அங்கே வைக்கப்பட்டிருக்கிறது.

எனவே, எந்த ஒரு தியாகியைப் பெருமைப்படுத்துவதாக இருந்தாலும், அவரவர்கள் கொள்கைக்கேற்ப, அவர்கள் கொண்டிருந்த பற்றுக்கேற்ப அந்த மரியாதைகள்



## சென்னை பெருநகரம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி வளர்ச்சி...

சென்னை விரைவு ரயில் போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிக்காக நிதிநிலை அறிக்கையிலே ஐம்பது கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1996-97ல் ரூபாய் 247 கோடி செலவில், புறநகர்ப் பகுதிகளில் 20 ஆயிரம் குடியிருப்புகள் கட்டப்பட்டன. 31 நகரங்களை வளரும் மையங்கள் எனத் தேர்ந்தெடுத்து அவற்றுள் 13 மையங்களில் 9 ஆயிரம் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன.

நீலகிரியில் Master Plan திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. உதகமண்டலம் பகுதியில், மிகக்குறைந்த வருமானம் உ [illegible] பிரிவினர் வீடுகட்டுவதற்கான குறைந்தபட்ச இடத்தின் பரப்பளவைக் [illegible] பட்டுள்ளது. கட்டடம் கட்ட உரிமம் வழங்கும் அதிகாரம் இதுவரையில் [illegible] மாற்றி, மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக் [illegible] வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி வளர்ச்சிப் பணி [illegible] ரூபாய் 200 கோடியும் ஏனைய 5 மாநகராட்சிகளுக்கு ரூபாய் 100 கோடியும் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகரை மேம்படுத்த, பெரம்பூர் சுரங்கப்பாதை, இருமருங்கிலும் பாதசாரிகள் நடக்க சுரங்கப்பாதை. பெரம்பூர் குக்ஸ் சாலை மற்றும் பி.பி.சாலை இணைக்கும் இரயில் மேம்பாலம், எழிலகம் அருகில் சுரங்கப்பாதை, நேப்பியர் பாலத்தின் அருகில் இன்னொரு மேம்பாலம், பேசின் பாலம் அருகில் மற்றொரு மேம்பாலம், ஸ்டா்லிங் ரோடு சந்திப்பு அருகில் மேம்பாலம், லஸ் அருகில் சுரங்கப்பாதை, தங்கசாலை மற்றும் பேசின் பாலம் சந்திப்பில் சுரங்கப்பாதை, ஆயிரம் விளக்குப் பகுதியில் அண்ணாசாலையும் திரு.வி.க.சாலையும் சந்திக்கும் இடத்தில் வணிக வளாகம், தியாகராயர் சாலையிலுள்ள பழைய அங்காடிகளைப் புதுப்பித்துப் புதிய அங்காடிகளை உருவாக்குதல், அண்ணாநகர் டாக்டர் விஸ்வேஸ்வரய்யா கோபுரப் பூங்காவில் பொழுதுபோக்கு மையப்பூங்கா, மெரீனா நீச்சல் குளம் அருகில் சங்கீத நீரூற்று, சென்னை ஜார்ஜ்டவுன் பிரகாசம் சாலை லோன்ஸ்கொயர் வாகனம் நிறுத்தும் வசதிக்காக மூன்று மாடிக் கட்டடம், வெளியூர் ஜார்ஜ்டவுன் பேருந்து நிலையம், பிராட்வே நவீனப்படுத்துதல் ஆகிய 15 திட்டங்களை மேற்கொள்ள சென்னை மாநகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நகராட்சிப் பணியாளர்களுக்கு அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிக்காலம் கணக்கிட்டு ஓய்வூதியச் சலுகை தர ஆணையிடப்பட்டுள்ளது.

சென்னை நகரில் மேலும் 550 இடங்களில் குடிநீர்த் தொட்டிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சியின் வெள்ளிவிழா ஆண்டையொட்டி நகரின் வளர்ச்சிக்கு ஐம்பது கோடி ரூபாய் செலவில் புதிய திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தப்படுகின்றன.

# தொழிலாளர் நலன்



தொழிலாளர்களின் தோழனாக விளங்கும் இவ்வரசு, முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முனைப்புமிகு வழிகாட்டுதலில், வெளிப்படையான அணுகுமுறையின் காரணமாகப் பல்வேறு தொழில் தாவாக்களைத் தீர்த்து வைத்திருக்கிறது. 3251 தொழிலாளர்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு, மூடப்பட்டுக் கிடந்த 3 நூற்பாலைகள், மீண்டும் திறக்கப்பட்டன.

★ நிர்வாகச் சிக்கல், தொழிலாளர் தாவா போன்றவைகளின் காரணமாக மூடப்பட்டுள்ள தொழிலகங்களில் பணியாற்றி, வேலையின்றித் தவிக்கும் தொழிலாளர்களின் துயர் துடைப்பு, நிவாரணத் தொகையாக, முன்னர் தீபாவளிக்கு மட்டும் ரூ.400 வீதம் அளிக்கப்பட்டது. இந்நிவாரணத் தொகையை, 1997 - லிருந்து பொங்கலுக்கும் விரிவு ஏற்படுத்திடும் வகையில் முதலமைச்சர் கலைஞரின் ஆணையின் படி, 'முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து' 19,574 தொழிலாளர்களுக்கு ரூ.78,29,600 வழங்கப்பட்டுள்ளது.

★ விவசாயம், தீப்பெட்டித் தொழில், தச்சு மற்றும் கருமார் தொழில், பாலிதீன், பிளாஸ்டிக் தயாரிப்புத் தொழில் போன்ற அமைப்புச் சாரா 60 தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு அரசால், குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதே போன்று, கட்டுமானத் தொழிலாளர்களின் நலன் சிறக்க 'தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் நலத் திட்டம்' 15.6.97 முதல் தமிழகம் முழுவதும் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் செயலாக்கங்களாக, 'விபத்துக் காப்புறுதி, குழந்தைகள் காப்பகம், வருங்கால வைப்பு நிதி, தொழிலாளர்கள் ஈட்டுறுதி மற்றும் ஓய்வூதியம்' முதலிய வழிகாட்டும் திட்டங்கள் நிறைவேற்றப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயனடையும் வகையில், 48,000 தொழிலாளர்கள் இசைவளித்துப் பதிவு செய்துகொண்டுள்ளனர். இத்தகு கட்டுமானத் தொழிலாளர்கள் பணியில் இறக்க நேரிட்டால், குடும்பத்தினருக்கு உதவித் தொகையாக ரூ.50,000 வழங்கப்படுவதுடன், ஈமச்சடங்கிற்கு ரூ.500 வழங்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

★ பீடித்தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், நிலம் கையகப் படுத்தப்படுவதில் நிலவிய இடர்ப்பாடுகள் களையப்பட்டு, முதற்கட்டமாக, நெல்லை - மேலப்பாளையத்தில் 439 இல்லங்கள் கட்டப்படுகின்றன. பிற மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விரைவில் விரிவாக்கப்படும்.

★ குழந்தைத் தொழிலாளர் முறையை அறவே களைந்திடும் வகையில், ஆய்வுப் பணிகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன; மாநில அளவில் 'கண்காணிப்புக் குழுவொன்றும்', 'குழந்தைத் தொழிலாளர் மாநிலப் புனரமைப்பு - நிதி மற்றும் மாவட்ட அளவிலும், இத்தகு நல நிதியங்கள் உருவாக்கப்பட்டு, 'கல்வியறிவு, விழிப்புணர்வு, தனிப் பள்ளி வசதிகள்' ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழிலாளர் நலன் காக்கும் வகையில், தொழிற் சாலைகள் சட்டத்தின் கீழ் 25,214 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன; இதன் மூலம் 11 இலட்சம் தொழிலாளர்களின் பாதுகாப்பு, அவர்களது நலன் காப்பு உறுதி செய்யப்பட்டுள்ளன. விபத்துத் தடுப்பு அடிப்படையில், பட்டாசுத் தொழிலாளர்கள் 5000 பேருக்குப் பயிற்சிகள் அளிக்கப் பட்டுள்ளன. மேலும், இத்தொழிலாளர்களுக்கான விபத்துக் காப்பு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ், இதுவரையில் 19 இழப்புக்குள்ளான குடும்பங்களுக்கு ரூ.9½ இலட்சம் வழங்கப்பட்டு, அவர்களது இன்னல்கள் களையப்பட்டுள்ளன.

★ அமைப்புச் சாரா தொழிலாளர்களான கல்லுடைப்போர், சுமை தூக்குவோர், கைவண்டி இழுப்போர் போன்றோர் வைப்புநிதி பலனைப் பெறுவதற்கும் ESI பலனைப் பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.



★ முதலைமச்சர் கலைஞரின் தொழில் மயமாக்கும் கொள்கைக்கேற்ப, தொழில் நுட்ப மனித வள மேம்பாட்டின் அடிப்படையில், தொழிற் பயிற்சி நிலையங்களில்லாத 218 ஊராட்சி ஒன்றியங்களில், மூன்றாண்டு களுக்குள் தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்படவுள்ளன. 21 தொழிற் பயிற்சி நிலையங்கள், உலக வங்கி நிதியுதவின் கீழ் ரூ.12.24 கோடியில் நவீனப்படுத்தப் படுகின்றன.

செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

## பெற்ற சுதந்திரத்தைக் காப்போம்

தியாகிகளை எல்லாம் நினைவுகூர்கிற இந்த நேரத்தில், அந்தத் தியாகிகள் அரும்பாடுபட்டுப் பெற்ற சுதந்திரத்தை நாம் அமைதியாகக் காக்கக் கற்றிருக்கிறோமா என்பதை எண்ணிப்பார்த்து - அந்த நேரத்தில்,. நாம் இன்றைக்கு வருத்தப்பட வேண்டிய சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கின்றோம். இந்தியா முழுமையும், குறிப்பாக, தமிழ்நாட்டிலும் குண்டு வெடிக்கின்ற இந்தச் செய்திகள் ஒவ்வொரு நாளும் நம்முடைய காதுகளிலே ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவதைப் போன்ற செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன.

நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்று காலையில் கூட சென்னை மாநரகத்தில், நல்லவேளை ஒரு குண்டு - வெடிக்காமலே எடுக்கப்பட்டுச் செயலிழக்கச் செய்யப்பட்டிருக்கின்றது.

எனவே, இவைகளைத் தடுப்பதற்குக் காவல்துறை மாத்திரமல்ல; மத்திய அரசு மாத்திரமல்ல; பொதுமக்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

## தியாகிகளுக்கு நாம் காட்டும் மரியாதை

தியாகிகளுக்கு நாம் காட்டுகின்ற மரியாதை - அஞ்சல் தலை வெளியிடுவது மாத்திரமல்ல; அமளி மூளாமல் இந்த நாட்டை, தமிழகத்தைத் தொடர்ந்து காப்பாற்றுவது, காத்து வருவதுதான் என்பதை எடுத்துக்கூறி உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.'

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

★

# உணவுப்பொருள் வழங்கலில் ஒப்பற்ற சாதனை

★ குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகளில் எல்லாப் பொருட்களும் எல்லா நாட்களிலும் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது; மூன்று பேர் உள்ள குடும்பத்தினருக்கும் 20 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

★ கிராமப்புறங்களில் அத்தியாவசியப் பண்டங்களை விநியோகிப்பதற்குத் தேவையின் அடிப்படையில் 2,000 புதிய நியாயவிலைக் கடைகள் - பகுதிநேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.



★ தமிழகத்தில் நடமாடும் நியாய விலைக் கடைகள் மற்றும் மகளிரால் நடத்தப்படும் சில்லறை விற்பனை கடைகளையும் சேர்த்து மொத்தம் 23,492 நியாயவிலைக் கடைகளும், 2,580 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் இயங்கி வருகின்றன.

★ வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு 'சிவப்பு' வண்ணத்திலும், ரூ.10 ஆயிரம் மாத வருவாய் உள்ளவர்களுக்கு 'பச்சை' வண்ணத்திலும், இதர குடும்பங்களுக்கு 'மஞ்சள்' வண்ணத்திலும், குடும்பத்தலைவரின் புகைப்படம் ஒட்டிய குடும்ப அட்டைகள், மாநிலத்திலுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் 1998ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் ரூ.1½ கோடி புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும். 1.7.98 முதல் வறியோர் நலன் காக்கும் பொது விநியோகமுறை முழுமையாகச் செயல்படத் தொடங்கும்.

★ இந்தியாவில், எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் மண்ணெண்ணெய் மட்டும் வழங்கும் நிலையம் மூலம் மண்ணெண்ணெய் வழங்கும் திட்டம் ஒன்றினைத் தமிழக அரசு முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தில் ஒரு மண்ணெண்ணெய் வழங்கும் நிலையத்தில் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலுள்ள 8000 முதல் 10,000 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டு மண்ணெண்ணெய் மட்டும் வழங்கப்படும். அடுத்த ஆண்டிற்குள் இத்தகு 500 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் திறக்கப்படுமென முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

## பொது வினியோக முறையில் உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு:

★ நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர்கள் - உறுப்பினர்கள், நகராட்சி மன்றத் தலைவர்கள் - உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் - உறுப்பினர்கள், பேரூராட்சித் தலைவர்கள் - உறுப்பினர்கள் மற்றும் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் - உறுப்பினர்கள் அவர்களின் எல்லையிலுள்ள நியாயவிலைக் கடைகளைப் பார்வையிட்டு அங்கு முறைகேடுகள் ஏதுமிருப்பின், அவற்றை மாவட்ட மற்றும் வருவாய்க் கோட்ட அளவிலான குழுக்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லலாமென அரசு ஆணையிட்டுள்ளது.

★ நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்களுக்கு, வழங்கப்பட்டு வந்த தொகுப்பூதியமான ரூ.800, ரூ.900ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் சுமைத் தூக்கும் தொழிலாளர்களில், 10 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியோர்களின் பணி நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளன.

## கூட்டுறவில் கூடிவரும் நன்மைகள்:

★ கிராமப் பொருளாதாரத்தின் உயிர்நாடியாக விளங்கும் கூட்டுறவு அமைப்புகளுக்கு, பல்லாண்டுகளாகத் தேர்தலே நடத்தப்படவில்லை; இவ்வரசு பதவியேற்றவுடன் முதலமைச்சர் கலைஞரின் ஆணையின்படி, 23185 கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை 1996லேயே நடத்திக் காட்டியது; தற்பொழுது 2,31,850 தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் கூட்டுறவுச் சங்கங்களின் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர்; மாநிலத்தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விரைவில், தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன.

★ குறுகிய காலப் பயிர்க் கடனுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த, 13% வட்டி என்பது இனிமேல் 12% வட்டியாக விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெறத்தக்க வகையில், 1% வட்டி குறைக்கப்பட்டுள்ளது.

★ கூட்டுறவு ஊழியர்களின் குடும்பப் பாதுகாப்புத் திட்ட உதவித்தொகை ரூ.60,000லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ மத்தியக் கூட்டுறவு வங்கிகள், வேளாண்மை மற்றும் வேளாண்சார்ந்த தொழில்களுக்கு மட்டுமல்லாமல், சமுதாயத்தில் அனைத்துப் பிரிவினருக்கும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் செயற்பாடுகளுக்கொப்ப, அனைத்து வங்கியியல் பணிகளையும், நவீனமயமாக்கப்பட முறைகளில் மேற்கொள்ள வழிவகை செய்யப்படும் என முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

★ கூட்டுறவு வங்கிகளின் மூலம் வழங்கப்படும் தனிநபர் நகைக் கடன் வரம்பு ரூ.40 ஆயிரத்திலிருந்து ரூ.50 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ கரும்பு பயிர்க்கடன் ரூ.45 ஆயிரத்திலிருந்து ரூ.55 ஆயிரமாகவும், இதர பயிர்களுக்கு ரூ.25 ஆயிரத்திலிருந்து ரூ.35 ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டுள்ளன. ★




**ஊ**ட்டச்சத்தும், உடல் நலமும் பிரிக்கமுடியாதவை. உடல்நலம் ஊட்டச்சத்து குறைபாட்டினால்தான் முக்கியமாகப் பாதிக்கப்பட்டு நோய் உண்டாகிறது. மக்கள் நன்றாக இருந்தால்தான், நாடு நன்றாக இருக்கும். மக்கள் ஆரோக்கியமாக இருக்க ஊட்டமான உணவு வேண்டும். நிறையப் பேர் சாப்பிடுகிறோம், அவை நம் உடலுக்குத் தேவையான ஆற்றலைத் தருகிறதா என்று நம்மில் பலர் உணருவதில்லை. சாப்பாட்டில் கவனம் செலுத்தினால், "சாப்பாட்டு ராமர்" பட்டம் கிடைக்கும் என்று சாப்பாட்டை இலட்சியம் செய்வதில்லை. உணவு - அடிப்படை ஆற்றலை வழங்குவதால் நமக்கு அதில் கட்டாயம் அக்கறை வேண்டும். அதில் ஒரு தேசத்திற்கும் சமமான அக்கறை உள்ளது. ஊட்டச்சத்து குறைபாடு நம்மைப்போல் வளரும் நாடுகளில் மக்களின் தரத்தைக் கட்டுப்படுத்துகிறது.

**மக்களுக்கு விழிப்புணர்ச்சி**

மக்களுக்கு அவர்களின் உணவுப் பழக்கத்தை பற்றி விழிப்புணர்ச்சி பெற ஊட்டச்சத்துக் கல்வி மிக அவசியம். அக்கல்வியின் மூலம் ஊட்டச்சத்து பற்றிய அறிவை உருவாக்குவது ஊட்டச்சத்தை எவ்வாறு பெறுவது, அதற்கான வழிகளைக் கற்றுக்கொடுப்பது உடல் நல ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வு சேவை அமைப்புக்களை எவ்வாறு மக்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று எடுத்துரைப்பது ஆகியனவாகும்.

உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியம் ஊட்டச்சத்துக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி 1964-லேயே நடமாடும் உணவு மற்றும் விரிவாக்க செயல்திட்டத்தை ஏற்படுத்தியது. இத்திட்டத்தில் மக்களுக்குப் பிரச்சார சாதனங்களின் மூலம் ஊட்டச்சத்து பற்றிய அறிவுரை வழங்கப்படுகிறது.

வீட்டிலேயே காய்கறிகள் மற்றும் பழங்களைப் பதப்படுத்துதல் ஆகியவற்றை நேரடி செயல்முறை விளக்கங்கள், விரிவுரை, விவாதங்கள், திரைப்படக் கண்காட்சிகள் மூலம் மக்களுக்கு எடுத்துரைத்து ஊட்டச்சத்து பற்றிய விழிப்புணர்வு பரவ அரசுத் துறைகள் செயல்பட்டு வருகின்றன.

**பழங்கள், காய்கறிகளின் முக்கியத்துவம்**

தானிய வகைகளில், பருப்பு வகைகளில் ஏராளமான - தேவையான ஊட்டச்சத்துக்கள் கிடைக்கின்றன. ஆனால், பழங்களும், காய்கறிகளும் ஊட்டச்சத்துக்களை வழங்குவதோடு மட்டுமின்றி உடல்நலத்தையும் காக்கின்றன. இரத்தம், எலும்பு மற்றும் பற்கள் போன்றவற்றின் உருவாக்கத்திற்கும் பல்வேறு உடல் இயக்கங்களை ஒழுங்குப்படுத்துவதற்கும் பழங்களும் காய்கறிகளும் அவசியம் தேவை. இவற்றிலிருந்து கிடைக்கும் ஊட்டச்சத்துக்கள் வைட்டமின் ஏ, சி, பி, காம்ப்ளெக்ஸ் மற்றும் இரும்பு, கால்சியம் போன்ற தாதுக்கள் ஆகியவையாகும். வேரிலிருந்து கிடைக்கும் கிழங்கு வகைகளில் உருளைக்கிழங்கு வள்ளிக்கிழங்கு, மரவள்ளி போன்றவை உடலுக்குச் சக்தி அளிக்கின்றன. நம் உணவின் முக்கியப் பகுதியான நார்ச்சத்தைப் பழங்களும் காய்கறிகளும் வழங்குகின்றன. இது இயல்பான உணவுக்குழாய் இயக்கத்திற்கு உதவி புரிந்து, அதன் மூலம் உடல்நோய்கள் மற்றும் பெருங்குடல் புற்றுநோய் வராமல் தடுக்கின்றது.

பொதுவாக, பழங்கள் விலை உயர்ந்தவை தான். ஆனால் எல்லாக் கனிகளும் எட்டாக் கனிகள் அல்ல. ஊட்டச்சத்து மிக்க பழங்களான கொய்யா, மாம்பழம், வாழைப்பழம், பப்பாளி போன்றவை. அவற்றிற்குரிய பருவத்தின்போது மிக மலிவாகக் கிடைக்கும். கேரட், குளிர்காலத்தில் மலிவாகக் கிடைக்கும். இதில் 'வைட்டமின் ஏ' சத்து கிடைக்கின்றது. புத்துணர்ச்சியும், சக்தியையும் தருவது கேரட், துருவப்பட்ட கேரட் மற்றும் சர்க்கரை அல்லது வெல்லத்துடன் சமைக்கப்பட்ட பூசனி இளம் குழந்தைகளுக்கான முக்கியமான துணை உணவாகும். பச்சையாக உட்கொள்ளப்படும் காய்கறிகளில் 'வைட்டமின் சி' ஏராளமாக உள்ளது. முள்ளங்கி, பச்சைக்கீரை, முட்டைகோஸ் போன்றவை தினசரி நமது உணவில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

பயிர் வகைகள் மற்றும் பீன்ஸ் ஆகியன நம் உணவில் வைட்டமின்கள், தாதுக்கள் நார்சத்து ஆகியவற்றை அளிப்பதோடு புரதச்சத்து முக்கிய ஆதாரமாக விளங்குகின்றன. பழங்கள், காய்கறிகள் கூடியவரை புதிதாக உட்கொள்ள வேண்டும்.

காய்கறிகள் மேற்பகுதிகளின் தோலைக் கூடியவரை மெலிதாக உரிக்கவும். ஏனெனில் பெரும்பகுதி வைட்டமின்களும், தாதுக்களும், பழங்கள் - காய்கறிகளின் தோலுக்குச் சற்றுக் கீழே படிந்துள்ளது. முள்ளங்கி, கேரட், பீட்ருட் ஆகியவற்றின் மேற்புற இலைப்பகுதிகளைத் தூக்கி எறிய வேண்டாம். பொரியல், சாம்பார், சப்பாத்தி, பரோட்டா மற்றும் சாலட்டுகளில் இவற்றைப் பயன்படுத்தவும். வெட்டுவதற்கு முன்னர் பச்சைக் கீரைகளை நன்கு கழுவ வேண்டும். ஒரு போதும் வெட்டிய பின்னர் கழுவக்கூடாது. சிறிதளவு நீரில் சிறிது நேரத்திற்கு மூடப்பட்ட பாத்திரத்தில் காய்கறிகளை வேகவைக்க வேண்டும்.

காய்கறிகளிலேயே முழுமையான ஊட்டச்சத்தைப் பெற மேற்சொன்ன வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

என்ன சாப்பிடுகிறோம் ? எப்படிச் சாப்பிடுகிறோம் ? என்று தெரிந்து சாப்பிட்டால் அது நம் உடலுக்கும் உடல் வளர்ச்சிக்கும் நல்லது. 'ஊட்டச்சத்து' என்ற வார்த்தையைப் பார்த்து மிரள வேண்டாம். அது ஒன்றும் வசதியானவர்கள் வளமாக வாழச் சொல்லப்பட்ட வார்த்தை அல்ல. வறியவர்களும் வளமாக வாழ - நல்ல தரமான உணவுப் பழக்கத்தை மேற்கொள்ள அறிமுகப்படுத்தும் வார்த்தைதான் ஊட்டச்சத்து. ஆம், பாமர மக்களுக்கும் இந்த ஊட்டச்சத்து இனிமேல் ஓர் அறிமுகம்தான்!.

★ ★ ★

# சக்தித் தாண்டவம்

**- பொன்னீலன்**

"அதோ வந்துவிட்டார் அன்னை!" மகிழ்ச்சி தாங்காமல் நந்திதேவர் போட்ட கூச்சல் பக்கத்துப் பனிச் சிகரங்களிலெல்லாம் எதிரொலித்தது. "ஆம் இறைவா, அதோ பாருங்கள். எருது விழிகளில் ஆனந்தம் தாண்டவமாட அய்யனுக்கு மலையடி வாரத்தைச் சுட்டிக்காட்டினார் அந்த மாட்டுத் தலையர்.

நந்திதேவரின் மகிழ்ச்சிக்குக் காரணம் இருந்தது. தேவியைத் தேடி இரவு முழுவதும் கால் கடுக்கக் காடு நாடெல்லாம் அலைந்து சிரமப்பட்டவர் அவர்தானே? பாவம் அய்யன்! இரவு ஒரு பொட்டு நேரம்கூடக் கண் மூடவில்லை. சாயங்காலமே காணாமல் போய்விட்ட அன்னை எங்கே போனாளோ, என்ன ஆனாளோ என்கிற கவலை ஒரு பக்கம், கணவன் நான் குத்துக் கல்லாய் இங்கே இருக்க, சொல்லாமல் கொள்ளாமல் அவள் பாட்டுக்குக் கிளம்பிப் போய்விட்டாளே என்கிற ஆத்திரம் மறுபக்கம்; என்ன பாடுபட்டுப் போனார்.

> **"ஆண் - பெண் சமத்துவ முழக்கம் மண்ணுலகில் மட்டும்தானா? விண்ணுலகிலும் கேட்கிறது!"**

''ஸ்ஸ்ஸ்! இரையாதே''! தீச்சுடர் போன்ற தன் ஆட்காட்டி விரலை உதட்டில் அழுத்தியபடி நந்தியைக் கடுமையாகப் பார்த்தார் முக்கண் மூர்த்தி. திருக்கயிலாயமலை உச்சியில் ஒரு பனிப்புற்றின் பின்னால் மறைந்து நின்று கொண்டிருந்தார் அவர். அவர் பின்னால் கயிலாயமலையின் பனிக்குகை மாளிகை.... ஆணும் பெண்ணுமான சிவலோக வாசிகள்... காலை வெயிலில் பனி மூட்டங்கள் விலகி புலனாகிக் கொண்டிருந்தன.

''பார், எவ்வளவு உல்லாசமாக வந்துகொண்டிருக்கிறாள் அந்தப் பெண்!" கோபத்தில் சிவனின் முறுக்கு மீசை துடித்தது. கணவனிடம் அனுமதி பெறாமல் போய்விட்டோமே என்கிற குற்ற உணர்வு துளியாவது இருக்கிறதா அவள் முகத்தில்?"

உண்மைதான். அன்னை தடம் பார்த்து வழி நடக்கும் மரபுக்குரிய பெண்ணாக வரவில்லை. குதூகலம் நிறைந்த சிறுமிபோல அவர் துள்ளிக் குதிக்கிறார். பாறைக்குப் பாறை அலட்சியமாய்த் தாவுகிறார். பூக்களைப் பறித்து ஆசையோடு நுகருகிறார். வண்ணத்துப் பூச்சிகளைத் துரத்திக்கொண்டு ஓடுகிறார்.

"பெண்ணா இவள்! ஓ மாயப்பிசாசு! இவளால் இந்தப் பெண்ணினமே கெட்டுக் குட்டிச்சுவராய்ப் போகப் போகிறது" சிவனின் உதடுகள் இகழ்ச்சியாய் மடிந்தன.

"சிவ சிவ" அதிர்ச்சியில் தன்காளைச் செவிகளைப் பொத்திக் கொண்டார் நந்தி தேவர்.. ''தேவா, அவர் பிரபஞ்சத்தையே பெற்று வளர்க்கும் அன்னை! சக்தியின் ஊற்று! அவளையா இப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"நந்தி!'' விஷக்கறை படிந்த கருப்புப் பற்களைக் கடித்தார் அய்யன். கணவனிடம் கூட சொல்லிக் கொள்ளாமல் இப்படி ஓடிப்போகும் இவளா உலகத்தின் அன்னை? இவளைப் பின்பற்றினால், உலகம் என்ன ஆகும்?" தலையை அவர் மறுத்துக் குலுக்கிய வேகத்தில் கங்கை தாறுமாறாய்ப் பாய்ந்தது. நல்ல பாம்பு சடையைப் பல்லால் கவ்விக் கொண்டு புடலங்காய் போல் தொங்கிற்று.

அய்யன் சொன்னது உண்மைதான். அம்மைக்குக் குதூகலம் அதிகம்தான். கயிலாய மலையின் அடிவாரத்தில், கங்கையின் கரையோரம் தங்கமாய்த் தகதகக்கும் கூழாங் கற்களின் மீது உல்லாசமாகத் தாவித்தாவி மேலே வந்து கொண்டிருந்தார் அவர். நதியின் இரண்டு பக்கமும் ஓங்கி வளர்ந்த தேவதாரு மரக்காடு காற்றில் பாடுகிறது. அந்தப் பாடலுக்கு நடனம் ஆடுவது போல இருக்கிறது அன்னையின் அசைவுகள். கருப்புப் புறாக்களாகப் பாதங்கள் பாறைக்குப் பாறை தாவுவதும் தள்ளாடும் உடலை சமனப்படுத்திக் கொள்வதற்காக இறக்கைகள் போல் கைகள் விரிவதும் மடிவதும்... நூல் இடைநெளிவதும், குழைவதும், காற்றில் கருங்கேசம் மிதப்பதும் அமிழ்வதும்...



அன்னையை இவ்வளவு அழகாக அவர்கள் கண்டு எத்தனை யுகங்கள் ஆகிவிட்டன. நந்திதேவர் நினைவு பின்னோக்கி நகர்ந்தது. அந்தக் கொடிய நாள்! அன்றுதானே அண்ணல் ஊர்த்துவ தாண்டவம் ஆடினார்.. நாணத்தால் காலைத்துதூக்கி ஆடத் தயங்கிய அன்னையை அன்றுதானே அவர் அடிமைப்படுத்தினார்! அன்று முதல் தானே உலகெங்கும் பெண்மை ஆண்மைக்கு அடிமைப்பட்டது. காதல் காமமானது! காதல் கடவுள் எரிந்தே சாம்பலானான்... ஓ.. அந்த நாசமாய்ப் போன அன்றைய நாணத்துக்காக எத்தனை இரவுகள் ஏங்கி ஏங்கிக் கண்ணீர் வடித்திருப்பார் அன்னை!...

அதன்பின் இன்றுதான் நிஜமான புன்னகை மலர்ந்திருக்கிறது அன்னையின் திருமுகத்தில்! நிலைக்குமா இது! வெப்பப் பெருமூச்சு விட்டார் அவர். அய்யனின் கோபத்தையோ நந்தியின் சோகத்தையோ சிறிதும் அறியாமல் துள்ளிக் குதித்து வந்து கொண்டிருந்தார் அன்னை. அன்னையின் சிங்க வாகனமோ அதற்கு ஒரு படி மேலே! பாறைக்குப் பாறை தாவி அது குட்டிக்கரணம் போடுகிறது... "ஆ! இது என்ன, சிங்கம் கருப்பாயிருக்கிறதே? அன்னையின் சிங்கம் தங்க நிறமல்லவா? அது எங்கே போயிற்று? எங்கிருந்து பிடித்து வருகிறார் இந்தக் கரும்பூதத்தை" முணுமுணுத்தார் நந்தி.

கயிலாய மலையின் அடிவாரப் படியை அன்னை நெருங்க நெருங்க அய்யன் கோபம் கொழுந்து விட்டெரிகிறது. அன்னையின் சுதந்திரத் தோற்றம்.. கண்களின் சுதந்திரச் சுடர்... பாம்புக்குப் பதிலாக அவர் கழுத்திலே தொங்கும் பல வண்ண அல்லி மலர் மாலைகள், 'திரிசூலம், ஏந்திய கையில் ஒரு சூலமாக ஒற்றைக் காஷ்மீர் ரோஜா - யாருக்காக அந்த மலரை ஏந்துகிறாள்? காதல் மயக்கத்தில் என்ன பாடலைப் பாடுகின்றார்? என் மயக்கத்தில் மயங்கி என் முயக்கத்தில் உருக வேண்டியவள்... தானாக மயங்கி என் தகுதியைக் குலைக்கிறாளே' ரத்தமாய்ச் சிவந்துவிட்டன அய்யனின் கண்கள். ஆத்திரத்தில் அவர் உடம்பு நடுங்கியது.

"நில் அங்கே, யாரைத் தேடிக் கொண்டு வருகிறாய்?" அய்யனின் இடிக்குரலில் நடுங்கிய வெண்புறாக்கள் தங்கள் குகைக் கூடுகளை விட்டுப் பறந்தன.

அந்தச் சத்தம் காதில் விழுந்ததாகக் கூடக் காட்டிக் கொள்ளவில்லை அன்னை. அதே குழந்தைத்தனம், அதே உல்லாசம், கருஞ் சிங்கத்தின் முதுகில் பாய்ந்து பிடரியைப் பிடித்துக் கொள்ள, அது இரண்டு இரண்டு படிகளாக மேல் தாவிக்கொண்டிருந்தது.

"நில், பதில் சொல்லிவிட்டு மேலே வா. இரவெல்லாம் எங்கே போயிருந்தாய்?"

"மறந்துவிட்டீரா?" சிங்கத்தின் கரும் பிடரியைப் பாசத்தோடு வருடிக் கொடுத்தார் அன்னை. நம் வேலன் வள்ளிக்குத் திருமணநாள் அல்லவா இன்று?"

"வேலன்!" நரநரவென்று பல்லைக் கடித்தார் சிவன். "குறத்தியைக் கட்டி என் குலப்பெருமையைக் கெடுத்த மூடன்! அவன் வீட்டுக்கு யாரைக் கேட்டு விட்டுப் போனாய்?"

அன்னையின் கருநீல வட்ட முகம் நந்திதேவன் பக்கம் திரும்பிற்று.

"ஏன் நந்திதேவா, சொல்லவில்லையா நீ? ஈசனிடம் சொல்லச் சொல்லிவிட்டுத்தானே போனேன்?"

நந்தி தேவர் விழித்தார். எப்படிச் சொல்ல முடியும் அவரால்? மானசரோவர் ஏரியில் தேவமகளிருடன் அய்யன் மாலை முழுவதும் நீராடிக்கொண்டிருந்தார். அதனால் சொல்ல இயலவில்லை என எப்படிப் பதில் சொல்லுவது?

"பொய் சொல்லுகிறாய்!" வலது பாதத்தை அய்யன் தரையில் ஓங்கி மிதித்தபோது கைலாயமே நடுங்கிக் குலுங்கியது! பனிச்சிகரங்கள் நொறுங்கிச் சரிந்தன. "ஒரு இரவு இல்லை. இரு இரவு இல்லை, பல இரவுகளாகவே நீ போய்க் கொண்டுதான் இருக்கிறாய்! சொல், எங்கே போகிறாய்?"

பூவைப் போன்ற தன் வலது பாதத்தைப் படியில் நாட்டிய பாவனையில் லேசாகத் தட்டினாள் தேவி. கலீர் என்ற சதங்கையொலி எழுந்தது. 'இதற்குத்தான்' - முறுவல் பூத்தார் அவர்.

**"தேவா, அவர் பிரபஞ்சத்தையே பெற்று வளர்க்கும் அன்னை! சக்தியின் ஊற்று! அவளையா இப்படிச் சொல்லுகிறீர்கள்?"**

கோபம் தலைக்கு ஏறியது சிவனுக்கு. "கணவனின் அனுமதி பெறாமல் பெண் வெளியே செல்லக் கூடாது. சொல் நீ சென்றது, நாட்டியம் கற்கவா... அல்லது வேறு..?"

"அனுசுயாவிடம் நீங்கள் பிச்சை கேட்கப் போனீர்களே, அது போலப் போகவில்லை நான்!" கலீரென்று அன்னை சிரித்தார். "புதிய கலையைக் கற்றுக் கொள்ளப் போனேன். மனிதருக்கு விடுதலை அருளுகின்ற புதிய கலை அது".

அய்யனின் ஆண்மைச் செருக்கு தீப்பற்றிக் கொண்டது. எரிந்தார் அவர்!.

"நான் ஆடவன். எங்கும் போவேன்! அது என் இஷ்டம்! நீ பெண், கணவனின் அனுமதி பெற்றுத்தான் வெளியே போக வேண்டும். நாட்டியம் பயில்வதற்கென்றாலும் அதுதான் விதி! அதுமட்டுமல்ல, உன் ஆடை மாறியிருக்கிறது. அலங்காரம் மாறியிருக்கிறது! நம் பண்பாட்டை அழிக்கிறாய் நீ!".

"பண்பாட்டை அழிக்கிறேனா?" அன்னையின் முகத்தில் ஒரே கணம் காளி தோன்றினாள். ஆடை என்பது என்ன? முழுமறைப்பும், முழு சுதந்திரமும், முழு அழகும் தரும் புறப்புனைவு தானே அது? இந்தப் புனைவில் என்ன குறை கண்டீர்கள்?".

"சக்தீ"..... தீ எரிந்தது சிவனின் சொற்களில். "கோபத்தை மூட்டி என்னைக் கொடியவனாக்காதே. அன்று பட்ட பாட்டை அதற்குள் மறந்துவிட்டாயா?"

"எப்படி மறப்பேன்!" புளிப்பாக முறுவலித்தாள். அதை மறக்க முடியாததனால் தானே இத்தனையும்!

"அவ்வளவுக்குப் போய் விட்டாயா?" ஆத்திரத்தில் அய்யனின் நீலமணி விம்மிப்புடைத்தது. "நீ பூலோகத்துக்குப் போனது புது நாட்டியம் கற்றுக் கொள்ளத்தான் என்பது எனக்கு ஏற்கெனவே தெரியும்! கணவனை வெற்றி கொள்வதில் மனைவிக்கு அத்தனை ஆர்வமா? என்ன கற்றுக் கொண்டாலும் உன்னால் என்னை வெல்ல முடியாது. தோல்வி உன் பிறவியிலிருக்கிறது பெண்ணே!"

சட்டென்று கூம்பி விட்டது அன்னை முகம். தன் கையிலிருந்த வெள்ளை ரோஜாவைப் பார்த்தார். எத்தனை ஆசையோடு இந்த ரோஜாவைக் கொண்டுவந்தார் அவர். அய்யனிடம் இதைக் கொடுக்க வேண்டும். "நேசா, பல்லாயிரம் ஆண்டுகள் அடிமைத்தனத்துக்குப் பின் மீண்டும் உலகில் சமத்துவமும் காதலும் மலரத் தொடங்கி விட்ட அதைப் பார்த்த பரவசத்தில் இதோ உன்னைத் தேடி நானும் வந்து கொண்டிருக்கிறேன்! ஆயிரக்கணக்கான ஆண்டு அடிமைத் தனத்துக்குப் பின் மீண்டும் நாம் காதலிக்கத் தொடங்குவோம். ஆம், எங்கே சமத்துவம் மலருகிறதோ, அங்கே தான் காதலும் மலரும்... அந்த அற்புத உணர்வின் சின்னமாக அல்லவா இந்த மலரைக் கொண்டு வந்தேன். அது வாடுகிறதே! உலகம் முழுவதும் மீண்டும் காதலும் பெண்மையும் வாடிப்போகுமே? இன்றும் உன், 'நான் கரைந்து நாம்' ஆகவில்லையா? அன்பே, அதோ கிழக்கே மிதக்கும் புதிய சூரியன் பேசுவது கேட்கவில்லையா? தூய பனிச்சிகரங்களில் தவழும் காற்று பாடுவதைக் கேட்கவில்லையா?"

" *சவுக்குக்குப் பதிலாக*
*மலர்ச் செண்டுகள்....*
*புதியபோர் முறையைப்*
*பழகிக் கொள்!*
*வா*
*இருவரும் ஆடுவோம்*
*ஒருவராக!* "

பழுக்கக் காய்ச்சிய இரும்பாய்ச் சிவந்துவிட்டது அய்யன் முகம். இமைகளை முட்டிக்கொண்டு நடு நெற்றியில் புடைத்தது மூன்றாவது கண்.

அன்னையோ தன் மூன்றாவது கண்ணைச் செல்லமாய்ச் சிமிட்டினார் "வா, ஆடவா!"

"நந்திதேவா!" கூச்சலிட்டார் அய்யன். "தட்டடா மேளத்தை! இவள் இன்னும் ஒரு முறை என்னிடம் பாடம் கற்றுக் கொள்ளட்டும்!".

நந்திதேவர் மத்தளத்தை எடுக்க ஓடினார். சிவலோகப் பாடகர்கள் கின்னரங்களையும் மற்றும் கருவிகளையும் தூசுதட்டி தயார் செய்தனர். மற்றுமுள்ளவர்கள் ஆடலுக்கு இடம் விட்டு, முற்றத்தில் வட்டமாய்ச் சூழ்ந்தார்கள்.

*தத்தித்தோம்*
*தகதிமிதோம்*
*தகதிமி தகதிமி தோம்...*

- மத்தளம் முழங்க, கின்னரகங்கள் இசைபாட

தன்பொற்பத் திருக்கழல் கலீரென்று ஒலிக்கத் தரையைத் தட்டி அபய முத்திரை காட்டிப் போட்டியைத் தொடங்கினார் அய்யன்.

தத்தித் தோம்
தகதிமி தோம்
தகதிமி தகதிமி தோம்.
நானே உலகம்
நானே உயிர்கள்
நானே விண்ணும் வெளியும்
நானே யாவும்
என உணர்வீரே
என்னில் எல்லாம்
கரைவீரே!




ஒன்றினில் அனைத்துமே ஒடுங்கிடும் இறுக்கத்தில் தீப்பிழம்பாகச் சுழன்றது அய்யன் உடல்.

திடுமெனக் கருமின்னல் ஒன்று அய்யன் முன்னே துள்ளிக் குதிக்க, அதன் நீலவிழியில் கருணை சுரக்க

*'தத்தித்தோம்*
*தகமிதோம்*
*தோம் தரிகிட*
*திமிதோம்'*

மயில் போலத் துள்ளித் துள்ளி நடந்தார் அன்னை.

" *உலகமும் நானே,*
*உயிர்களும் நானே*
*விண்ணும் வெளியுமே நானே*
*யாவுமே நானே*
*எனை உணர்ந்தேனே*
*யாவுமாய் நான் கரைந்தேனே!*
*அதனால்*
*சமத்துவம் எழுக,*
*சவுக்குகள் ஒழிக,*
*மலர்களைத் தூதராய் விடுக*
*காதல் மாளிகையின்*
*கதவுகள் திறக்கக்*
*கனிந்திடும் பாடலே வருக!* "

அனைத்திலும் ஒன்றென உணர்ந்திடும் விரிவில்
அன்பெனும் மேகமே பொழிக!

கருணைப் புனல்கண்டு சீறிற்று வெம்மை அனல். 'என்னை அணைக்கப் பார்க்கிறாயா?' காட்டுத் தீயாய்ச் சுழன்றார் அய்யன்.

அவர் பாதங்கள் பறவைகளாயின. நெடிய கைகளோ எரியும் ஆன்மாவின் இறக்கைகளாயின. கணந்தோறும் மாறும் கதிரவனின் சாயல்கள் போல் ஆற்றலின் ஆயிரத்தெட்டுச் சாயல்களும் அய்யனின் முகத்தில் மாறி மாறிக் கொப்புளித்தன.

*தீம் தரிகிட தீம் தரிகட*
*தத்தீம் தரிகிட ததீங்கிட*

அய்யன் சுழன்றார். நெருப்புச் சடை முடி எட்டுத் திக்கிலும் பக்கத்துக்கு ஏழாய் பரவிச் சுழன்றது. சுழற்சி வேகத்தில் இளம்பிறை முழுநிலவாய் உருண்டது. தலை சுற்றித்தடுமாறி கங்கை அன்னை கண்ணை மூடிக்கொண்டாள். வாலால் அய்யனின் நீல மணி மிடற்றை இறுக்கியபடி பாம்பும் சுழன்றது.

தீம்தீம் என உடுக்கை ஒலிக்க, ஓ! ஓவென நெருப்பு சிரிக்க, யானைத்தோல் சுழன்று விரிய அய்யன் ஆடியபொழுது, சிகரங்கள் பொடியாயின. நட்சத்திரங்கள் உதிர்ந்து சிதறின. சுடுகாட்டுப் பேய்களெல்லாம் கயிலாயத்தில் குவிந்து கூக்கூவெனக் கூவிக் கூத்தாடின... அந்தக் கூச்சலின் நடுவே அன்னலின் வலதுகால் செங்குத்தாக மேல் உயர்ந்தது. கால் விரல்கள் செவிக் குண்டலத்தைக் சுழற்றித் திரும்பவும் பொருத்தின.

"ஆடு! அல்லது அடிமைத் தனத்தை ஒப்புக் கொண்டு அய்யன் "முன் முழங்கால் போடு!" ஆடவர் கூட்டம் விண்ணதிரக் கை கொட்டியது. ஆண்மை வென்றது ஆண்மை வென்றது அனைத்திலும் தலையாய் நின்றது!

பெண்களோ மருண்டனர், ஆயிரம் ஆயிரம் ஆண்டுத் துன்பங்கள் கொடுமைகள் ஏக்கங்கள். அவர்கள் முகங்களில் கொந்தளித்தன. படிப்படியாக இப்போதுதான் மூச்சுவிடவாவது சலுகை கிடைத்திருக்கிறது. இதையும் இழந்து மீண்டும் பழைய அடிமை நிலையில் அழிவதா!''வேண்டவே வேண்டாம். அன்னையே! போட்டியிலிருந்து விலகிவிடு! அய்யனிடம் மன்னிப்புக் கோரிவிடு. இன்னும் ஒரு முறை தோற்று நாம் அடிமைப்பட்டால் அதை நம்மால் தாங்க இயலாது! கிடைத்திருப்பதில் திருப்திப்படு. போராட்டத்தை விட்டுவிடு".

அன்னையின் கருப்பு நிலா முகத்தில் குறுநகை அரும்புகிறது. பூப்போலச் சொல்லுகிறார்.

புல்லடிமைத்தனம் புதைந்து போகப் புதுயுகம் பிறந்துவிட்டது..

"பெண்களே அஞ்சாதீர்?"

"கொட்டுங்கள்" கலைஞர்களைப் பார்த்து அவர் கைகள் உயர்ந்தன.

"அய்யன் ஆடிய அதே ஆட்டம். ஆனால் தீ ஆடியதற்குப் பதில் இந்தப் பூ ஆடுகிறது. நயத்துடன் இசையுங்கள். நிறைந்த கனிவுடன் தட்டுங்கள்".

முன்னும் பின்னுமாக நடந்து, பக்கவாட்டிலே நகர்ந்து, திடுக்கெனப் பாதங்களைத் தரையில் தட்டி, பந்துபோல உயர்ந்து அன்னை ஆடியபோது அவருடைய இடதுபாதம் ஆகாயத்தில உயர்ந்தது, பாதத்தின் விரல்களில் ரோஜா மலர். விரல்கள் மலரைக் கூந்தலில் சூடிக் குஞ்சத்தைத் திருத்தின. காலை இறக்காமல் கால் பெருவிரலை ஊன்றிய படி அன்னை பம்பரமாய்ச் சுழன்றபோது அண்ட சராசரங்கள் சுழன்றன. மங்கையரின் ஆர்ப்பாட்டத்தில் புதிய சிகரங்கள் முளைத்தன. விண்ணிலே புது நட்சத்திரங்கள் பூத்தன. நின்ற கோலத்திலேயே அய்யனைக் கனிந்து நோக்கினாள் அன்னை!

''போட்டி நல்லது, அடிமைப்படுத்துதல்தான் அருவருப்பானது. வா, மீண்டும் சங்கமிப்போம். உன்னில் பாதியாக அல்ல. நீயும் நானுமான இரு முழுமைகளாக" அதிர்ந்து போன சிவன் அன்னையைப் பார்த்தார், அன்னையின் ஆடையைப் பார்த்தார். கால்களில் சேலை சுற்றி இடுப்பிலே செருகியிருக்கவில்லை அவர்.

"இது என்ன ஆடை?"

"சுரிதார்!" வானத்தில் எழுந்தது புதிய அசரீரி. பெண்மைக்குச் சுதந்திரம் அளிக்கும் சுதந்திர ஆடை. இனி பெண்மை எந்த ஆட்டமும் ஆடும்; யாரும் வெல்ல முடியாது.

''பெண்ணையும் ஆணையும் சமமாக்கிடும் பேய் ஆடை! கிழியுங்கள் அதை!"

கூச்சலிட்டார் அய்யன். பத்து விரல்களையும் விரித்துக் கொண்டு அன்னை மீது பாயத் தயாரனார்.

"நில்"!

இடிமுழக்கம் போல் ஒரு சத்தம். பாய்ந்து வந்த கருஞ்சிங்கம் அய்யனை முறைத்துக் கொண்டு வாலைச் சுழற்றித் தரையில் அடித்தது.

"அன்னையோடு பூமியில் புது விடுதலை பெற்றவன் நான்.

"அடிமைத்தனம் -

அது எந்த வடிவில் வந்தாலும் அழித்தொழிப்பேன்!" அது கர்ஜித்தது.

"என் வாகனம் காளை எங்கே? அதன் கூரிய கொம்பு எங்கே? குத்தடா இந்தக் கருப்பனை" கூச்சலிட்டார் அய்யன். கருப்புச் சிங்கத்தின் கர்ச்சனையில் அரண்டு, அது கயிலாயமலைக் காட்டுக்குள்ளே எங்கோ ஓடிக் கொண்டிருந்தது என்பதை அறியாமல்.

''தோழனே! சொல், நீ செய்யும் எந்தக் காரியம் என்னால் செய்ய இயலாதது? சமத்துவம் தர இன்னும் ஏன் தயக்கம்!" கொஞ்சினார் அன்னை.

என்ன பதில் சொல்லுவது யோசனையில் ஆழ்ந்தார் சிவன். ★



# சாமிநாதர் சகாப்தம்!

**சோழராஜா**

பழம்பெருமை பேசிக்கொண்டிருப்பதில் ஒரு பெருமையும் இல்லை என்றார், மகாகவி பாரதியார். பாகுநிகர் பண்டைத்தமிழ் இலக்கியங்கள் மூலம்தானே நாம் நமது பழம் பெருமைகளையே உணர்கிறோம்?

"ஆம்" என்றால், அவற்றுள் முக்கால்வாசித் தமிழ் இலக்கியங்கள் இன்றும் நம்மோடு நிலைத்துநிற்க மூலகாரணமானவர் - மகாமகோபாத்தியாய, திராவிட வித்யா பூஷணம், மகாவித்துவான், டாக்டர் - என்றெல்லாம் சிறப்புறப் பேசப்படும் 'தமிழ்த்தாத்தா' உ.வே. சாமிநாதையர் அவர்கள்தான்!



இவ்வாறான இணையற்ற புகழ் உ.வே.சா. அவர்களுக்கு வாய்த்திட மூலகாரணம் என்ன தெரியுமா? சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற ஐம்பெருங் காப்பியங்களையும் - பெருங்கதை, சூளாமணி போன்றவற்றையும் பல்வேறு சங்க இலக்கியங்களையும் - ஊர் ஊராக அலைந்து தேடிப்பிடித்து பதிப்பித்த அந்த அரும்பணிதான்!

'கல்கி' அவர்கள் இட்ட செல்லப் பெயரே தமிழ்த் தாத்தா. அவரது காப்பியப் பதிப்புப் பணியின் தொடக்கமாக அமைவது 1887ல் முதன் முதல் வெளியான 'சீவக சிந்தாமணி' பதிப்பேயாகும். அதைத் தொடர்ந்தே - 1892ல் சிலப்பதிகாரமும், 1894ல் புறநானூறும், 1898ல் மணிமேகலையும், 1924ல் பெருங்கதையும் அரும்பாடுபட்டு வெளியிடப்பட்டன.

'தமிழ் வியாசர்' என்று மூதறிஞர் ராஜாஜி அவர்களால் தனிப்படக் குறிப்பிடப்பட்ட உ.வே.சா. அவர்கள், மாயூரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் மாணவராவார்.

அளவு கடந்த புகழ்பெற்ற பின்னாலே, தம் ஆசிரியர் பற்றியோ, குருநாதர் பற்றியோ, தலைவரைப் பற்றியோ, சொல்லிக்கொள்ள விரும்பாதவர்களை இப்போதும் நாம் காண்கிறோம்; ஆனால் இவர் - அத்தகையோருக்கு நேர்மாறானவர்.

சிறுவயதில் சிதம்பரம் பிள்ளை, கஸ்தூரி ஐயங்கார் போன்றோரெல்லாம் - இலக்கணமும், புராணங்களும் இவருக்கு கற்பித்ததுண்டு. செங்கணம் என்ற ஊரில் சின்னப்பண்ணை ரெட்டியார் என்ற புலவரிடம் யாப்பருங்கலக் காரிகையும் கற்றார் உ.வே.சா. எனினும், தாம் பெரிதும் தமிழறிய வழிகாட்டிய ஆசானைப் பற்றி - தாமே எழுதிய 'என் சரித்திரம்' என்ற நூலின் 27ஆம் அத்தியாயத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்:

'பல காலமாகத் தவம்புரிந்து ஒரு தெய்வ தரிசனத்திற்குக் காத்திருக்கும் உபாசகனைப் போல நான் இருந்தேன். அவனுக்குக் காட்சியளிக்கும் அத்தெய்வம்போல் அவர் வந்தார்'...

- இது மட்டுமல்ல; மேலும் அதுபற்றி அவர் எழுதியுள்ளதாவது:

'ஒரு நல்ல காரியத்துக்கு எத்தனைத் தடைகள் உண்டாகின்றன? உறவினர்களில் பலர் நான் சமஸ்கிருதம் படிக்க வேண்டும்; பாகவத இராமாயண உபந்நியாசங்கள் செய்து பிரபலமாக விளங்கவேண்டும் என்று அறிவுரை கூறினர்; வேறு சில நண்பர்களோ, நான் ஆங்கிலம் கற்று, பெரிய உத்தியோகம் பார்த்துப் பொருள் ஈட்ட வேண்டும் என்று விரும்பினர். என் தந்தையோ நான் சங்கீதத்தில் முதன்மை பெறவேண்டும் என்று எண்ணினார்; அதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுத்தார்.

'ஆனால், எல்லாருடைய விருப்பத்துக்கும் மாறாக என் உள்ளம் இளமையிலிருந்தே தமிழ்த் தெய்வத்தின் அழகிலே பதிந்துவிட்டது. தமிழ்த்தாயின் திருவருளைப் பெறவேண்டும் என்ற அவா பெருகியது. சமஸ்கிருதம், ஆங்கிலம், தெலுங்கு இவற்றுள் ஒன்றேனும் என் மனத்தைக் கவரவில்லை. சில சமயங்களில் அவற்றில் வெறுப்புக்கூட வளர்ந்தது. சங்கீதம் என் தந்தை - தாய் வழியில் பரம்பரைத் தொடர்பு பெற்றிருந்ததால், அதில் மட்டும் கொஞ்சம் ஆசை இருந்தது. என் தமிழார்வத்தைக் காட்டிலும் சங்கீத ஆசை குறைவுதான். 'தமிழ், தமிழ், தமிழ்' என்ற உணர்வே என் உள்ளத்தில் பூரணமாக நிறைந்திருந்தது. அதன் ஒரு மூலையில் சங்கீதம் இருந்தது. எந்தச் சமயத்திலும் அந்தச் சிறிய இடத்தையும் கவர்ந்து கொள்ளத் தமிழ் காத்திருந்தது. அதற்கு வாய்ப்பாக அமைந்தது பிள்ளையவர்கள் தரிசனம்'.

- என்றே மிகவும் தெளிவாக அதுபற்றி விவரித்து எழுதியிருக்கிறார்.

உ.வே.சா அவர்களுக்குப் பெற்றோர் வைத்த பெயர் 'வேங்கடராமன்' என்பதாகும். அது அவர் மூதாதையர் பெயர் ஆகையால், வீட்டில் 'சாமா' என்றே சுவாமிமலையில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானின் பெயரால் செல்லமாக அழைக்கப்பட்டார். 'சாமா' என்பது சாமிநாதன் என்ற பெயரின்



## வியத்தகு வெளியீடுகள்

'தமிழ்த் தாத்தா' உ.வே.சா. அவர்கள் முதன்முதல் பதிப்பித்தது சீவக சிந்தாமணி; முதன் முதல் உரையெழுதி வெளியிட்டது மணிமேகலை; கடைசியாகப் பதிப்பித்தது 'மணிமேகலை ஆராய்ச்சி'.

இவற்றுக்கிடையே - புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, ஐங்குறுநூறு, திருவாரூர் தியாகராஜப் பெருமானின் திருவிளையாடல்கள் (360ல் கைக்குக் கிடைத்த) 14 லீலைகள், திருக்காளத்தி புராணம், வேம்பத்தூரார் திருவிளையாடல் புராணம், கந்தபுராணம், திருத்தணிகைப் புராணம், தமிழ்விடு தூது, குறுந்தொகை, குமரகுருபரர் பிரபந்தங்கள் போன்ற பல மூலச்சுவடிகளையும் அங்கிங்கெனாதபடி எங்கும் அலைந்து கண்டுபிடித்துப் பதிப்பித்துப் பெருமை பெற்றார்.

சுருக்கம் என்பதால் - "இனி நான் உன்னைச் சாமிநாதன் என்றே அழைக்கப்போகிறேன்" என்று ஒரு நாள் அவர் குருநாதர் கூற - அப்பெயரே, அதன் பின்னர் இணையற்ற புகழோடு நிலைத்துவிட்டது.

இவருடைய இல்லத்தின் பெயர் 'தியாகராஜ விலாசம்' என்பதாகும். இந்தப் பெயர்க் காரணம் என்ன தெரியுமோ? முதன் முதல் உ.வே.சா. அவர்கள் உருப்படியான வேலைவாய்ப்பைப்பெற மூலகாரணமாக இருந்தவர் வித்துவான் தியாகராஜ செட்டியார் அவர்கள்தான். கும்பகோணம் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த அவர், சாமிநாதனின் தமிழ்ப்புலமை பாராட்டித் தம் இடத்தையே அவருக்கு விட்டுக் கொடுத்து விட்டுப் பதவி விலகிக் கொண்டார். இத்தனைக்கும் அந்த வேலைக்கு மாதச் சம்பளம் ரூ.50 மட்டும்தான்!

சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தினுள் - இப்போதும் நாம் அடக்க ஒடுக்கமாக நிறுத்தப்பட்டுள்ள சாமிநாதரின் திருவுருவச் சிலையினைக் காண்கிறோம்; அடடா! அவருடைய அந்தக் கால்கள்தாம் - தீயினுக்கும், கடல் கோளுக்கும் பலியாகிவிடாதிருந்த பழைய ஓலைச் சுவடிகளைத் தேடி, ஐம்பதாண்டு காலத்திற்கு மேல் அயராமல் நடந்தும், பலன் கருதாமல் பயணம் தொடர்ந்தும் அன்னைத் தமிழுக்கு நலம் சேர்த்திருக்கின்றன! அவர் தன்னலம் கருதாமல் எடுத்துக் கொண்ட அந்த அரிய முயற்சியால்தான் பல பேர் வீட்டில் செல்லரித்துக் கிடந்த - கறையான் பிடித்தது போக மிஞ்சியிருந்த - பரண்மேல் பயனற்றதெனக் கட்டிப் போடப்பட்டிருந்த பழைய பைந்தமிழ் ஓலைச் சுவடிகளெல்லாம் புத்துயிர் பெற்று, நம் தமிழன்னையின் புகழ் மகுடத்து ஒளிக்கற்களாகச் சுடர் வீசுகின்றன.

தமிழன்றிப் பிறமொழி கற்றிட அவ்வளவாக விரும்பாத தகைமையாளர் உ.வே.சா.அவர்கள். என்றாலும்கூட - அகநானூறு, புறநானூறு, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்றவற்றைத் திருத்தமுறப் பதிப்பிப்பதோடு மட்டும் நின்றுவிட்டாரில்லை; ஜைன மத நூலையும், பௌத்த மத நூலையும் கூட ஆய்ந்தறிந்து - அம் மதத்தாரும் 'இவர் அறிஞரே' என்று சம்மதிக்கும் வகையில் பதிப்பித்து வெளியிட்டார்.

இளமையிலேயே மரபுக்கவிதை இயற்றும் திறனும், இசைஞானமும் அமைந்திடப் பெற்றவரான உ.வே.சா.அவர்களுக்குத் திரிகூடராசப்பக் கவிராயரின் 'குற்றாலக் குறவஞ்சி' மிகப் பிடித்திருந்தது; அதேபோல் தேவாரத் திருமூர்த்திகளான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பாடிய தேவாரத்தையும் இசை பிறழாமல் இசைக்கத் தெரிந்திருந்தது.

வாழ்ந்ததும், வளர்ந்ததும் உத்தமதானபுரத்திலும், கும்பகோணத்திலும்தான் என்றாலும் - உ.வே.சா. அவர்கள் வேங்கடசுப்பையா - சரசுவதியம்மாள் மகனாக 19.2.1855ல் சூரியனூர் (தஞ்சை மாவட்டம்) என்கிற சிறுகிராமத்தில் உள்ள தாயார் வீட்டில்தான் பிறந்தார்.

கதாகலட்சேபம் செய்யும் வழக்கமுடையவராக இருந்த தந்தையார், தம் பிள்ளையாண்டானின் இசைப்புலமையை - தமிழ்த்திறத்தை ஊக்குவிப்பவராகவே அமைந்தார்.

பிற்காலத்தில், அவர் மூப்புற்று அதனால், பிரசங்கம் மூலமான வருவாய் குறைந்தபோது, உ.வே.சா.அவர்களையும் உடன் அழைத்துச் சென்று - தனது நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் செய்தது உண்டு.

அக்கால வழக்கப்படி, மதுராம்பாள் என்ற சிறுமியைச் சாமிநாதருக்கு 13 வயது நடக்கும்போதே 16.6.1868ல் மணம் முடித்து வைத்தார்கள் பெற்றோரும் உற்றார் உறவினரும்.

பிற்காலத்தே இவருக்கு ஆசிரியராக வாய்த்த மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தின் அவைக்களப் புலவராக இருந்தவர்; திருசிரபுரத்தில் பிறந்து, மாயூரத்தில் வளர்ந்தவர் ஆவார்.

அவர் மறைவுக்குப் பின் ஆதீனகர்த்தர் சுப்பிரமணிய தேசிகர் அன்பால் அங்கேயே ஆசிரியராக இருந்து நல்ல தொடர்பு கொண்டிருந்தார் சாமிநாதர். அப்போது கும்பகோணத்திற்கு முன்சீஃபாக வந்தார் சேலம் இராமசாமி முதலியார் என்பார். சிறந்த தமிழறிஞரான அவரிடம் ஐயரை அறிமுகம் செய்து வைத்தார் தேசிகர். இது நடந்தது 21.10.1880ல், இந்தச் சந்திப்பே, சாமிநாதரின் வாழ்வில் அரியதோர் திருப்பத்தை உண்டாக்கியதாகும்.

அதுவரை, சமண நூலும், ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றுமான சீவகசிந்தாமணியைப் படித்திராத சாமிநாதர், அவர் சந்திப்பிற்குப் பின்னாலேதான், அதைப் படிக்க வேண்டும்; எப்பாடு பட்டாவது அதுபோன்ற அரிய ஏடுகளைத் தேடிப்பிடித்துப் பதிப்பிக்கவேண்டும் என்கிற உந்துதலுக்கே ஆட்பட்டார்.

அவ்வாறே, திருத்தக்க தேவர் எழுதிய அதனைப் படாத பாடுபட்டுப் படித்தும் பதிப்பித்தும் 'பதிப்புத் துறையின் வழிகாட்டி' என்கிற பெரும் புகழும் பெற்றார். பதிப்புத்துறையில் புதியதோர் சகாப்தத்தையே உருவாக்கினார். ஆதீனத்தாரும் முன்சீஃப் இராமசாமி முதலியாரும் இதற்குப் பொருளுதவினர்.

பழைய சுவடிகளைத் தேடி, தம் சொந்தச் செலவிலேயே பல மாவட்டங்களுக்கும், ஊர்களுக்கும் பயணம் போனார் சாமிநாதர். பல கிராமங்களுக்குக் கால்கடுக்க நடந்து சென்றதும் உண்டு. சிலபேர் தம்மிடமிருந்த சுவடிகளை இனாமாக அவருக்குக் கொடுத்து உதவினர்; சிலபேர் பொருளைப் பெற்றுக்கொண்டு அளித்தனர்; இன்னும் சிலர், பணத்தை வாங்கிக்கொண்டு, 'அனுப்பிவைக்கிறேன்' என்று கூறி ஏமாற்றி விட்டனர். வேறு சிலர் எங்கே - யாரிடம் சுவடி கிடைக்கும் என்று விவரம் கூறி, அன்போடு வழிகாட்டினர்.

அப்படிச் சென்ற இடங்களில் கிடைக்கும் சுவடிகளில் சில, பயனுடையதாக இருக்கும்; சில சுவடிகள் செல்லரித்தும், கரையான் பிடித்தும் இருக்கும்; அரியது கண்டாற் போல் அவற்றைக் கண்டும் ஆனந்திப்பார் சாமிநாதர். சில இடங்களில் "போன ஆடிப் பெருக்கின் போதுதான் ஆற்றிலே விட்டோம்", "சென்ற போகியின் போது தான் தீயிலே போட்டோம்; குளிர் காய்ந்தோம்", "அடுப்பெரித்து விட்டோம்"...என்றெல்லாம் பதில் கிடைக்கும்போது - ஏதோ பெரும் புதையலையே இழந்துவிட்டது போலக் கலங்கிப்போவார் சாமிநாதர்.

அவ்வாறான சுவடி தேடும் முயற்சியின் போது தான், குன்றக்குடி மடத்தில் இருந்து - சிலப்பதிகார மூலமும், மணிமேகலை மூலமும் கிடைத்தது! முதலைப்பட்டியில் புறநானூறு உரை கிடைத்தது. மற்றவைகளும் இவ்வாறே பல்வேறு ஊர்களிலிருந்து கிடைத்தன.

ஒவ்வொரு சுவடியையும் தக்க திருத்தம் செய்து - அது தொடர்பாகக் கிடைத்த மற்ற சுவடிகளோடு ஒப்பிட்டுப் பார்த்துத் தமக்கே சரி என்று பட்டால்தான் பதிப்புக்கே தருவார் சாமிநாதர்.

தமக்கு விளங்காதவற்றை எப்படியாவது சரிசெய்து வெளியிடும் குணம் அவரிடம் இருந்ததில்லை. பல கற்றறிவாளர்களுக்கு அதுபற்றி விளக்கம் கேட்டு எழுதுவார். சரியான விளக்கத்தை யார் அளித்தாலும் ஏற்றுக்கொண்டார் சாமிநாதர்; அப்படிப்பட்ட விளக்கம் கிடைக்காத பட்சத்தில் - 'இறையருள் பாலித்தால் தெளிவாகாத பகுதிகளை அறிந்தவர்களிடம் கேட்டு அடுத்த பதிப்பில் வெளியிடுகிறேன்' என்று குறிப்பிடும் பெருந்தன்மை அவருக்கு இருந்தது.

பெரும்பாலும் அவருடைய புத்தகப் பதிப்புப் பணி யாவும் சென்னையிலேயே நடைபெற்றது.

அதற்காகத் திருவாடுதுறை, குன்றக்குடி, திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர்களும், பாஸ்கர சேதுபதி பாண்டித் துரைத் தேவர் போன்றோரும், பிறரும் சாமிநாதருக்கு நிதியுதவி செய்தது உண்டு; அது தவிரத் தம் உழைப்பு மட்டுமன்றிக் கைப்பொருளையும் அதுவும் போதாத நிலையில் கடன்பெற்றும் தம் நோக்கம் நிறைவேறப் பயன்படுத்தத் தயங்கினாரில்லை!

ஓலைச் சுவடிகளைப் புத்தகங்களாகப் பதிப்பிக்க இவர் படும் பாட்டை உணர்ந்த யாழ்ப்பாணத் தமிழறிஞர் சி.வை.தாமோதரன்பிள்ளை - "சீவக சிந்தாமணியை என்னிடம் கொடுங்களேன்; கொழும்பில் பொருட்செலவிட்டுப் பதிப்பிக்க ஒருவர் தயாராக இருக்கிறார்" என்று நேரில் வந்து கேட்டபோதும் - சாமிநாதர் அப்படித் தர மறுத்து விட்டார். தமிழ் மேம்பாட்டுக்காக எத்தகைய சிரமத்தை ஏற்கவும் இவர் தயாராக இருந்ததே அதற்குக் காரணம். சி.வை.தாமோதரனாரும், சிறந்த பதிப்பாளரேயாவார்.

இவ்வாறாக அன்னைத் தமிழுக்கு அரும்பணி புரிந்துவந்த உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள், 1903ல் திருவாவடுதுறை ஆதீனத் தலைவராக இருந்த ஸ்ரீ அம்பலவாண தேசிகர் அருளாசி பெற்று, தம் பதிப்புப் பணிகளுக்கும் வசதிப்படுமென்று சென்னைக்கு வந்து சேர்ந்தார். சென்னை மாநிலக் கல்லூரித் தமிழாசிரியர் பதவி பெற்றார். திருவட்டீசுவரன் பேட்டையில் மாதம் 20 ரூபாய் வாடகைக்கு ஒரு வீடு பிடித்தார்; பிறகு அதையே சொந்தமாக்கிக் கொண்டார். அந்த வீடுதான் மேலே நாம் குறிப்பிட்ட 'தியாகராச விலாசம்'.

1906ல், 'மகாமகோபாத்யாய' என்கிற சிறப்புப் பட்டத்தைத் தமிழக அரசு அவருக்கு அளித்தது. அப்போது, வேல்ஸ் இளவரசர், குடும்பத்தோடு சென்னை வந்திருந்தார். அவர் வருகையையொட்டி அறிஞர் பலருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன; சாமிநாதருக்கும் தங்கத் தோடா ஒன்று அளிக்கப்பட்டது.



### குறையும் நிறையும்

*வித்வான் தியாகராச செட்டியார், தம் இடத்தில் அமரத் தகுதியானவர் உ.வே.சா. ஒருவரே என்றெண்ணி, அவரைப் பதவியில் அமர்த்தி விட்டுத்தான் குடந்தைக் கல்லூரியினின்றும் ஓய்வு பெற்றார்.*

*அவருடைய கடைசிக் காலத்தில், போய்ப் பார்த்து நலம் விசாரித்தார் உ.வே.சா. "உம்முடைய சீவக சிந்தாமணி முதல் பதிப்பைப் பார்த்தேன்; அற்புதம்; அது வெளிவரத் துணைநின்றோர் பற்றியெல்லாம் நீர் குறிப்பிட்டிருந்ததைப் படித்தேன்; ஆனால் அதில் என் பெயரை விட்டு விட்டீரே..." என்றார் சிறிது வருத்தத்தோடு.*

*அவர் சுட்டிக்காட்டிய தவறுக்கு வருத்தம் தெரிவித்த உ.வே.சா.. அந்தக் குறைபாட்டை ஈடுசெய்யும் விதத்தில், சென்னையில் முதன்முதல் தாம் வாங்கிய இல்லத்திற்குத் 'தியாகராஜ விலாசம்' என்று பெயரிட்டார். 'ஐங்குறுநூறு' -பதிப்பை அவர் பெயருக்கு அர்ப்பணித்தார்; குடந்தைக் கல்லூரியில் பி.ஏ. தமிழ் பயிலும் சைவ மாணவர் ஒருவருக்கு அவர் பெயரால் ஆண்டுதோறும் ரூ.48/. உதவி வந்தார்!*

மாநிலக் கல்லூரி வளாகத்தில் அதன் சார்பாக நடைபெற்ற பாராட்டு விழாவில் மகாகவி பாரதியாரும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது; அது மட்டுமல்ல; சாமிநாதரின் தமிழ்த்தொண்டைப் போற்றி அங்கேயே அவர் உணர்ச்சி வசப்பட்டு எழுதிய மூன்று பாடல்களில் ஒன்று வருமாறு:

*'அன்னியர்கள் தமிழ்ச்செவ்வி அறியாதார்;*
*இன்றெம்மை ஆள்வா ரேனும்*
*மன்னியசீர் மகாமகோ பாத்தியாயப்*
*பதவியினைப் பரிவின்ஈந்து*
*பொன்னிலவு குடந்தைநகர்ச் சாமிநா*
*தன்றனக்குப் புகழ்செய் வாரேல்*
*முன்னிவனப் பாண்டியர்நாள் இருந்திருப்பின்*
*இவன்பெருமை மொழிய லாமோ?'*

- 1932ல், இவருக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் டாக்டர் (டி.லிட்.) பட்டம் வழங்கியது.



## ஓ, அந்தக் கால்கள்!

திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி ஆகிய மூன்று நூல்களையும் ஒன்று திரட்டி "பன்னிரு திருமுறைகள்" என்ற புதிய நூலாக வெளியிட்டார் செங்கல்வராயப் பிள்ளை. அந்த நூலின் பிரதியை உ.வே. சாமிநாதயைரிடம் கொடுத்தார்.

நூலை ஆழ்ந்து படித்துப் பார்த்த உ.வே.சா. திடீரென செங்கல்வராயப் பிள்ளையின் கைகளை எடுத்துத் தம் கண்களில் ஒற்றிக் கொண்டார். பதறிப் போனார் செங்கல்வராயப் பிள்ளை. "என்ன காரியம் செய்கீறீர்கள்" என்று அதிர்ந்துபோய்க் கேட்டார்.

உ.வே.சா. நிதானமாகச் சொன்னார்: "முருகனுடைய பெருமைகளை ஆராய்ந்த கைகளாயிற்றே. அதனால் தான் அந்தக் கைகளை என் கண்களில் ஒற்றிக் கொண்டேன்".

நெகிழ்ந்துபோன செங்கல்வராயப் பிள்ளை அவரிடம் இருந்து விடை பெற்றார். நாலடி முன்னே சென்றவர், திடீரென நின்று திரும்பவும் உ.வே.சாமிநாதையரிடம் வந்தார். நெடுஞ்சாண்கிடையாகப் படுத்து அவரது கால்களைத் தம் கண்களால் ஒற்றிக் கொண்டார்.

இம்முறை பதறியவர் உ.வே.சா. "பிள்ளைவாள், என்ன காரியம் செய்கிறீர்கள்" என்று கேட்டார்.

"சங்க கால இலக்கியங்களைத் தேடித்தேடி அலைந்த கால்களாயிற்றே" என்று கண்ணீர் மல்கக் கூறினார் பிள்ளை.

இந்திய விடுதலைப் போரில் சிறைவாசம் ஏற்றிருந்த தமிழறிஞருமான வ.உ.சிதம்பரனாரும், திருக்குறள் பற்றிய தம் ஐயப்பாடு பற்றி விளக்கம் கேட்டுச் சாமிநாதருக்கு மடல் எழுதியதுண்டு.

1919ல் மாநிலக் கல்லூரித் தமிழாசிரியர் பதவியிலிருந்து சாமிநாதர் பணிஓய்வு பெற்றார். அச்சமயத்தில் சென்னைக்கு வந்திருந்த கவி ரவீந்திரநாத் தாகூர், இவரைப் பற்றி ஏற்கெனவே அறிந்திருந்ததால், அவர் இல்லத்திற்கே சென்று பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்ற காலத்தில் - ராஜா அண்ணாமலை செட்டியார் அங்கே நிறுவிய மீனாட்சி தமிழ்க்கல்லூரிக்குச் சாமிநாதரையே முதல்வராக நியமித்தார். ஆனால், உடல்நலக் குறைவு காரணமாக மூன்றாண்டு காலத்திலேயே அதிலிருந்து விலகி, சென்னைக்கு வந்து சேர்ந்தார் இவர்.

அந்நாளில் தொடங்கப்பட்ட 'கலைமகள்' பத்திரிகையில, அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்கப் புராணங்கள், இலக்கியம் பற்றியெல்லாம் எழுதிவந்தார் சாமிநாதர். 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் "என் சரித்திரம்" என்ற பெயரில் தன் வரலாறும் எழுதிடலானார்.

1937ல் சென்னைக்கு வந்திருந்த காந்தியாருக்குத் தமிழில் இவரெழுதிய வரவேற்புரையே, இந்தியில் மொழி பெயர்த்துத் தரப்பட்டது. அதைப் படித்துணர்ந்த காந்தியடிகள், சாமிநாதரைப் பெரிதும் புகழ்ந்தார்.

1942 ஜனவரியில், கட்டிலிலிருந்து தவறிக் கீழே விழுந்ததால் காலில்பட்ட பலத்த காயத்தால் உடல் நலிவுற்றார் நமது உ.வே.சா.அவர்கள். இரண்டாம் உலகப்போர் நடந்து வந்த வேளையாதலால், சென்னைக் கடற்கரையருகிலும் ஒரு குண்டு விழுந்தது. மக்கள் அதனால் பெரும் பதற்றமடைந்தனர். இதனால் அவரைச் சென்னையிலிருந்து திருக்கழுக்குன்றத்திலே,திருவாவடுதுறை மடத்திற்குச்சொந்தமாயிருந்தஒருகட்டடத்திற்குக் கொண்டுபோய் வைத்துச் சிகிச்சையளித்தார்கள்; பலனில்லை; பைந்தமிழ் வளர்ச்சிக்கு--குறிப்பாகப் பதிப்புத் துறைக்கு முன்னோடியாக இருந்து தனியொரு சகாப்தத்தைத் தோற்றுவித்த 'தமிழ்த் தாத்தா' உ.வே.சாமிநாதையர் அவர்கள் 28.4.1942 அன்று தமது 87ஆம் வயதில் வளையாபதியையும், குண்டலகேசியையும் தேடிப் பதிப்பிக்க இயலவில்லையே என்ற கவலையோடு, தமிழ்த்தாயும் கலங்கிடத் தம் கண் மூடிவிட்டார்.

அதற்குப் பின்னாலே, அவருடைய மகன் கல்யாணசுந்தரத்தின் கோரிக்கையை ஏற்று - திருமதி ருக்மணி அருண்டேல் அவர்கள் உ.வே.சா. பெயரால் சென்னை பெசண்ட் நகரில் உள்ள தமது கலாசேத்ராவில் உருவாக்கிய நூலகத்தில், பதிப்பிக்கப்படாமல் நின்றுபோன மற்ற 939 சுவடிகளையும், குறிப்புகளையும் அடையாறு பிரம்மஞான சபையின் ஒரு பகுதியில் வைத்துப் பாதுகாத்து வருகிறார். இப்போது அங்கே 2123 ஓலைச்சுவடிகளும், 2,203 புத்தகங்களும் உள்ளன. மத்திய அரசும், மாநில அரசும் 'டாக்டர் உ.வே.சா.நூலகத்திற்குப் பேருதவி புரிந்துவருகின்றன.

சென்ற ஆண்டில் அங்கே நிறுவப்பட்ட டாக்டர் உ.வே.சாமிநாதையர் திருவுருவச் சிலை அமைப்பிற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கினார். அவர் பெயரால் அமைந்த நூலகத்திற்கு அளிக்கப்பட்டு வந்த ரூ.60 ஆயிரம் மான்ய நிதியுதவியை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தியும் உத்தரவிட்டார்.

தமிழுள்ளவரை - தமிழ்ப் பதிப்புலகம் உள்ளவரை உ.வே.சா. அவர்களின் பெயரும் புகழும் நிலைத்திருக்கும் என்பது திண்ணம்!

## பாட்டுப் பரீட்சை

குடந்தைக் கல்லூரியில் 1880ல் தமிழாசிரியர் பணிக்கென உ.வே.சா. அவர்கள் சென்றபோது, சீனிவாச ஐயர் என்ற ஆங்கில ஆசிரியர் ஒருவர், அவருக்கோர் சோதனைத் தேர்வு வைத்தார்.

"மகாவித்துவானிடம் நீங்கள் முதலில் படித்தீர்கள்; அடுத்து நான் அவரிடம் படித்திருக்கிறேன். அதனால் நாம் அண்ணன் தம்பி உறவாகிறோம்; எனவே, அண்ணனைப் போன்ற தாங்கள் தங்கள் வேலையை நான் பெற உதவவேண்டும் என்ற கருத்தில் ஐந்து நிமிடத்திற்குள் ஒரு பாடலைப் பாட முடியுமா ?" என்று கேட்டார்.

அதற்குச் சம்மதித்த, சாமிநாதர், நான்கு நிமிஷம் இருபது வினாடியில் பாடிய பாடல் இது:

'வாய்ந்தபுகழ் படைத்திலங்கு மீனாட்சி
சுந்தரநா வலவன் பாலே
ஏய்ந்ததமிழ் ஆய்ந்தமுறைக் கியைவுறநீ
இதுகாறும் இனிதின் வேய
ஆய்ந்தவள நகர்க்குடந்தைக் காவேரில்
நின்னிடமெற் களித்தல் நன்றே
வேய்ந்ததமிழ் முதல்புலமைத் தியாகரா
சப்போர்கொள் மேன்மை யோனே!'

★ ★ ★



# சின்னச் சின்ன இழை பின்னிப்பின்னி வரும் சித்திரக் கைத்தறி

உண்பது, உடுப்பது, உறைவது சார்ந்த தொழில்களில் விவசாயத்திற்கு அடுத்தபடியாகப் பல துறைக்கு வேலைவாய்ப்பு அளித்துவரும் தொழில் கைத்தறித் தொழிலாகும். 1950-60ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் சுமார் 5.5 இலட்சம் கைத்தறிகளும், சற்றொப்ப 20 இலட்சம் கைத்தறியாளர்களும் இத் தொழிலை நம்பி வாழ்ந்துவந்தனர். காலப்போக்கில் ஆலைகளின் கடும் போட்டியும் விசைத்தறியின் வெகுவான வளர்ச்சியும் மக்களின் ரசனையில் ஏற்பட்ட மாற்றங்களும் காலவோட்டத்திற்கேற்ப, கைத்தறித் துணி வடிவமைப்புகளில் விரிவான மாற்றங்களைத் தேவையான அளவிற்கு செய்யாமையாவும், கைத்தறித் தொழில் தளர்வுறத் தொடங்கியது.

தற்பொழுது தமிழகத்தில் உள்ள 4.27 இலட்சம் கைத்தறிகளில், கூட்டுறவின்கீழ் 3.68 இலட்சம் கைத்தறிகள் கொண்ட 1,256 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் மற்றும் 50 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. கைத்தறிச் சங்கங்களில் பருத்தி, பட்டு, பாலியெஸ்டர் செயற்கைப் பட்டுப் போன்ற பலவிதமான நூல் வகைகளைக் கொண்ட துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கூட்டுறவு அமைப்பிலேயே விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என்னும் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என்றும் வகைப்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. துணியின் வகையைப் பொறுத்து சங்கங்களின் எண்ணிக்கை பின்கண்டவாறு உள்ளன:

| | | |
|---|---|---|
| 1. பருத்தி | - | 1031 |
| 2. பட்டு (83) | - | 83 |
| 3. தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் | - | 136 |
| 4. கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் | - | 6 |
| | | 1256 |



கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான அனைத்துப் பருத்தி நூல் வகைகளும் மாநில கூட்டுறவுச் சங்கத்தில் நூல் விற்பனை நிலையங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் உள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளினால் ஆண்டிற்கு 65000 பேல்கள் சிட்ட நூல் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றில் பெருவாரியான அளவிற்குக் கூட்டுறவு நூற்பாலைகள் மாநில சங்கத்திற்கு, கைத்தறி இயக்குநர் அவர்களின் ஒதுக்கீட்டு ஆணைகளின்படி விநியோகிக்கப்படுகின்றன. பிரதம கூட்டுறவுச் சங்கங்களின் தேவைப்பட்டியலை ஒருங்கிணைத்து நூல் தேவையில் 'கோ-ஆப்டெக்ஸ்' முன்கூட்டியே இயக்குநருக்குத் தெரிவிக்கிறது. அதற்கேற்பக் கூட்டுறவு நூற்பாலைகள் வாரியாகவும், நூல் விற்பனை நிலையங்கள் வாயிலாகவும் ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன.

தமிழகத்தில் உள்ள அனைத்துப் பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களும், தேவையான பட்டு நூலினை அரசு பட்டு வளர்ச்சித்துறை கட்டுப்பாட்டிலுள்ள டான்சில்க் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்கின்றன. அரசு ஆணையின்படி பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குத் தேவையான பட்டினை மேற்சொன்ன டான்சில்க் நிறுவனத்திடமிருந்து மட்டுமே பெறமுடியும். மாதம் ஒன்றுக்குப் பட்டுச் சங்கங்களின் பட்டுத் தேவை சுமார் 20,000 கிலோவாகும். ஆண்டு ஒன்றுக்கு 2.40 இலட்சம் கிலோ பட்டு கொள்முதல் செய்யப்படுகின்றன. பட்டுச் சங்கங்களின் மற்றொரு மூலப்பொருளான ஜரிகை அரசு நியமித்துள்ள மத்திய ஜரிகைக் கொள்முதல் குழுவின் மூலமாக விலை நிர்ணயிக்கப்பட்டு, பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் கொள்முதல் செய்யப்படுகின்றன. இக்குழு மாதம் ஒருமுறை கூடி அந்தந்த மாதத்தின் தேவைக்கேற்ப மும்பை மார்க்கெட்டின் தங்கம் மற்றும் வெள்ளி விலையினை அடிப்படையாகக்கொண்டு விலையினை நிர்ணயம் செய்கிறது. தமிழகத்தில் அனைத்து பட்டுக்கூட்டுறவுச் சங்கங்களின் மாதாந்திரத் தேவை சுமார் 20,000 முதல் 25,000 மார்க்குகள் (ஒரு மார்க் என்பது 242 கிராம் கொண்ட 2600 மீட்டர் நீளமுள்ளது) பொன்னிழை. அதில் அரசு நிறுவனமான (காஞ்சீபுரம்) தமிழ்நாடு ஜரிகை ஆலை மாதம் ஒன்றுக்கு 3,500 மார்க்குகள் உற்பத்தி செய்து சங்கங்களுக்கு வழங்கிவருகின்றது. மிகுதி ஜரிகைத் தேவை முழுவதும் மேற்குறிப்பிட்ட கமிட்டியினால் அங்கீகரிக்கப்பட்ட சூரத்திலிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

அனைத்து கூட்டுறவுச் சங்கங்களிலும் பருத்தியில் சேலை, வேட்டி, கைலி, துண்டு, கைக்குட்டை, சிட்டத்துண்டு, தலையணை உறை, திரைச்சீலை, சமக்காளம் போன்ற துணி வகைகளும் பட்டு வகையில் சேலை, வேட்டி மற்றும் அங்கவஸ்திரம் ஆகியனவும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

## தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

நெசவாளர்கள் பலர் சொந்தத் தறியில்லாத காரணத்தால் கூலிக்காகத் தறிமுதலாளிகளின் தறிகளில் வேலை செய்கிறார்கள். இவர்களது நிலைமையை மாற்ற, அரசு தொழிற்கூட அமைப்பில் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கியது. இத்தகைய சங்கங்களில், தறி மற்றும் நெய்வதற்கு நூல் ஆகியன சங்கத்தின் மூலம் நெசவாளர்களுக்கு வழங்கப்படுகிறது. மகளிருக்கான தொழிலியல் திட்டத்தினையும் சேர்த்து, தமிழ்நாட்டின் தற்போது 136 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு, அங்கத்தினர்கள் பயன் அடைந்து வருகின்றனர்.

# வேடந்தாங்கல் - திருவண்ணாமலை சுற்றுலாத்துறை சிறப்பு ஏற்பாடு



சென்னையிலிருந்து 85 கி.மீட்டர் தொலைவிலுள்ள வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்குப் பருவ காலங்களில் பாகிஸ்தான், பங்களாதேஷ், கனடா, அமெரிக்கா என்று வெவ்வேறு நாடுகளிலிருந்து 20,000க்கும் மேற்பட்ட பறவைகள் இறை தேடியும், இனப்பெருக்கம் செய்யவும் வருகின்றன. இந்தப் பறவைகள் சரணாலயத்தைக் கண்டு களிக்கப் போதுமான சுற்றுலாப் பேருந்துகள் இல்லை.

எனவே, சுற்றுலாப் பயணிகளின் நன்மைக்காகவும் அவர்கள் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தை எளிதில் கண்டுகளிக்கவும் சனி மற்றும் ஞாயிறு நாட்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒரு, சுற்றுலாவைத் தொடங்குகிறது. இதற்குக் கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூ.140.காலை 8.00 மணிக்குத் தொடங்கும் இந்தச் சுற்றுலா கிஷ்கிந்தா மற்றும் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் சென்றுவிட்டுச் சென்னைக்கு இரவு 7.00 மணியளவில் திரும்பும்.

## அண்ணாமலை கிரிவலம்

சென்னையிலிருந்து 185 கி.மீட்டர் தூரத்திலுள்ள திருஅண்ணாமலைக்குப் பௌர்ணமி அன்று மட்டும் கிரிவலம் வருவதற்காக ஏராளமான யாத்திரிகர்கள் திருவண்ணாமலை செல்கின்றனர். எனவே, எளிதில் யாத்திரிகர்கள் பௌர்ணமி தினத்தன்று கிரிவலம் வருவதற்கு ஏற்ப, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் ஒரு சுற்றுலாவைத் தொடங்கிறது. இதற்குக் கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூ.150.இந்தச் சுற்றுலா பௌர்ணமி அன்று மதியம் 2.30 மணிக்குச் சென்னையிலிருந்து தொடங்கும். திருவண்ணாமலையில் கிரிவலம் சென்ற பிறகு, விடியற்காலை சென்னையை மீண்டும் அடையும்.

### ஒருங்கிணைந்த கைத்தறி கிராம வளர்ச்சித் திட்டம்

கிராம அடிப்படையிலான பரந்த அணுகுமுறையாகக் கிராமங்களைத் தத்தெடுக்கும் திட்டத்தினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் போதிய அடிப்படை வசதிகளும், சாலை வசதிகளுமில்லாத மிகவும் பின்தங்கிய நிலையிலிருக்கும் கிராமங்களைத் தத்தெடுத்து அக்கிராமங்களில் கைத்தறி மற்றும் மற்ற ஒட்டுமொத்த வளர்ச்சிக்குரிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதுகாறும் 13 (பதிமூன்று) கிராமங்கள் தத்து எடுக்கப்பட்டு, அக்கிராமங்களிலும் வசிக்கும் நெசவாளிகள் மட்டுமின்றி அனைத்துத் தரப்பினரும் பயனடைந்துள்ளனர். தற்போது இத்திட்டம், மைய அரசின் செறிவுத்திட்டத்துடன் இணைக்கப்பட்டு, மாநில அரசும் பங்கேற்று நெசவாளப் பெருமக்களுக்குப் போய்ச்சேரும் வகையில் செயல்படுத்தப்படுகின்றன.

### ஆலை (மில்கேட்) விலையில் நூல் வழங்கும் திட்டம்

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மற்றும் கைத்தறி அமைப்புகளுக்கு ஆலைவாயில் விலையில் 2% குறைத்து நூல் வழங்கும் திட்டம் ஒன்றினைச் சிட்ட நூல் விலை மான்யம் திட்டத்தினை - சில மாற்றங்கள் செய்து மைய அரசு 1997-98ஆம் ஆண்டு முதல் செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கெனத் தேசியக் கைத்தறி வளர்ச்சிக் கழகம் முகவராகச் செயல்படும் வகையில் முறைப்படுத்தப்படுகிறது.

### சலுகை வட்டியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனம்:

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்)க்குச் சலுகை அடிப்படையில் நடைமுறை மூலதனம் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியினால் வழங்கப்படுகின்றது. இதற்கு வங்கி வட்டி விகிதத்திலிருந்து 2.5 விழுக்காடு குறைவாக வட்டி கணக்கிடப்படுகிறது. தேசிய வங்கியின் சலுகை நிதியுதவியினை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மற்றும் மாநிலச் சங்கத்திற்கும் அளித்துவரும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு 3 விழுக்காடும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிக்கு ஒரு விழுக்காடும் வட்டி மானியமாக அரசு தற்சமயம் வழங்கி வருகிறது.

இவ்வாண்டு (1997-98) மாநிலச் சங்கத்திற்கு ரூ.268.29 கோடியும், மற்ற பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.164 கோடி அளவிலும் மாநில மற்றும் மையக் கூட்டுறவு வங்கி மூலமாக நபார்டு வங்கி கடனளவில் அனுமதித்துள்ளது.

ஆண்டுதோறும் நாட்டில் உள்ள அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நபார்டு வங்கி வழங்கும் கடன் அளவில் ஏறத்தாழ 45 சதவீத அளவினைத் தமிழக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்றுப் பயன் அடைகின்றன.

### தள்ளுபடி மான்யம்

கைத்தறித் தொழிலினை ஊக்குவிக்கும் பொருட்டும், விசைத்தறிகளினால் ஏற்படும் போட்டிகளினாலும் கைத்தறி ரகத் துணிகளைத் தங்குதடையின்றி விற்பனை மேற்கொள்ள, தள்ளுபடி மான்யம் வழங்கும் திட்டத்தினை 1950ஆம் ஆண்டு அரசு அறிமுகப்படுத்தியது. அதற்கான செலவினத் தொகையினை "செஸ் நிதி"யிலிருந்து (CESS FUND) வழங்கப்பட்டு வந்தது. பின்னர் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்வது அறிமுகப்படுத்தப்பட்டு, திட்ட ஒதுக்கீட்டிலிருந்து (PLAN SCHEME) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டது. முதன்முதலாக ஆண்டு முழுவதும் 5%

தள்ளுபடி மான்யமும், தீபாவளி, பொங்கல், ரம்ஜான் மற்றும் கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகைக் காலங்களுக்கு 10% தள்ளுபடி மான்யமும் அனுமதிக்கப்பட்டது. பிறகு 1975-76ஆம் ஆண்டு வரை மாநில அரசே தள்ளுபடி மான்யம் தொகை யாவற்றினையும் வழங்கி வந்தது. பின்னர், மாநில அரசும் மத்திய அரசும் 50:50 என்ற விகிதத்தில் சமபங்காக அளவினை ஏற்று மானியம் வழங்கிவந்தன. 1.4.89 முதல், மத்திய அரசு தள்ளுபடி மான்யம் திட்டத்திற்குப் பதிலாக "விற்பனை மேம்பாட்டு உதவித்திட்டம்" என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தின்கீழ் பெறப்படும் மொத்தத் தொகையில் தள்ளுபடி மான்யத்திற்கென 75% விழுக்காடும், எஞ்சிய 25% விழுக்காட்டினைப் பலதரப்பட்ட கைத்தறி மேம்பாட்டு உதவித்திட்டங்களுக்கும் செலவிட்டுக் கைத்தறித் துணிகளின் விற்பனையினை அதிகரிக்கச் செய்யவேண்டுமென்றும் மத்திய அரசு வழிமுறையினை வகுத்துள்ளது. 1989-90ஆம் ஆண்டு வரை ஆண்டிற்கு 90 நாட்களுக்குத் தள்ளுபடி மான்யம் வழங்கப்பட்டு வந்தது. பின்னர் 1990-91ஆம் ஆண்டு அப்போதைய அரசு 100 நாட்களுக்குத் தள்ளுபடி மான்யம் வழங்கப்படுவதாக அறிவிப்பு செய்து 8 மாதங்களுக்கு மாதம் 5 நாள் வீதம் 40 நாட்களுக்கும், பண்டிகைக் கால 4 மாதங்களில் 60 நாட்களுக்கும், தள்ளுபடி மான்யம் வழங்குவதாக அறிவிப்புச் செய்தது.

திட்டத்தின் செயல்பாட்டைச் செய்த அரசு 1.4.97 முதல் ஆண்டு முழுவதும் 10% தள்ளுபடி மான்யம் அனுமதித்து **முதலமைச்சர் கலைஞர்** ஆணையின் படி விற்பனை மேற்கொள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனைக்கும் 10% தள்ளுபடி மான்யம் அனுமதிக்கப்படவேண்டும் என்றும், அதனை 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்குச் சென்றடையும் வகையில் விற்பனை மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் ஆணை பிறப்பித்தது.

பின்னர் நெசவாளர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளைப் பரிசீலித்த அரசு, ஏழை நெசவாளர்களின் நலன் கருதியும், கைத்தறித் துணிகளின் விற்பனையினை அதிகரிக்கச் செய்யவும், ஆண்டு முழுவதும், 20% தள்ளுபடி மான்யம் வழங்கி விற்பனை மேற்கொள்ளத் தற்போது அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அந்த ஆணையின்படி தற்போது பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கைத்தறித் துணி வகைகளுக்கு (ஜனதா மற்றும் ஆயத்த ஆடைகள் தவிர) ஆண்டு முழுவதும் விற்பனையில் 20% தள்ளுபடி மான்யம் அனுமதித்து விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



## இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டம்

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கும், வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கும் மற்றும் கிராமப்புறக் கைவினைஞர்களுக்கும், இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது.

1997 பொங்கல் திருநாளை முன்னிட்டு ரூ.88.49 கோடி மதிப்பில், பொங்கல் திருநாள் மற்றும் தமிழ்ப் புத்தாண்டு '97 ஆகிய இரு கட்டங்களில் 72.75 இலட்சம் சேலைகளும், 68 இலட்சம் வேட்டிகளும் கைத்தறி மற்றும் விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உற்பத்தி செய்து வழங்கப்பட்டன.

1998 பொங்கல் திருநாளுக்கென 72.75 இலட்சம் பெண்கள் மற்றும் 68 இலட்சம் ஆண் பயனீட்டாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்பட்டுள்ளது.

## இலவசச் சீருடை வழங்கும் திட்டம்

1. தமிழ்நாடு அரசின் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் முதலாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு மட்டும் சீருடை வழங்கும் திட்டம் 1985-86ஆம் ஆண்டு தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தொடக்கக் கல்வி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர், நகராட்சி மற்றும் சென்னை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி மாநகராட்சி நிர்வாகத்தின்கீழ் வரும் பள்ளிகளில் பயிலும் சிறார்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைகின்றனர்.

2. மாணவ, மாணவியர்களுக்கு ஒரு 'செட்' சீருடை வழங்கப்படுகிறது.

3. (1996-97 முதல்) தனியாரிடமிருந்து துணிகளைக் கொள்முதல் செய்யாமல் மற்றும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் சீருடைத்துணிகளைப் பெற்றுத் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்புக் கிடைப்பதோடல்லாமல் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர வழிவகுக்கும்.

1996-97ஆம் ஆண்டில் சத்துணவுத் திட்டத்தின்கீழ் ரூ.31.11 கோடி மதிப்பிற்கு 105.44 இலட்சம் மீட்டர் சீருடைத் துணி விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

1997-98ஆம் ஆண்டிற்கும் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த (அரசு ஆணை நிலை எண்.308, சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை, நாள் 28.10.1997)ல் ஆணை வழங்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுவிடும் கல்வியாண்டில் திட்டத்தால் பயன்பெறும் அனைத்துச் சங்கங்களுக்கும் சீருடை சென்றடையும் வகையில் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1997-98ஆம் ஆண்டிற்கு ரூ.46.26 கோடி மதிப்பிற்கு 152.97 இலட்சம் மீட்டர் சீருடைத் துணி விநியோகம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

இதுதவிர, 1997-98ஆம் ஆண்டிற்குப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆகிய துறைகளின் கோரிக்கைப்படி அத்துறைகளின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பயிலும் சிறார்களுக்கும் தேவையான சீருடைத்துணி வழங்க கீழ்க்கண்டவாறு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திற்கு ஆணையிடப்பட்டு விநியோகம் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

| துறையின் பெயர் | வெள்ளை சட்டைத்துணி | தாவணி | நீலநிற கேஸ்மெண்ட் | காக்கி டிரில் |
|---|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை | 36,586 | 19,920 | 24,977 | 22,615 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை | 1,22,939 | 30,956 | 79,654 | 71,906 |
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | 6,81,637 | 2,17,329 | 4,68,989 | 3,79,485 |

## கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் தரமான சாயச்சாலைகள்

1993-94ஆம் ஆண்டு முதல் 1996-97ஆம் ஆண்டு முடிய உள்ள நான்கு ஆண்டுகளில் கைத்தறித் தொழிலில் இருந்துவரும் குறைவான மூலதனத்தினால் ஏற்படக்கூடிய ஆதாரக் குறைவுகளைச் சரிக் கட்டும் போக்கில் கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் தரமான சாயச்சாலைகள் நிறுவுவதற்குரிய செயல்முறைத் திட்டத்தினை மைய அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டமானது கைத்தறித் தொழிலைச் சுயசார்புடையதாகச் செய்யும் வகையில் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய அரசால் தமிழ்நாட்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 303 கைத்தறி வளர்ச்சி மையங்களில், இதுவரை ரூ.14.33 கோடி செலவில் 286 கைத்தறி வளர்ச்சி மையங்களும் ரூ.0.62 கோடி செலவில் 32 தரமான சாயச்சாலைகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

1997-98ஆம் ஆண்டிற்கு மேலும் ரூ.169.86 இலட்சம் மதிப்பீட்டில் 74 கைத்தறி வளர்ச்சி மையங்களும் மற்றும் 7 தரமான சாயச்சாலைகளுக்கான கருத்துருக்கள் மத்திய அரசிற்குப் பரிந்துரைக்கப்பட்டு, அரசின் ஒப்பளிப்பு ஆணை எதிர்நோக்கப்படுகிறது.

## செறிவுத்திட்டம்

கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் பொருட்டும், தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டும் மத்திய அரசின் செறிவுத்திட்டத்தினைத் தமிழக அரசு செயல்படுத்திவருகிறது.

செறிவுத்திட்டமானது துணைத் திட்டங்களான வாணிகம் மற்றும் வாணிகம் சாரா அடிப்படையில் நெசவாளர்களுக்கு விளிம்புத் தொகை வழங்குதல், தொழிற்கூடம், தொழிற்கூடம் மின்மயமாக்குதல், கிடங்கு நிறுவுதல், ஆதரவற்ற நெசவாளர்களுக்கு விளிம்புத் தொகை வழங்குதல், விற்பனை மையங்கள் அமைத்தல், ஒருங்கிணைந்த கைத்தறி கிராம வளர்ச்சித் திட்டம், புதிய தறிகள் மற்றும் தறி உபகரணங்கள் வழங்குதல் மற்றும் புதிய வடிவமைப்புகளைப் புகுத்துதல் போன்ற திட்டங்களை உள்ளடக்கியதாகும். இத்திட்டங்களுக்கான மாநில, மைய நிதியுதவி 50:50 என்ற அடிப்படையில் வழங்கப்படும். தொழிற்கூட கட்டுமானம் மற்றும் ஆதரவற்ற நெசவாளர்களுக்கு விளிம்புத் தொகை வழங்குதல் போன்ற திட்டங்களுக்கான நிதியுதவி முழுவதும் மத்திய அரசினால் மான்யமாக வழங்கப்படுகிறது.



அண்ணா கூட்டுறவு நூற்பாலை

### கடந்த நான்கு ஆண்டுகளில் திட்டத்தின் சாதனை

| வரிசை எண் | ஆண்டு | பயனடைந்த சங்கங்கள் | பயனாளிகள் | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | 1993-94 | 7 | 175 | 10.30 |
| 2. | 1994-95 | 13 | 900 | 38.50 |
| 3. | 1995-96 | 155 | 3,161 | 224.267 |
| 4. | 1996-97 | 274 | 4,996 | 268.996 |

### கிராமப்புறக் கைத்தறி நெசவாளர்களுக்கான திட்டங்கள்:

கிராமப்புறங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் ஆதார வருமானத்தை உயர்த்தும் பொருட்டும், அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காகவும் மத்திய அரசின் ஊரக அமைச்சகம், கீழ்க்கண்ட நான்கு திட்டங்களை அறிவித்துள்ளது.

அ. கைத்தறி நெசவாளர்களுக்குத் தறிகளையும், அதற்கான உபகரணங்களையும் ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்குதல்.

ஆ. ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், கிராமப்புறத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

இ. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி கைத்தறி நெசவாளர்களுக்கு 'இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டத்தின்' கீழ், வீடு கட்டித்தருதல்.

ஈ. 'நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின்' கீழ் கைத்தறி நெசவாளர்களுக்குப் பொது வசதி மையங்கள் கட்டித்தருதல்.

மாநில அரசு, மேற்படி திட்டத்தினைக் கைத்தறி நெசவாளர்களுக்கு பயன்படும் வகையில் ஊரக வளர்ச்சித் துறையும் கைத்தறித் துறையும் இணைந்து செயல்படுத்திட ஆணை பிறப்பித்துள்ளது. இத் திட்டத்தின்கீழ் பயனீட்டாளர்கள், ஊரக வளர்ச்சி முகமை அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களின் உதவியுடன் தேர்வு செய்யப்படுகின்றனர்.

### சேமிப்பு - பாதுகாப்புத் திட்டம்
### குழு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

கூட்டுறவுத் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு 1975-76ஆம் ஆண்டு முதல் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் உள்ள உறுப்பினர்கள் தாம் பெறும் ஊதியத்தில் ரூபாய்க்கு 8 பைசா வீதம் செலுத்தி வருகின்றனர். மைய அரசும் மாநில அரசும் தலா 4 பைசா வீதம் செலுத்துகின்றன. இந்த நிதியின் கூடுதல் தொகைக்கு அரசு 7 விழுக்காடு வட்டி அளிக்கிறது. நெசவாளர் உறுப்பினர்களின் ஆயுள் காப்பீடு செய்யப்பட்டு ஆயுள்காப்பீட்டுக் கழகத்திற்கு மாநில அரசு 2/3 பங்கும் அமைய அரசு 1/3 பங்கும் முனைமத்தொகை செலுத்திவருகின்றன. இத்திட்டத்தின் தொடக்கத்தில் பயன்பெறும் உறுப்பினர்கள் 55 வயதுக்கு முன் இறக்க நேரிட்டால் அவரது சட்டபூர்வ வாரிசுதாரருக்கு ரூ.500 காப்பீட்டுத் தொகையாகவும் 1.3.1980 முதல் ரூ.10,000 ஆகவும் உயர்த்தப்பட்டதோடல்லாமல், வயது வரம்பும் 58ஆக உயர்த்தப்பட்டது. மேலும் 1.10.91 முதல் இக்காப்பீட்டுத் தொகை ரூ.15000க்கு உயர்த்தப்பட்டு இந்த அரசு இதனை ரூ.25,000 ஆக உயர்த்தி ஆணையிட்டுள்ளது. மேலும் வயது வரம்பு 60ஆக தற்போது உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

2. 1992-93ஆம் ஆண்டு முதல் மைய அரசும் இத்திட்டத்தில் பங்கேற்று 1/3 பங்கு முனைமத் தொகையாகச் செலுத்திவருகிறது. எஞ்சியுள்ள 2/3 முனைமத் தொகையினை மாநில அரசு செலுத்திவருகிறது. 31.3.97 வரை இத்திட்டத்தின்கீழ் 91,628 நெசவாளர்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

3. 1997-98ஆம் ஆண்டிற்குக் காப்பீட்டுத் தொகையாக ரூ.1,14,53,500 ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குச் செலுத்தப்படவுள்ளது. மேலும், இக்காலத்திற்குச் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.342.85 இலட்சம் மாநில அரசின் பங்காக வழங்கப்படவுள்ளது.

### சிக்கன நிதித்திட்டம்

இத்திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கு இணையாக மைய அரசினால் 1985-86 முதல் செயல்படுத்தப்பட்டு வருவதாகும். துவக்கத்தில் மைய அரசு, நெசவாளர்கள் அளிக்கப்படும் கூலியில் ரூபாய்க்கு மூன்று பைசா வீதம் அதிக பட்சமாக ஒரு நெசவாளருக்கு ஒரு ஆண்டிற்கு ரூ.90 வீதம் அளித்து வந்தது. இத்திட்டம் 1992-93 முதல் திருத்தியமைக்கப்பட்டு 3 பைசாவிலிருந்து 4 பைசாவாக மைய அரசின் பங்கு உயர்த்தப்பட்டு, அதிகபட்ச உச்சவரம்பான ரூ.90ம் நீக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 1996-97ஆம் ஆண்டில் ரூ.1,40,04,745 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 1997-98ஆம் ஆண்டிற்கு ரூ.399.75 இலட்சத்திற்கு மத்திய அரசிற்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு, தற்போது மைய அரசால் ரூ.150 இலட்சம் விடுவிக்கப்பட்டு மேற்படி தொகை மாநில அரசால் விடுவிக்கப்படவுள்ளது.

### நெசவாளர் வீட்டு வசதி மற்றும் தொழிற்கூடத் திட்டம்

கூட்டுறவின் கீழுள்ள கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி அதிகரித்து மேம்பாடு எய்த அவர்களுக்கு வீடு மற்றும் தொழிற்கூடம் கட்டும் திட்டம் 1979-80ஆம் ஆண்டு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கடன் தொகையும், மாநில அரசு மான்யத் தொகையும் பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. 1985-86ஆம் ஆண்டு முதல் மத்திய அரசும் இத்திட்டத்தில் பங்கேற்று மான்யம் வழங்கி வருகின்றது.

இத்திட்டத்தின்படி இதுகாறும் வழங்கப்பட்டு வந்த நிதியுதவி பின்வருமாறு:

| | 1996-97 வரை | 1997-98 முதல் | |
|---|---|---|---|
| | ரூ. | கிராமப் புறம் (இவ்வாண்டு முதல்) | நகர்ப்புறம் |
| ஹட்கோ கடன் | 25,000 | 25,000 | 5,000 |
| மாநில அரசு மான்யம் | 5,000 | 5,000 | 5,000 |
| மைய அரசு மான்யம் | 14,000 | 18,000 | 20,000 |
| பயன்பெறும் உறுப்பினர் பங்கு | 3,000.00 | 3,000 | 3,000 |
| | 47,000 | 51,000 | 53,000 |

1995-96ஆம் ஆண்டு 1000 தொழிற்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டவும் அரசால் ஆண்டொன்றுக்கு ரூ.190 இலட்சம் மான்யமாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் பங்கு ரூ.140 இலட்சமும், மாநில அரசின் பங்கு ரூ.50 இலட்சமுமாகும். 1996-97ஆம் ஆண்டிற்கு 1000

தொழிற்கூடத்துடனான வீடுகள் கட்ட ரூ.190 இலட்சம் மான்யம் அரசால் வழங்கப்பட்டுப் பயனாளிகளுக்குப் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது. 1997-98ஆம் ஆண்டிற்கு மத்திய அரசின் திருத்தப்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில் 1233 வீடு மற்றும் தொழிற்கூடங்களைக் கட்ட, பயனீட்டாளர்களைத் தேர்ந்தெடுத்து அதற்கான மான்யத் தொகை (கிராமப்புற வீடு மற்றும் தொழிற்கூடம் கட்ட ரூ.18,000 மற்றும் நகர்ப்புற வீடு மற்றும் தொழிற்கூடம் கட்ட, தலா ரூ.20,000 (ரூபாய் இருபதாயிரம்) கோரி அரசுக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மைய அரசு தற்போது முதல் தவணையாக ரூ.11,06,000 அனுமதித்து (50%) ஆணை வழங்கியுள்ளது. மாநில அரசால் கட்டுமானம் செய்து வீடு அளிக்கும் வகையில் செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன.



### கைத்தறி நெசவாளர்களின் நல்வாழ்வு செறிவுத் திட்டம்

இத்திட்டம் 1992-93ஆம் ஆண்டு முதல் மைய அரசின் மான்ய உதவியில் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களுக்காகப் பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது.

1. நெசவுத் தொழிலால் ஏற்படும் நோய் தீர்க்கும் மருத்துவச் செலவினங்களைத் திரும்ப வழங்குதல்

2. கண்சிகிச்சை மற்றும் கண்ணாடி ஆகியவற்றிற்கான செலவுகளைத் திரும்ப வழங்குதல்

3. குடிநீர் வசதி ஏற்படுத்தித் தருதல்

4. மகப்பேறு உதவி

5. குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை

6. ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டுதல்

1992-93ஆம் ஆண்டில் 45 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 64 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க, கிணறு ஒன்றுக்கு ரூ.35,000 வீதம் 22.40 இலட்சமும், 1993-94ஆம் ஆண்டிற்கு 68 நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு 108 ஆழ்துளைக் கிணறு அமைக்க ரூ.37.80 இலட்சமும், 19 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 19 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்ட நிலையம் ஒன்றுக்கு ரூ.1 இலட்சம் வீதம் ரூ.19 இலட்சம் வழங்கப்பட்டு அங்கு வாழும் நெசவாளர்கள் பயனடைந்துவருகிறார்கள்.

1994-95ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்டுள்ள 6 இனங்களுக்கு ரூ.1,16,07,000-ம் 1995-96-ம் ஆண்டில் ரூ.79,84,093- ம் வழங்கப்பட்டுள்ளது.

1997-98ஆம் ஆண்டிற்கு ரூ.1,10,16,331 வழங்க மைய அரசிற்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டதில், தற்போது ரூ.55,08,000 மைய அரசின் ஆணை பெறப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

கூட்டுறவுத் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு இத்திட்டத்தினைத் தமிழக அரசு 1.1.92 முதல் செயல்படுத்தத் துவங்கியது. இத்திட்டத்தினை இந்தியாவிலேயே செயல்படுத்தும் முதல் மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து 5 ஆண்டுகள் முடிவடைந்த எந்த ஒரு நெசவாளரும் சங்க மொத்த உற்பத்தியில் ஒரு குறிப்பிட்ட ரகத் துணியில் சங்க வருடாந்திர உற்பத்தியில் 75% சராசரி உற்பத்தி செய்திருப்பின் அவர் இத்திட்டத்தில் சேரத் தகுதியுடையவராகிறார். இத்திட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர் 58-வயதுக்கு முன் இறக்க நேரிட்டால் அவர் மரணமடைந்த நாளிலிருந்து அவரால் நியமிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர் யாருக்காவது (மனைவி/கணவன்/வயது வராத மகன்/திருமணமாகாத மகள்/விதவை மகள் மற்றும் மருமகள்/தாயார்/தகப்பனார்) பிரதி மாதம் ரூ.250 வீதம் 10 ஆண்டுகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 31.3.97ல் 31,822 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் 30.9.97 முடிய 291 உறுப்பினர்களின் வாரிசுதாரர்கள் ஓய்வூதியம் பெற்றுவருகின்றனர்.

### காட்சியறையை நவீனப்படுத்தல்

இத்திட்டத்தின் கீழ் கைத்தறித் துணிகளின் விற்பனையை மேம்படுத்த நவீன தொழில் நுட்பத்தின் அடிப்படையில் வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் காட்சியறையைப் புதுப்பித்து அழகுபடுத்தும் நோக்குடன் நிதியுதவி வழங்கப்படுகிறது. தேவையிருப்பின் குளிர்பதன வசதிக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் காட்சியறைகளை நவீனப்படுத்த ஆண்டொன்றுக்கு ரூ.50 இலட்சம் வீதம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்நிதி உதவி மைய அரசு மற்றும் மாநில அரசு பங்குடன் செயல்படுத்தப்படும் விற்பனை மேம்பாடு திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

கைத்தறித் துணி விற்பனையை மேம்படுத்தும் நோக்கத்தில் 1997-98ஆம் ஆண்டு 'கோ-ஆப்டெக்ஸ்' வளாகத்தில் உருவாக்கப்பட்டுள்ள விற்பனை வளாகத்தில் பங்கு பெற்றுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.25 இலட்சமும், மாநிலத்தின் மற்ற பகுதியிலுள்ள ஒன்பது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை மேம்பாட்டிற்காக ரூ.25 இலட்சமும் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் 2.43 இலட்சம் பதிவு செய்யப்பட்ட விசைத்தறிகள் இயங்கிவருகின்றன.

## ஓய்வூதியம் அறிவிப்பு

நிதித் (ஓய்வூதியம்) துறையின் 12.6.1997 ஆம் நாளிட்ட 315ஆம் எண் அரசாணையில் திருத்தப்பட்டவாறான நிதித் (ஓய்வூதியம்) துறையின் 31.12.1996 ஆம் நாளிட்ட 762ஆம் எண் அரசாணையில் ஆசிரிய ஓய்வூதியம் பெறுபவர்கள், தமிழ்நாடு பணிநிலை சார்ந்த அனைத்திந்தியப் பணி அதிகாரிகள் ஓய்வூதியம் பெறுபவர்கள் உள்பட, தமிழ்நாடு மாநில அரசு ஓய்வூதியம் பெறுபவர்களைப் பொறுத்தமட்டில், தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் குடும்பப் பாதுகாப்பு நிதித்திட்டத்தை 1.1.1997 முதற்கொண்டு செயல்படுத்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் படி, தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் குடும்பப் பாதுகாப்பு நிதிக்காக ஓய்வூதியம் பெறுபவர்களிடமிருந்து அவர்கள் இறக்க நேரிடும் வரை, மாதம் ஒன்றுக்கு ரூ.20/- சந்தா தொகை பிடித்தம் செய்யப்படும்.

இந்த நிதிக்கு ஓராண்டுகாலம் சந்தா தொகை செலுத்தியபிறகு, ஓய்வூதியம் பெறுபவர் ஒருவர் இறக்க நேரிடில், அவருடைய மனைவி/ கணவன்/நியமனதாரர் சட்டப்படியான வாரிசுக்கு ரூ.25,000/. அளிக்கப்படும். நிதித் (ஓய்வூதியம்) துறையின் 26.12.1997 ஆம் 639 ஆம் எண் அரசாணையில் தமிழ்நாட்டிற்கு வெளியே கருவூலங்கள் / துணைக் கருவூலங்கள் மற்றும் பொதுத்துறை வங்கித் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள், குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்குவதற்கான நடைமுறைகள் குறித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

நிதித்துறையின் (ஓய்வூதியம்) 26.12.1997 ஆம் நாளிட்ட 639ம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின்படி, இத்திட்டத்தில் சேர விருப்பமில்லாத வெளிமாநிலங்களில் ஓய்வூதியம் பெறுபவர்கள், இத்திட்டத்தில் சேர விருப்பமில்லை என்பதை எழுத்து மூலமாக 20.3.1998 அன்று அல்லது அதற்கு முன்பாக, சம்பந்தப்பட்ட கருவூல அதிகாரிகள்/துணைக் கருவூல அதிகாரிகள் அல்லது, பொதுத்துறை வங்கித்திட்டத்தின் கீழ், ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியம் பெறுபவர்களைப் பொறுத்தமட்டில், சம்பந்தப்பட்ட வங்கிகளின் கிளை மேலாளரிடம் அளிக்க வேண்டும். எனவே, ஆசிரிய ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் தமிழ்நாடு பணி நிலையைச் சேர்ந்த அனைத்திந்திய பணி ஓய்வூதியம் பெறுபவர்கள் உட்பட தமிழ்நாடு மாநிலத்திற்கு வெளியே ஓய்வூதியம் பெறும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள், குடும்பப் பாதுகாப்பு நிதித்திட்டத்தில் சேர விருப்பமில்லாதவர்கள், தங்களுடைய விருப்பத்தை, 20.3.1998 அன்று அல்லது அதற்கு முன், சம்பந்தப்பட்ட கருவூல அதிகாரிகளிடம் / துணைக் கருவூல அதிகாரிகளிடம் அல்லது பொதுத்துறை வங்கித்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியம் பெறுபவர்களைப் பொறுத்தமட்டில், சம்பந்தப்பட்ட வங்கிக் கிளை மேலாளரிடமும் எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- இவ்வாறு நிதித்துறையின் சிறப்புச் செயலாளர் திரு.ஆர்.என். சௌபே அறிவித்துள்ளார்.

கூட்டுறவுத் துறையில் உள்ள 50 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 7,659 பதிவு செய்யப்பட்ட விசைத்தறிகள் உள்ளன. இவற்றில் 5,079 விசைத்தறிகள் செயற்பட்டு வருகின்றன. மேற்படி விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அரசின் சிறப்புத் திட்டமான இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் சேலை மற்றும் வேட்டிகளை உற்பத்தி செய்துவருகின்றது. மேற்படி விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 1996-97ஆம் ஆண்டில் 630.26 இலட்சம் மீட்டர் துணி ரகங்கள் ரூ.4318.34 இலட்சம் மதிப்பிற்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசின் இலவச வேட்டி சேலைத் திட்டமும் அடங்கும். மேற்படி உற்பத்தி செய்யப்பட்ட விசைத்தறித் துணி ரகங்கள் 587.38 இலட்சம் மீட்டர் ரூ.5080.40 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### விசைத்தறி நெசவாளர் காப்பீட்டுத் திட்டம்

தமிழகத்திலுள்ள விசைத்தறி நெசவாளர்களுக்குக் காப்பீட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்திடத் தமிழக அரசு தீர்மானித்துள்ளது. இத்திட்டத்தின்படி ஆண்டு ஒன்றுக்கு முகமைத் தொகையான ரூ.120 மத்திய மாநில அரசுக்கும் மற்றும் உறுப்பினரும் சேர்ந்து நிகராக ஆயுள் கழகத்திற்குச் செலுத்த வேண்டும், இதுவரை 755 தகுதியான விசைத்தறி நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்திட்டத்தினைச் செயல்படுத்த விதிமுறைகளை அங்கீகரிக்கக் கோரி அரசுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

விசைத்தறித் துறை - குறிப்பாகத் தனியார் துறையில் கடந்த சில காலங்களில் நல்லதொரு முன்னேற்றப் பாதையில் சென்றுள்ளது. எனினும் கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டம் காரணமாகச் சில மில் துணிகளின் உற்பத்தி குறுகியுள்ளது. பொதுவாக விசைத்தறித் துறைக்குத் துணிகள் பதனிடும் வசதிகள் மிகக் குறைவாக உள்ளது. விசைத்தறித் தொழில் மேம்பாட்டிற்காகப் பழைய பழுதடைந்த தறிகளை மாற்றவும், அரசு உதவியுடன் விசைத்தறி உரிமையாளர்கள் பதனிடும் ஆலைகளை அமைக்கவும் விசைத்தறி நெசவாளர்களுக்கு நீண்டகாலக் கடன்களை வழங்கும் திட்டங்களை வகுக்கவும் ஆவன செய்யப்பட வேண்டும்.

### கூட்டுறவு நூற்பாலைகள்

தமிழ்நாட்டில் 18 கூட்டுறவு நூற்பு ஆலைகள் உள்ளன. அதில், புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை கடந்த 1994 ஏப்ரல் முதல் மூடப்பட்டுள்ளது. இந்த நூற்பாலையை மீண்டும் திறக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக் கூட்டுறவு நூற்பாலைகளில் சுமார் 12,000 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவ்வாலைகள் மூலம் அவற்றின் மொத்த உற்பத்தியில் 50 சதவீதம் கைத்தறித் தொழிலுக்குத் தேவையான சிட்டநூல் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1996-97ஆண்டு (40ஆம் எண்ணுக்கு மாற்றப்பட்டதில்) 205.24 இலட்சம் கிலோ நூல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**கூட்டுறவு நூற்பாலைகளின் கடுமையான நிதிப் பற்றாக்குறையைக் கருத்தில்கொண்டு அரசு கூட்டுறவு நூற்பாலைகளைக் கடன் கொடுத்தார் நெருக்குதலிலிருந்து இடை ஒய்வு அளிக்கும் பொருட்டு, இடருதவி (Relief undertaking) நிறுவனங்களாக அறிவித்தது. கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் புத்துயுரூட்டும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கையில் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு முதல் கட்டமாக வழிவகைக் கடனாக ரூ.15 கோடி வழங்கப்படும் என அறிவித்து, மேற்படித் தொகை கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு ஜனவரி '97-ல் வழங்கப்பட்டது. ஒவ்வொரு ஆலை குறித்தும், விரிவான ஆய்வு நடத்த அரசு முடிவு செய்து, இதற்கென 'இட்காட்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு, அறிக்கை தற்போது பெறப்பட்டுள்ளது. அதன்மீது தக்க நடவடிக்கை**

அறிவுரைக்காக அரசுக்குச் சுற்று அனுப்பப்பட்டுள்ளது. மாதந்தோறும் கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்திறன் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, ஆலைகளின் முன்னேற்றத்திற்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது. நூற்பு ஆலைகளுக்குத் தேவையான தரமான பஞ்சை நியாயவிலையில் 'டான்ஸ்பின் மூலம்' கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூல்கள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு நிர்ணயம் செய்யும் விலைக்கு விற்பனை செய்யப்பட்டு, இலவச வேட்டி சேலை மற்றும் சீருடை போன்ற திட்டங்கள் நல்லமுறையில் செயல்பட உதவிகரமாக உள்ளது.

இத்துறையின் கட்டுப்பாட்டிற்குள் கீழ்க்காணும் நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் செயல்பாடு பற்றிய குறிப்பு பின்வருமாறு:

## தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகள் இணையம், சென்னை

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகள் இணையம் 21.12.94 அன்று தமிழ்நாடு கூட்டுறவு சங்கச் சட்டத்தின் கீழ் 29.12.94-ல் பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவையான மூலப்பொருளான பஞ்சினைப் பதிவு பெற்ற கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிடமிருந்து, அதாவது பிற மாநிலங்கள் உட்பட்டு பஞ்சு கொள்முதல் செய்து தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சினைத் தரமாகவும் மற்றும் நியாயமான விலையில் விநியோகம் செய்யவேண்டும் என்கின்ற சீரிய நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டு இயங்கி வரும் இவ்விணையம் தமிழ்நாடு அரசு அளித்த ரூ.25 கோடி தொகையினை மூலதனமாகக் கொண்டு நிறுவப்பட்ட இணையத்தில் அனைத்துக் கூட்டுறவு நூற்பாலைகளும் மற்றும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் உறுப்பினர்களாக உள்ளனர். இணையம் இன்றைய தேதி வரையில் 76,914 பேல்கள் தரமான மற்றும் நியாயமான விலையில் பஞ்சினைக் கொள்முதல் செய்து, அனைத்துக் கூட்டுறவு நூற்பாலைகளுக்குச் சுழற்சி முறையில் தொடர்ந்து விநியோகம் செய்துவருகிறது. இவ்வாறு விநியோகிக்கப்பட்ட பஞ்சின் மதிப்பு ரூ.76.97 கோடியாகும். இணையம் இவ்வாறு தரமான பஞ்சு கொள்முதல் செய்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கு விநியோகம் செய்ததில் கூட்டுறவு நூற்பாலைகளின் மொத்தப் பஞ்சு கொள்முதலில் சுமார் 20 விழுக்காடாகும். தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வரும் இவ்விணையம் 1994-95 முதல் 1996-97 வரையில் மொத்தம் ரூ.38.96 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. இனிவரும் ஆண்டுகளில் பஞ்சு நிலுவைத் தொகையினை வசூல் செய்வதில் தீவிரப்படுத்தப்பட்டு, அதிகபட்ச தர பஞ்சினைக் கொள்முதல் செய்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி, அவைகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கோ-ஆப்டெக்ஸ்

'கோ-ஆப்டெக்ஸ்' என்று அனைவராலும் அறியப்பட்ட தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 1935-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்தியாவிலேயே மிகப்பெரிய கைத்தறி நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ் 60 ஆண்டுகளுக்கும் மேலாக, தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக வெற்றிகரமாகச் செயலாற்றிவருகின்ற மாநில அமைப்பாகும்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் 1996-97 ஆண்டிற்கான விற்பனை, கொள்முதல், ஏற்றுமதி செய்த வகையில் மதிப்பு பின்வருமாறு:

(மதிப்பு ரூ.கோடியில்)

| ஆண்டு | விற்பனை | கொள்முதல் | ஏற்றுமதி |
|---|---|---|---|
| 1996-97 | ரூ.260 | ரூ.146.56 | ரூ.3.75 |

வேகமாக மாறிவரும் காலத்திற்கேற்ப கோ-ஆப்டெக்ஸ், தனது பாரம்பரியத்தைத் தக்க வைத்துக்கொள்ள, 2001-2002ஆம் ஆண்டில் விற்பனைக் குறியீடான ரூ.100 கோடியை அடைவதற்குப் புதிய அணுகுமுறை வகுக்கப்படவும், வெளி மாநிலங்களில் உள்ள முக்கிய நகரங்களில் பெரிய அளவிலான விற்பனை நிலையங்கள் (Mega Showrooms) திறக்கப்பட உள்ளன.

## தமிழ்நாடு ஜரிகை ஆலை, காஞ்சிபுரம்

தரமான சரிகையினை உற்பத்தி செய்து, நியாயமான விலையில் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்காகத் தமிழ்நாடு ஜரிகை ஆலை, காஞ்சிபுரத்தில் பொதுத்துறை நிறுவனமாக நிறுவப்பட்டது. தமிழ்நாடு ஜரிகை ஆலை தமிழ்நாட்டிலுள்ள பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவையினைப் பெருமளவில் பூர்த்தி செய்துவருகிறது.

தமிழ்நாடு ஜரிகை ஆலையில், கடந்த மூன்று ஆண்டுகளின் செயலாக்கம் கீழ்வருமாறு:

மதிப்பு மற்றும் இலாபம் ரூபாய் இலட்சத்தில்

| வ.எண். | ஆண்டு | உற்பத்தி | | விற்பனை | | லாபம் |
|---|---|---|---|---|---|---|
| | | மார்க் | மதிப்பு | மார்க் | மதிப்பு | |
| 1. | 1994-95 | 26,486 | 671.95 | 26,240 | 665.78 | 32.83 |
| 2. | 1995-96 | 33,613 | 887.38 | 33,665 | 888.79 | 28.07 |
| 3. | 1996-97 | 40,161 | 1050.61 | 39,476 | 1,032.90 | 39.49 |

(ஒரு மார்க் என்பது 240 கிராம்)

கடந்த மூன்றாண்டுகளில் அரசு பங்கு மூலதனத்தில் மீது தமிழ்நாடு ஜரிகை ஆலை செலுத்திய ஈவுத்தொகை பின்வருமாறு:

| வ.எண். | ஆண்டு | அரசு பங்கு (ரூ.இலட்சத்தில்) | ஈவுத்தொகை அறிவிக்கப்பட்டது | ஈவுத்தொகை செலுத்தியது (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | 1994-95 | 13.20 | 20% | 2.64 |
| 2. | 1995-96 | 13.20 | 20% | 2.64 |
| 3. | 1996-97 | 13.20 | 25% | 3.30 |

மேற்படி நிறுவனமானது தற்சமயம் தமிழகத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சரிகைத் தேவையை 20% பூர்த்தி செய்யும் நிலையில் உள்ளது. இவ்வாலையை மேலும் விரிவுபடுத்தி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் முழுத்தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் வெள்ளி இழைநூற்புப் பிரிவை விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.




## தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு

1973-ஆம் ஆண்டு கூட்டுறவு அமைப்பின்கீழ் ஒரு பதனிடும் ஆலையாகத் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை என்ற பெயரில் 6.7.73-ல் பதிவு செய்யப்பட்டு 5.9.73-லிருந்து செயலாற்றி வருகிறது. இவ்வாலை தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பின்கீழ் செயல்படும் ஒரே பதனிடும் ஆலையாகும்.

இவ்வாலையில் ஏ,பி,சி மற்றும் டி ஆகிய நான்கு வகை நிறுவனங்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு ரூ.1,06,30,900 பங்குத் தொகையும் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாலையில் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுமாக மொத்தம் 375 பேர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

## ஆலையின் உற்பத்தித் திறன் (மாதம் ஒன்றுக்கு)

| | | |
|---|---|---|
| 1. சலவை செய்தல் | - | 7,50,000 மீட்டர்கள் |
| 2. சாயம் தோய்த்தல் | - | 4,50,000 மீட்டர்கள் |
| 3. பிரிண்டிங் | - | 1,00,000 மீட்டர்கள் |
| 4. பாலியஸ்டர் பிராசசிங் | - | 3,50,000 மீட்டர்கள் |
| 5. நூல் சாயம் தோய்த்தல் | - | 6,000 கட்டுகள் |

மேற்கண்ட துணிகள் பதனிடுவதற்காக கோ-ஆப்டெக்ஸ், கதர் வாரியம், மத்திய சிறை, கோவை, கர்நாடகா கைத்தறி வளர்ச்சிக் கழகம், பெங்களூர் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து துணிகள் பெறப்பட்டு பதனிடப்பட்டு வருகிறது.

இவ்வாலையானது சென்னை கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்களைப் பெருந்தலைவராகக் கொண்டு 7 நிர்வாகக்குழு உறுப்பினர்களுடன் இயங்கி வருகின்றது. இவ்வாலையில் ரூ.336.12 இலட்சங்களுக்கு மூலதனம் உள்ளது.

இவ்வாலையின் உற்பத்தி விவரம் பின்வருமாறு:

| வ.எண். | விவரம் | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 அக்டோபர் '97 வரை |
|---|---|---|---|---|---|
| 1. | துணிகள் பதனிடப்பட்டவை (மீட்டர்களில்) | 47.17 | 64.54 | 76.94 | 70.87 |
| 2. | நூல் சாயமிட்டது (கிலோ) | 1.90 | 1.42 | 1.48 | 0.68 |
| 3. | பதனிடும் கூலி ஈட்டியது | 355.40 | 329.86 | 459.32 | 456.27 |

1995-96 வரை நட்டத்தில் இயங்கி, செயல்படாமல் இருந்த ஆலை மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தமிழக அரசின் இலவசச் சீருடைத் துணிகளை ஆலையில் முழுஅளவில் பதனிடுவதால், ஆலையானது தற்போது இலாபகரமாக இயங்கி வருகிறது. மேலும் ஆலையில் புதிய இயந்திரங்கள் ரூ.75 இலட்சத்தில் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாலையின் பதனிடும் திறனை நவீனப்படுத்தவும் உற்பத்தியை அதிகரிக்கவும் புதிய இயந்திரங்கள் நிறுவுவதற்கும் ரூ.185 இலட்சத்தில் திட்டம் இடப்பட்டு முதல் கட்டமாக ரூ.1.30 கோடியில் இயந்திரங்கள் வாங்குவதற்கும் கொள்முதல் உத்திரவுகள் அனுப்பப்பட்டுள்ளன. புதிய இயந்திரங்கள் வாங்குவதற்கு ரூ.50 இலட்சங்கள் மானியமாகத் தமிழக அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது. மீதம் தேவையான ரூ.80 இலட்சங்கள் தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்திடம் கடன்பெறப் பிரேரணை அனுப்பப்பட்டு, தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது.

இவ்வாலையானது 1997-98ஆம் ஆண்டு மிகவும் இலாபகரமாக — அதிக உற்பத்தியும் செய்துள்ளது. ★

# தமிழர் நேசன்

**முனைவர் இராம. குருநாதன்**

> *'இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள்' என்னும் பொருள் பற்றி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறையும் டாக்டர் மா.இராசமாணிக்கனார் இதழியல் மையமும் இணைந்து இரு நாட்களில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித் துறையில் நடத்திய கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரை.*

சென்ற இதழ்த் தொடர்ச்சி...

உலோகங்கள் குறித்து அ.மாதவய்யா எழுதிய கட்டுரை தனித்தன்மையுடையது. இது ஆங்கிலத்திலிருந்து தழுவி எழுதப் பெற்றதாகும்.

'ஆதிஆயுர்வேத, சாஸ்திரமும் நுண்ணுயிர் உலகமும்' என்ற கட்டுரை பண்டைக் காலத்தில், ஆயுர்வேதம் எவ்வாறு சிறப்புற்றிருந்தது என்பதைப் பற்றியதாகும்.

**முதல் அறிவியல் பத்திரிகை**

சில அறிவியல் கட்டுரைகளின் தலைப்பே புதுமையாக இருந்துள்ளது. இஃது இப்பத்திரிகையின் உத்திகளில் ஒன்று. ஆலம் பூ / விதை பற்றிய கட்டுரை படிக்கத் தூண்டுவதற்கு ஏற்ப அமைந்துள்ளது அதன் தலைப்பு, 'அத்தி பூத்தாற்போல' என்பதாகும். பயிரியல் பற்றிய கட்டுயையாகும் இது.

'குறிப்புகள்' என்ற பகுதியில் இடம் பெறும் அறிவியல் வினா-விடைகள் ஈர்ப்புடைய வகைகளில் அமைந்துள்ளன. கேள்விகள் ஆவலைத் தூண்டுமாறு உள்ளன. இதுவும் இப்பத்திரிகையின் அழகியதோர் உத்தி. 'நெருப்பிலிடப் பட்ட இரும்பு ஏன் சாம்பலாகப் போவதில்லை?' 'ஆகாயம் நீலமாய்க் காணும்போது மேகங்கள் எங்கே போகின்றன?' 'உறிஞ்சினால் ஜலம் எப்படி மேலே எழுகின்றது?' என்பனபோல் வரும் கேள்விகள் பொது அறிவை இளஞ் சிறாரிடம் வளர்க்க உதவின. அதற்கேற்ற வகையில் கேள்விகள் படிக்கத் தூண்டுவதாய் விளங்கின. அறிவியல் வினா - விடைகளைச் சிறுவரிடம் மேலோங்கச் செய்யவேண்டும் எனக் கருதிய பொ.திரிகூடசுந்தரம் முப்பதாண்டுகளுக்குப் பின் அப்பாவும், மகனும், அறிவுக்கனிகள் போன்ற நூல்களை எழுதுதற்கு இவ்வுத்திமுறை முன்னோடியாக இருந்துள்ளது.

'விஞ்ஞானப் பத்திரிகை' என்று பலராலும் கருதப்பட்டுவந்த இப்பத்திரிகை, அத்தகைய அறிவைத் தமிழர் பெறத் தூண்டுகோலாக இருந்துள்ளது. தொண்ணூற்று நான்கு வயதுவரை வாழ்ந்த பெ.நா.அப்புசாமி, தமிழில் சிறந்த அறிவியல் கட்டுரைகளை எழுதிப் புகழ்பெறுதற்குக் காரணமாயிருந்தது இவ்விதழ்.

**'தமிழர்நேசன்', இவ்வாறு அறிவியல் செய்திகளுக்கே முதன்மை அளித்து வந்ததால், அறிவு சார்ந்தவர்களின் பத்திரிகையாகத் திகழ்ந்தது. தமிழ் இதழ் வழியே தமிழ்மக்களுக்குப் புதிய அறிவியலில் தடம் பதிக்கச் செய்த பெருமை இப்பத்திரிகைக்கு உண்டு. இதுவே** தமிழில் வெளிவந்த முதல் **அறிவியல்** பத்திரிகை யாகும்.

இதழை எவ்வெவ்வகையில் நடத்திச் செல்வது என அ.மாதவய்யாவிற்கு நன்கு தெரிந்திருக்கிறது. அறிவியலுக்கான இதழாக இருந்தும், பல்வேறு துறைகளில் செய்திகள் இடம்பெறுவதையும் பின்னர் இணைத்துக் கொண்டார்.

அறிவியல் மட்டுமன்றித் தமிழ்மொழிக்கும் 'தமிழர்நேசன்' அருங்கொடை நல்கியுள்ளது. தமிழில் அறிவியல் கலைச்சொற்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளமை பாராட்டுக்கு உரியது. உயிரியல், வேதியியியல், இயற்பியல் முதலான அறிவியல் துறை சார்ந்த ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை வழங்கியுள்ளது. அவற்றில் தூய தமிழ்ச்சொற்களைக் காண முடியாவிட்டாலும், அக்கால கட்டத்தில் ஆங்கிலம் கற்றோர் அவற்றை அறிந்து கொள்ள உதவியது. இராசாசி போன்றோரின் ஒத்துழைப்பால் சேலத்தில் தமிழ் அறிவு நூல் சொற்சங்கம் (Tamil Scientific Term Society) இயங்கி வந்ததனைத் தமிழர் கல்விச் சங்கத்தின் தலைவராக இருந்த ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் இப்பத்திரிகையில் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழர் கல்விச் சங்கத்தின் சார்பில் வெளிவந்த இப்பத்திரிகையில், சங்கத்தின் நோக்கத்தைத் தொகுதி ஐந்து - முன்னுரையில் அவர் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

> **தமிழின் மேன்மையையும், தமிழ்மக்களின் நலத்தையும் நாமும், அறிவாளர் பலரும் நல்அறிவைத் தமிழ் வழியே புகட்ட முன்வரும்போது, அவர் புகட்டும் அறிவைத் தமிழ்மக்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறும் செய்வது சங்கத்தின் நோக்கம்**
>
> **(தமிழர் நேசன். தொகுதி V.I)**

**அறிவு நூல்களை அறியச் செய்தலும், தமிழர்க்கு மேனாட்டுச் சாத்திரங்களை அறிமுகப்படுத்தி அவற்றின் வழி தமிழரின் கல்வி அறிவை மேம்படுத்தச் செய்வதும் இன்றியமையாத கடமைகளாகும் என்பதை**

அவரது கூற்று உணர்த்துகிறது. சேலத்தில் நடந்துவந்த தமிழ் அறிவு நூல் சொற்சங்கத்திற்கும் தமிழர்கல்விக் கழகத்திற்கும் நெருக்கமான உறவு இருந்திருக்க வாய்ப்புண்டு. தமிழர் நேசனின் பத்திரிகைப் பொறுப்பாளர்களும், பிறரும், சேலத்தில் இயங்கி வந்த அச்சங்கத்தோடு தொடர்பு கொண்டிருந்ததையும், அச்சங்கப் பணியின் செயற்பாடுகளையும் பற்றிய யாதொரு தகவலையும் விளக்கமாக அறியமுடியவில்லை.

'தமிழர் நேசன்', தமிழ் மொழி பற்றிய சிந்தனைகளுக்கு ஓரளவு முன்னுரிமை கொடுத்துள்ளது. இதனை அவ்வப்போது வெளிவந்த ஓரிரு கட்டுரைகளினின்றும் அறிய முடிகிறது. தமிழ்மொழி குறித்தும், தமிழ்ச் சொற்களஞ்சியம் குறித்தும் ஜே.எஸ்.சாண்ட்லர் எழுதிய கட்டுரைகள் சுட்டிக்காட்டத்தக்கன. தமிழ்ச் சொற்களஞ்சிய ஆக்கத்தின் குழுத் தலைவராக இருந்த அவர், கருத்தாழம் மிக்க மொழித்தொடர்பான சிந்தனைகளை முன்வைத்துள்ளார்.

> **யுத்த காலத்தில் ஆட்களைச் சோதிக்கிறது போல், அகராதி செய்யும் விஷயத்தில் பதங்களைச் சோதிக்கும் வேலை பிரதானமாகவுள்ளது. (தமிழ்நேசன் III; 4)**

– என்று சொற்களைக் கண்டறிந்து அகரமுதலியில் வெளியிடுவது பற்றிச் சுவைபடக் குறிப்பிடும் அவர், பிற சொற்களைத் தமிழ் ஏற்கும் விதத்தை நான்காகப் பகுத்துக் கூறியுள்ளார்.

(1) பூர்வத் தமிழில் பதங்கள் - ஆதியிலிருந்து வழங்குபவை; அவை தமிழாக இருப்பவை.

(2) துணைத் தமிழில் பதங்கள் - வேறு மொழியிலிருந்து நல்ல கருத்துகளைக் கொண்டுவந்து தமிழ்ப்பதங்களோடு ஐக்கியப் படுத்துதல்.

(3) நடுநிலையான தமிழில் பதங்கள் - தமிழ் இலக்கணத்திற்கு மாறுபாடு இல்லாமல் இனிமேல் புதுகருத்துகளைக் கொண்டுவரக்கூடிய இசைவான பதங்களே. அவையெல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது. இசைந்து வராத பதங்களுக்குத் தமிழில் இடமில்லை.

(4) பகையான தமிழில் பதங்கள் - சம்பந்தமில்லாமல் தாறுமாறாக உண்டாக்கக் கூடிய பதங்கள். இவை தமிழ் பாஷைக்குப் பகையாய் உள்ளவை.

என இவ்வாறு வகைப்படுத்திக் கூறியுள்ளமை சான்ட்லர் மேற்கொண்ட பணியில், அவரிடம் இருந்த கடமையுணர்ச்சி, ஈடுபாடு, பொறுப்பு ஆகியவற்றைக் காட்டுவதாகவுள்ளது.

இலக்கியம் தொடர்பான கட்டுரைகளை முதல் ஐந்து தொகுதிகளில் காண்பதரிது. ஐந்தாம் தொகுதியில் கா.சுப்பிரமணிய பிள்ளை திருஞானசம்பந்தரின் தேவாரம் குறித்து எழுதிய கட்டுரை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகையில், பொழுதுபோக்கிற்குரிய செய்திகள் பெரும்பான்மையும் இல. மொழிபெயர்ப்புக் கவிதை, கதை, நாடகம் போன்றவை ஓரளவு இடம்பெற்றுள்ளன. 'தமிழர் செல்வம்' என்ற பகுதி ஒவ்வோர் இதழிலும் வெளிவந்துள்ளது. பண்டைய தமிழ் இலக்கியத்திலிருந்து, குறிப்பாக, பத்துப்பாட்டு, சிலம்பு, மேகலை, குறள், நாலடியார், கம்பராமாயணம், வில்லிபாரதம், தனிப்பாடல்கள் முதலானவை ஒருபக்கம் அல்லது இருபக்கங்களில் இடம் பெற்றுள்ளன. பாடலிலிருந்து சில பகுதிகளையும், அவற்றிற்கான குறிப்புரையோடு கூடிய விளக்கங் களையும் தமிழர் செல்வம் என்ற இலக்கியப் பகுதி புலப்படுத்திக் காட்டியுள்ளது.

மொழி பெயர்ப்புக் கவிதைகள் முதல் தொகுதியில் வெளியிடப்பெற்றுள்ளன. அவற்றை அ.மாதவய்யா மொழி பெயர்த்துள்ளார். சார்லஸ் லாம்ப்'ன் எனது பழைய தோழர் **(The old familiar faces)** தாமஸ் மூரின் பழைய நாள் நினைவு **(The Light of the otherday)** 'இராபர்ட் கதே'யின் எனது புத்தகங்களின் மத்தியில் **(Among the books)** 'பாகோரி'ன் நீ மனம் ஏங்கிடாதே **(Despair not)** 'பார்பால்ட்'டின் உயிர் **(Life)** போன்ற கவிதைகள் குறிப்பிடத்தக்கவை. மற்றும் ஆல்டங் ஹக்லியின் கவிதை ஒன்றைத் தழுவி எழுதப்பெற்ற 'இந்தியா என் அன்னையே' என்ற கவிதையும், சேக்ஸ்பியரின் சானெட் ஒன்றும் முதல் தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இவை தவிர கடவுள் அருள் உலகம், சிறந்த தொண்டு, மரணம் முதலிய மொழிபெயர்ப்புக் கவிதைகளும் அதில் இடம்பெற்றுள்ளன. இத்தகைய கவிதைகளில் சில உயிரோட்டமாக உள்ளன.

சிறுகதை, புதினம், நாடகம் ஆகியன ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

பக்கிம் சந்திரர் எழுதிய 'விருஹல்லங்கல வ்யாக்கிர சாரியார்' என்ற வங்காளச் சிறுகதை, இராமசாமி ஐயரால் 'வால்நீண்ட வரிப்புலியார்' என்ற தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எள்ளல் சுவையுடன் கூடிய சிறுகதை இது.

எட்வின் ஆர்னால்ட் இயற்றிய ஆசிய ஜோதி, உ.வே.சா.எழுதிய புத்த சரித்திரம் ஆகிய இவற்றை அடிப்படையாகக் கொண்டு 'மூப்பினை அறிதல்' என்ற நாவலைப் படைத்துள்ளார் அ.மாதவய்யா. இது சித்தார்த்தரின் வரலாற்றைப் பற்றியது.

> நாம் சம்பாதிக்கப் பிறந்தவர்கள் அல்ல;
> சாதிக்கப் பிறந்தவர்கள் என்ற எண்ணம்
> ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டாக வேண்டும்!
> **- விவேகானந்தர்**

*வடமொழி கலப்பில்லாத தனித்தமிழில்
சித்தார்த்தன் பற்றிய நாவல் இது*

என்று அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளது. தனித்தமிழ் என்பதை விட அவரது காலத்திய நடை என்றே கருதும்படியாக அக்கதையின் நடை அமைந்துள்ளது. 'தில்லை கோவிந்தன்' என்ற அ.மாதவய்யாவின் தொடர்கதை இப்பத்திரிகையில் இடம் பெற்றிருக்கிறது. இதுவும் ஒரு மொழிபெயர்ப்பு நாவலாகும்.

சிறுவர் பகுதிகள் தொடர்ந்து வெளிவந்துள்ளன. இவை பாலவிநோதக் கதைகள் என்ற பகுதியில் இடம்பெற்றுள்ளன. சிறுவர்கள் படிப்பதற்கு ஏற்றவகையில் பெரிய எழுத்துக்களில் (12 புள்ளிகள்) வெளிவந்துள்ளன இக்கதைகள். மொகலாயக் கதைகள் என்பதும் தொடர்ந்து வெளிவந்தது. பொழுதுபோக்குத் தொடர்பானவையாய் இவை விளங்கின.

இப்பத்திரிகையில் நாடகம் எப்போதாவது இடம்பெற்றுள்ளது. பவானந்தம் பிள்ளை சீதாபரகணம் என்ற நாடகத்தை இதில் எழுதியுள்ளார். இராம நாடக மஞ்சரி இப்பத்திரிகையில் இணைச் சேர்க்கையாக (அநுபந்தமாக) வெளிவந்துள்ளது.

வரலாற்றுத் தொடர்பான கட்டுரைகள் குறிப்பிடத்தக்க அளவில், 'தமிழர் நேசன்' இடம்பெற்றுள்ளன. 'ஐரோப்பியர் ஆதிசரித்திரம்' என்ற தொடர்க் கட்டுரை சில பகுதிகளாக வெளிவந்தது. வரலாற்றில் புகழ் பெற்றவர்களின் வாழ்க்கை தொடர்ந்து இடம் பெற்றது. முதல் தொகுதியில், 'ஆன்றோர் ஆற்றுப்படை' என்னும் பகுதியில், தாதாபாய் நௌரோஜி, சி.சுப்பிரமணிய அய்யர், இராஜா ராம்மோகன்ராய், ஸர் வில்லியம் லெடர்பன் முதலியோர் வாழ்க்கை பற்றி அ.மாதவய்யா எழுதியுள்ளார். பிற தொகுதிகளில் டி.ஆர்.இராஜகோபாலய்யர் என்பவர் மாஜினி, நெல்சன், நெப்போலியன், டால்ஸ்டாய், வாஷிங்டன், மார்ட்டின் லூதர், லிங்கன், கூடன்பர்க், கரிபால்டி முதலியோர் பற்றி நீண்ட கட்டுரை அளித்து வந்தார்.

மதிப்புரைப் பகுதியில் அரிச்சந்திரா, கம்பராமாயணச் சுருக்கம், சிவாஜி மகராஜா, பட்டபாணர் சரித்திரம் முதலான நூல்கள் இடம்பெற்றுள்ளன.

விடுதலைக்கு முன்னுள்ள காலகட்டத்தில் வெளிவந்த இதழாதலால் விடுதலை பற்றிய சிந்தனையில் இது கொண்டிருந்த கருத்துப் புலனாகுமாறு இல்லை. முதல் ஐந்து தொகுதிகளைக் காணுகின்றபோது, இப்பத்திரிகையின் பொறுப்பாளர்கள் தேசிய விடுதலையில் பங்கு ஆற்றியதற்கான குறிப்புகள் கிடைத்தில. எனினும், தமிழர் கல்விச் சங்கத்தில் பொறுப்பு வகித்தவர்களில் சிலர், தேசிய விடுதலை உணர்வு மிக்கவர்களாய் இருந்துள்ளனர். 'தமிழர்நேசனில்' இது குறித்து அறிய வாய்ப்பில்லை.

விடுதலை பெறுதற்குக் கால் நூற்றாண்டுக்கு முன் வெளிவந்த பத்திரிகைகளில் தமிழர் நேசனுக்குக் குறிப்பிடத் தகுந்த இடம் உண்டு என்பதில் ஐயம் இல்லை. அறிவியல் பத்திரிகை என்றழைக்கப் படத்தக்கதாக, அறிவியல் கட்டுரைகள் மிகக் கவனமாக எழுதப்பெற்றிருப்பதைப் போற்ற வேண்டும். பின்னர் சுத்தானந்த பாரதியார் போன்றவர்கள் பத்திரிகை நடத்தியபோது, இப்பத்திரிகையின் அறிவியல் கட்டுரைகள் முன்னோடியாக இருந்துள்ளன. தமிழர் நேசனில் வெளிவந்த கட்டுரைகள் ஒவ்வொன்றும் அவற்றை எழுதியோரின் கடின உழைப்பையும், விடா முயற்சியையும் காட்டவல்லன.

> *முதலில் தொண்டு, பின்பு தன்னலம் என்ற மனப்பக்குவம் அனைவரிடமும் ஏற்படவேண்டும்; அப்பொழுதுதான் நல்ல சமுதாயம் உருவாகும்!*
>
> **- டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன்**

இதழாசிரியர் அ.மாதவய்யாவின் முயற்சியும் தன்னம்பிக்கையும் உழைப்பும் தமிழர்நேசனுக்கு உற்ற துணையாய் விளங்கின. இலக்கிய மொழி பெயர்ப்புக்களோடு, அறிவியல் தொடர்பான செய்திகளையும் அவர் அவ்வப்போது மொழிபெயர்த்து வந்தார். அன்றைய நாளில் பி.ஏ. தேர்வில் முதல் மாணவராகத் திகழ்ந்த மாதவய்யாவிற்கு, இலக்கியத்தாகம் இருந்ததற்கான அடையாளங்களைத் தமிழர் நேசனில் காணமுடிகின்றது. எனினும் அறிவியல் பார்வையே அதில் ஓங்கியுள்ளது.

1917 முதல் 1927 வரை சுமார் பத்தாண்டுகள் 'தமிழர் நேசன்' வெளிவந்து கொண்டிருந்தது. இறுதி சில ஆண்டுகள் இவ்விதழின் ஆசிரியர் பணியை பெ.நா.அப்புசாமி ஏற்றுக்கொண்டார். இவர்க்கு மாதவய்யா சிறிய தந்தை ஆவார். மாதவய்யாவிற்குப் பின் இப்பத்திரிகை மிகவும் மெலிந்து போயிற்று. குறைவான பக்கங்களே வெளிவந்தன. பெ.நா.அப்புசாமி ஆசிரியராக இருந்து நடத்தி வந்தபோது அப்பத்திரிகையின் நிலைமை குறித்துப் பின்னாளில் 'ராணி' ஆசிரியர் அ.மா.சாமியிடம் அவர் தெரிவித்த கருத்தாவது:

> *'தமிழர்நேசன் பத்து ஆண்டு நடந்தது. 32 பக்கமும் நானே எழுதி நிரப்பினேன். படங்களும் வரைந்தேன். பல பேரிடம் கட்டுரை கேட்டுக் கடிதம் எழுதினேன். இதை (விஞ்ஞானம்) தமிழில் எழுதினால் படிப்பவர்களுக்கு அர்த்தம் ஆகாது என்று சொல்லிவிடுவார்கள். படிப்பவர்களும் கிடையாது. எழுதுகிறவர்களும் இல்லாமல்,*

படிப்பவர்களும் இல்லாமல் தமிழர் நேசன் நின்றுபோனது.

(தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி ப.193)

- என்று குறிப்பிட்டிருப்பது சிந்திக்க வைப்பதாகும். தொடக்கத்தில் அறிவியல் செய்திகளுக்கு முதன்மை அளித்துவந்த ஓர் இதழ் நின்று போனது வருத்தத்திற்கு உரியதாகும். முன்னர் எழுதிவந்தோரே திரும்பவும் எழுத முயன்றிருக்கலாம் அல்லவா? பெ.நா.அப்புசாமி கூறியிருப்பது போன்று அறிவியல் கட்டுரை எழுதினால் படிப்பவர்களுக்குப் பொருள் விளங்காது என்ற கூற்று சற்றே மிகையானது. தமிழர் கல்விச் சங்கத்தின் அடிப்படை நோக்கத்தையே சிதைப்பது போல் உள்ளது. படிப்போரிடம் வரவேற்பு குறைந்துபோக வாய்ப்பு உண்டு. அஃதியல்பானது. அதைக் காட்டிலும் விற்பனையைக் கவனத்தில் கொண்டால் அது நின்றுபோனதற்குரிய காரணம் புரியும். அதேசமயம் 1924இல் 'பஞ்சாமிர்தம்' என்ற பத்திரிகைக்கு அ.மாதவய்யா ஆசிரியராகப் பொறுப்பேற்றதையும் இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

'தமிழர் நேசன்' என்ற இதழ் நின்று போனாலும், தமிழில் முதல் முயற்சியான அறிவியல் பத்திரிகை என்ற சிறப்பை மட்டும் அது இழக்கவில்லை; இழக்கவும் இயலாது.

இக்கட்டுரையில் காணப்பட்ட செய்திகள் பின்வருமாறு:

(1) 1917இல் தமிழர் கல்விச்சங்கம் என்ற அமைப்புத் தொடங்கப்பெற்று, அதன் வழி வெளிவந்தது 'தமிழர் நேசன்' என்ற மாத இதழ்.

(2) பலரின் கூட்டு முயற்சியால் வெளிவந்த இவ்விதழுக்கு அ.மாதவய்யா ஆசிரியராய் இருந்துள்ளார்.

(3) தமிழரின் அறிவியல் வளர்ச்சிக்கு ஆக்கம் தேடுவதை நோக்கமாகக் கொண்டது. இவ்வடிப்படையில் தமிழில் வெளிவந்த அறிவியல் இதழ்களுக்கு முன்னோடியாக இவ்விதழ் விளங்கியது.

(4) அறிவியல் கட்டுரைகள் அரிய உழைப்போடும், மிகுந்த கவனத்தோடும் எழுதப்பெற்றுள்ளன. அறிவியல் பாடநூல் என்று கருதுமாறு பல்வேறு பட்ட அறிவியல் கட்டுரைகளை அளித்து வந்துள்ளது.

(5) அறிவியல், கலை, வரலாறு ஆகியவை தொடர்பான செய்திகளை அறிமுகப்படுத்தலும், அவற்றைத் தமிழ்/தமிழர் வளர்ச்சிக்கு உளப்படுத்தலுமாகிய இரண்டு அடிப்படைப் பகுப்புகளைக் கொண்டுள்ளது இவ்விதழ்.

(6) மொழிபெயர்ப்புப் படைப்புகள், கலைச்சொல் உருவாக்கங்கள் ஆகியவற்றை வெளியிட்டு மொழி பெயர்ப்புப் பணியில் செவ்வனே தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

# கதர் கிராமத் தொழில் வாரியம்

★ 9-வது ஐந்தாண்டுத் திட்டம் ரூ.5013.21 இலட்சத்திற்கு உருவாக்கப்பட்டு உள்ளது. இதற்குத் தேவையான அரசு மற்றும் மாநிலத் திட்டக்குழு ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

★ 1998-99 நிதியாண்டிற்கு ரூ.50.75 இலட்சத்திற்கு பகுதி-2 திட்டத்தில் புதிய திட்டப்பணிகளை மேற்கொள்ள மாநிலத் திட்டக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வாய்ப்புக்கள் அதிகமுள்ள மாவட்டங்களில் மட்டும் பணிமேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ 1997-98ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின்போது முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, தமிழ்நாட்டிற்கென ஒரு வரைவு துணிநூல் கொள்கை தயாரிக்கப்படுகிறது.

★ தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 1997-98ஆம் ஆண்டுக்கு கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்திக் குறியீட்டை முறையே ரூ.46 கோடி மற்றும் ரூ.404 கோடியாக இலக்கு நிர்ணயித்தது. மேலும் 1998-99க்கு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் முறையே ரூ.50 கோடி மற்றும் ரூ.425 கோடிக்கும் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 30.9.97 முடிய உள்ள காலத்தில் ரூ.4.16 கோடிக்குக் கதர் ரகங்களையும் ரூ.180.60 கோடி அளவுக்கு கிராமத் தொழில் பொருட்களை விற்பனை செய்துள்ளது. 1998-99ல் கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் விற்பனையை முறையே ரூ.55.00 கோடி மற்றும் ரூ.450 கோடிக்கும் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

★ 30.9.97 முடிய பதினாறு இலட்சம் நபர்களுக்கு வாரியத்தால் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

★ பட்டு ரகங்களில் புதிய நவீன டிசைன்கள் புகுத்தப்பட்டுள்ளதால் பட்டு சேலைகளுக்கு அதிக அளவில் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. இதனால் 30.9.97 முடிய ரூ.644.81 இலட்ச மதிப்பில் பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

★ கதர் பட்டு மற்றும் கதர் ஆடைகளுக்கு 15% தள்ளுபடி அனுமதிக்கப்பட்டுள்ளது.



# இந்த நகரத்தைத் தூங்க வைக்க வேண்டும்!

- மனுஷ்ய புத்திரன்



இந்த நகரத்தைத்
தூங்க வைக்க வேண்டும்

அதன் பைத்தியக் கண்களில்
செவ்வரி படர்கிறது

காலமும் அகாலமும்
குழம்பிய காலத்தில்
அது பிரமைகளில் நீந்துகிறது

மிகவும் களைப்படைந்து விட்டது,
எனினும் தூங்க மறுக்கிறது.

ஒரு போதும் அடையவியலா
தன்னுடலை
தானே தின்னும் பசியில்
சுற்றிச் சுற்றி வருகிறது.

நகரங்கள்
தூங்க மறந்து போனதால்
கனவு காணும் பழக்கத்தையும்
இழந்து விட்டன.

விசித்திர ஒலிகளை எழுப்பியபடி
புரண்டு புரண்டு படுக்கிறது.

வலி அதிகரிக்கும் போதெல்லாம்
நாய்களின் குரல் வழியே
நிலவை நோக்கி ஊளையிடுகிறது.

தூங்காத நகரங்கள்
விடிகிற பொழுதின்
அந்தப் பரவசத்தையும் காண்பதில்லை

அதற்குத் தன் செயல்களை
எங்கே நிறுத்தி

எங்கே தொடங்க வேண்டுமெனப்
புரிவதே இல்லை.

நான் சற்றைக்கு முன்
நிராதரவான நிலையில்
கழுத்தறுபட்ட ஒரு மனிதன்!
என் கழுத்தை அறுத்தவனும்
நானும்
ஒரு கணம் முன்புவரை
குறுக்கிடும் உத்தேசம் கொண்டிருக்கவில்லை.

இவை நிகழ்கின்றன
யுத்தத்தின் நெறிமுறைகள்
ஏதுமில்லாத இந்த நகரம்
துரோகப் பெட்ரோல், குற்றங்களால்
தன் வழிமுறைகளை நிச்சயித்துக் கொண்டிருக்கிறது.

இன்றும் சில பெண்களும்
குழந்தைகளும் காணாமல் போயிருக்கிறார்கள்.
இந்த இரவின் வெப்பத்தில்
அவர்கள் ஆவியாகியிருக்கக் கூடும்.

பைத்தியங்களும்
தற்கொலை செய்து கொண்டவர்களும்
எப்படியோ இரகசியமாக
வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.





நகரங்கள்
என்றிலிருந்து தூங்க மறந்தன என்பதற்கு
நம்மிடம் சாட்சியங்களில்லை.

ஒரே ஒரு இரவு மட்டும்
இந்த வாகனங்கள் அனைத்தையும்
பொம்மைக் கார்களாக்கிக்
குழந்தைகளிடம் கொடுத்துவிடலாம்.

பற்றி எரியும் மின் கம்பங்களைப் பிடுங்கி
கடல் நீரில் அமிழ்த்திவிடலாம்

தூக்க மாத்திரைகளின்றி
இந்த நகரத்தைத் தூங்க வைக்கவேண்டும் -

புதையுண்ட நகரங்கள் போல!

# கபிலர் குன்று

### கலைஞர் வியக்கும் கபிலர்

"காடுகளில் மலைச் சோலைகளில் கபிலப்புலவன்
கண்டறிந்து குறிஞ்சிப்பாட்டில் கோடிட்டுக் காட்டியுள்ள
மலரையெல்லாம் பறித்தெடுத்து என் மனம் பறித்த
மாத்தமிழ்ச்சுவடிகள்மேல் மாரியெனப் பொழிந்திடுவேன்!
இதோ, கபிலர் காட்டும் மலர்கள் காண்க......
பத்துப் பாட்டாம் குறிஞ்சிப் பாட்டில் கபிலப்புலவன் - மலர்களைப்
பட்டியல் போடும்பாங்கே, பாவையர்
சரம்தொடுத்தது போல் அமைந்திட்டதம்மா! இந்தச்
சங்கத் தமிழின் பெருமையைச் சாற்றுதல் எளிதோ?"

### கபிலர் காட்டிய மலர்கள்

உரிதுநாறு அவிழ்தொத்து உந்தூழ், கூவிளம்,
எரிபுரை எறுழம், கள்ளி, கூவிரம்,
வடவனம், வாகை, வான்பூங் குடசம்,
எருவை, செருவிளை, மணிப்பூங் கருவிளை,
பயினி, வானி, பல இணாக் குரவம்,
பசும்பிடி, வகுளம், பல் இணர்க் காயா,
விரிமலர் ஆவிரை, வேரல், சூரல்,
குரீஇப் பூளை, குறுநறுங் கண்ணி,
குருகிலை, மருதம், விரி பூங் கோங்கம்,
போங்கம், திலகம், தேங் கமழ் பாதிரி,
செருந்தி, அதிரல், பெருந்தண் சண்பகம்,
கரந்தை, குளவி, கடிகமழ் கலிமா,
தில்லை, பாலை, கல் இவர் முல்லை,
குல்லை, பிடவம், சிறுமா ரோடம்,
வாழை, வள்ளி, நீள்நறு நெய்தல்,
தாழை, தளவம், முள்தாட் தாமரை,
ஞாழல், மௌவல், நறுந்தண் கொகுடி,
சேடல், செம்மல், சிறு செங்குரலி,
கோடல், கைதை, கொங்க முதிர் நறுவழை,
காஞ்சி, மணிக்குலைக் கள்கமழ் நெய்தல்,
பாங்கர், மராஅம், பல்பூந் தணக்கம்,
ஈங்கை, இலவம், தூங்கு இணர்க் கொன்றை,
அரும்பு, அமர் ஆத்தி, நெடுங்கொடி அவரை,
பகன்றை, பலாசம், பல்பூம் பிண்டி,
வஞ்சி, பித்திகம், சிந்துவாரம்,
தும்பை, துழா அய், சுடர்ப்பூந் தோன்றி,
நந்தி, நறவம், நறுவம் புன்னாகம்,
பாரம், பீரம், பைங்குருக் கத்தி,
ஆரம், காழ்வை, கடி இரும் புன்னை,
நரந்தம், நாகம், நள்ளிருள் நாறி,
மா இருங் குருந்தும் வேங்கையும் பிறவும்".



- இவ்வாறு தமிழக முதல்வரும் தமிழ் ஆராய்ச்சிப் பேறிஞரும் **'சங்கத் தமிழ்'** நூல் தந்த சரித்திர **நாயகரும்** ஆன மாண்புமிகு **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள், தாம் எழுதிய 'சங்கத் தமிழ்' நூலின் துவக்கத்திலே **'மலர் மாரி பொழிகின்றேன் !'** என்ற தலைப்பின் கீழ் சங்க காலத் தலைமைப் புலவரான கபிலரின் புலமைத் திறனை - படைப்பாற்றலை மிகவும் வியந்து பாராட்டுகிறார்.

கபிலர், தாம் எழுதிய குறிஞ்சிப்பாட்டில் 61 ஆம் அடி முதல் 95ம் அடி முடிய 35 அடிகளில் 99 வகையான மலர்களின் பெயர்களை வரிசையாகச் சொல்லியிருக்கிறார். கபிலரின் இந்தப் படைப்பாற்றலை - சிந்தனையாற்றலை - புலமையாற்றலை நம் **கலைஞர்** மட்டுமின்றி உலகில் உள்ள **அனைத்து மொழிக் கவிஞர்களும்** மிகவும் வியந்து பாராட்டுகிறார்கள்.

***இராம. ஆதிரைக்காவலன்***



கபிலர் குன்று அன்று...

## கபிலர் உயிர் நீத்த இடம்

இவ்வாறு, உலக மொழிக் கவிஞர்களால் வியந்து பாராட்டப்படும் பெருமையை உடைய கபிலர், தமது இறுதிக் காலத்தில் **விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூரில்** பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்து இறுதியில் அவ்வூரில் பாயும் தென்பெண்ணையாற்றின் நடுவில் உள்ள ஓர் உயரமான பாறையில் வடக்கிருந்து உயிர் நீத்தார். கபிலர் உயிர் நீத்து 2200 ஆண்டுகள் ஆன பின்பும் அவர் உயிர் நீத்த இடமான அந்தப்பாறை-தற்பொழுதும் **'கபிலர் குன்று'** என்று பொது மக்களால் அழைக்கப்படும் இந்த இடம் தற்பொழுது தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையின் பாதுகாப்பில் உள்ளது.

இக்குன்றின் மீது சிவலிங்கம் உள்ள கோவிலும் இக்கோவிலை அடைவதற்கு ஆற்றிலிருந்து படிக்கட்டுகளும் உள்ளன. ஆனால் இக்கோவிலின் கருவறையும் சுற்றுச் சுவர்களும் படிக்கட்டுகளும் மிகவும் பாழடைந்த நிலையில்இருந்தன. தாய்த் தமிழைப் பேணிப் போற்றும், **முதலமைச்சர் கலைஞர்** அவர்களின் ஆணையால், ரூ.50 ஆயிரம் செலவில், கபிலர் குன்றும் சீரிய முறையில் சீரமைக்கப்பட்டுள்ளது.

## கபிலர் வரலாறு

கபிலர் குன்றைப் பற்றிய மற்ற விவரங்களை அறிந்து கொள்வதற்கு முன்பு கபிலரின் வரலாற்றை இங்கே நாம் சுருக்கமாகக் காண்போம்.

சங்ககாலப் பெரும்புலவரான கபிலர், பாரி வள்ளலின் அவையிலே புலவராக மட்டுமின்றி அவரது ஆருயிர் நண்பராகவும் விளங்கினார். பாரிக்கு **அங்கவை, சங்கவை** என்ற பெயர் கொண்ட இரு மகள்கள் இருந்தனர்.

ஏதோ ஒரு காரணத்தினால் வள்ளல் பாரிக்கும் மூன்று குறு நில மன்னர்களுக்கும் போர் மூண்டது. அப்போரில் பாரி உயிர் நீத்தான். பாரி போருக்குச் செல்லும் முன்பு கபிலரிடம் 'கபிலர் பெருமானே! ஒரு வேளை போரிலே நான் இறந்துவிட்டால் தாங்கள் தான் மணமாகாத என் மகள்களுக்கு உற்ற துணையாக இருந்து அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கவேண்டும்' என்று வேண்டிக் கெண்டான், அதற்குக் கபிலரும் சரியென்று ஒப்புக்கொண்டார்.

கபிலர் பாரியிடம் உறுதியளித்தவாறு, அவன் உயிர் நீத்த பின்னர் அவன் மகள்களுக்குத் திருமணம் செய்து வைப்பதற்காக அவர்களை அழைத்துக்கொண்டு பறம்புமலையை விட்டுப் புறப்பட்டார்.

முதலில் விச்சிக்கோன் என்ற குறுநில மன்னனை அடைந்து அவனிடம் பாரி மகள்களை மணக்கும்படி வேண்டினார், ஆனால் அவனோ 'தந்தையை இழந்து வறுமையில் வாடும் பெண்களை மணந்து கொள்ள மாட்டேன்' என்று மறுத்துவிட்டான்.

அதன்பிறகு, கபிலர் அப்பெண்களை அழைத்துக்கொண்டு இருங்கோவேள் என்ற குறுநில மன்னனிடம் சென்று அவனை மணக்கும்படி வேண்டினார். அவனும் 'தந்தைய இழந்து வறுமையில் வாடும் இந்த பெண்களை மணந்து கொள்ள மாட்டேன்' என்று மறுத்ததுடன் கபிலரை அவமதித்து அனுப்பி விட்டான்.

இதனால் மனமுடைந்த கபிலர், 'என்னதான் பாரி முல்லைக்குத் தேர் கொடுத்த வள்ளலாய் இருந்தாலும் இன்று அவன் மகள்கள் வறுமை நிலையில் இருப்பதால் அவர்களை எந்த மன்னனும் மணக்க முன் வரமாட்டான். எனவே நாம் இம்மகளிர் திருமணத்திற்குப் பெரும் பொருள் சேர்த்த பிறகுதான் மணமகனைத் தேடிச் செல்ல வேண்டும்' என்று முடிவு செய்து அப்பெண்களை அழைத்துக் கொண்டு பெரும் பரிசில் பெறுவதற்காகச் **சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனிடம்** சென்றார்.

அங்கே அவன் மீது பதிற்றுப் பத்தின் ஏழாம் பத்தைப் பாடி அவனைப் புகழ்ந்தார், அதைக் கேட்டு மகிழ்ந்த சேரன் கபிலரிடம் 'கபிலரே! தங்களுக்கு என்ன பரிசில் வேண்டும்?' என்று கேட்க அதற்குக் கபிலர் 'எனக்காகப் பரிசில் கேட்டு வரவில்லை, இந்தப் பாரி மகளிரின் திருமணத்திற்காகத் தான் பரிசில் கேட்டு வந்தேன்' என்று கூறினார்.

உடனே, சேரன் கபிலரை அழைத்துக் கொண்டு தனது நாட்டிலுள்ள 'நன்றா' என்னும் குன்றின் மீது ஏறி நின்று தன் கண்ணில் பட்ட நிலப்பகுதியை எல்லாம் கபிலருக்கு உரிமை ஆக்கியதோடு நூறாயிரம் பொற்காசுகளையும் பரிசிலாகக் கொடுத்தான்.

அவற்றைப் பெற்றுக் கொண்ட கபிலர் அப்பெண்களை அழைத்துக் கொண்டு அவனிடம் இருந்து விடை பெற்றுத் திருக்கோவிலூரை அடைந்தார். அப்பொழுது அவ்வூரை ஆண்ட **மலையமான் திருமுடிக்காரியைச்** சந்தித்து அவனிடம், 'இப்பாரி மகளிரைத் தங்களின் புதல்வர்களுக்குத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்' என்று வேண்டினார்.

அதைக் கேட்ட திருமுடிக்காரி மிகவும் மகிழ்ச்சியடைந்து சரியென்று ஒப்புக் கொண்டான். பின்னர் கபிலர் சேரனிடம், தாம் பெற்ற பொற்காசுகளையும் நிலங்களையும் பாரி மகளிரின் திருமணத்திற்காகத் திருமுடிக்காரியிடம் கொடுத்தார். அதன்பிறகு பாரி மகளிர் **அங்கவை, சங்கவை** ஆகியோருக்கும் காரியின் புதல்வர்கள் **திருக்கண்ணன், சிறுகண்ணன்** ஆகியோருக்கும் **திருக்கோவிலூரிலே** திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

அதன்பின்னர், கபிலர் காரியின் அரண்மனையில் பாரி மகளிருடனேயே வாழ்ந்து வந்தார். பல ஆண்டுகள் சென்ற பின்னர் தள்ளாத முதுமை காரணமாகத் தமது உயிரைப் போக்கிக் கொள்வதற்கு அவர்களிடமிருந்து விடை பெற்றுத் **திருக்கோவிலூரில் தென்பெண்ணை யாற்றின்** நடுவில் உள்ள ஓர் உயரமான

பாறையின் மீது வடக்குத் திசை நோக்கி அமர்ந்து சாகும் வரை உண்ணா நோன்பினை மேற்கொண்டு உயிர் நீத்தார். அவர் உயிர் நீத்த அப்பாறைதான் தற்பொழுதும் **'கபிலர் குன்று'** என்று அழைக்கப்படுகிறது.

**கபிலரின் பெருமைகள்**

சங்க காலப் புலவர்களிலேயே மற்ற புலவர்களைக் காட்டிலும் **கபிலர்தான்** மிகுதியான பாடல்களைப் பாடியுள்ளார்.

நமக்குக் கிடைத்துள்ள 2381 சங்கப் பாடல்களிலே **கபிலர்** மட்டும் **235 பாடல்களைப்** பாடியுள்ளார். அதாவது ஏறக்குறைய 600 புலவர்களால் பாடப்பட்ட சங்கப் பாடல்களிலே கபிலர் ஒருவர் மட்டும் பத்து சதவீதப் பாடல்களைப் பாடித் தலைமை இடத்தை வகிக்கிறார். இவருக்கு அடுத்த படியாக **அம்மூவனார்** என்ற புலவர் 127 பாடல்களைப் பாடியுள்ளார். மற்ற புலவர்களெல்லாம் நூற்றுக்குக் குறைவான பாடல்களையே பாடியுள்ளார்கள்.

கபிலரைப்போன்று சிறந்த புலவர்களாகக் கருதப்படும் **பரணர், நக்கீரர், ஔவையார்** ஆகியோர் கூட நூற்றுக்குக் குறைவான பாடல்களைத்தான் பாடியுள்ளார்கள். **பரணர் 86** பாடல்களையும், **ஔவையார் 59** பாடல்களையும், **நக்கீரர் 37** பாடல்களையும் பாடியுள்ளார்கள். எனவே பரணர், நக்கீரர், ஔவையார் ஆகியோரைக் காட்டிலும் கபிலர்தான் தலைசிறந்த புலவராக - **தலைமைப் புலவராக** விளங்குகிறார். இந்தப் பெருமை சங்கப் புலவர்களிலே வேறெந்தப் புலவருக்கும் கிடையாது.

சங்க காலப் புலவர்களிலே மற்ற புலவர்களைக் காட்டிலும் **கபிலர்** ஒருவர்தான் மிகுதியான **புலவர்களால்** சங்க இலக்கியங்களிலேயே பாராட்டப்பட்டிருக்கிறார்.

***'உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை***
***வாய் மொழிக் கபிலன்'*** (அகநானூறு - 78 (15,16)

- என்று **மதுரை நக்கீரனாரும்,**

***'தூஉது***
***செறுத்த செய்யுள் செய்செந் நாவின்***
***வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்'***

(புறநானூறு - 53 (10-12)

- என்று **பொருந்தில் இளங்கீரனாரும்,**

***'வயங்கு செந் நாவின்***
***உவலைக் கூராக் கலையில் நெஞ்சின்***
***நனவிற் பாடிய நல்லிசைக்***
***கபிலன்'*** (பதிற்றுப்பத்து - 85 (10-13)

- என்று
**பெருங்குன்றூர்க் கிழாரும்,**

***'பொய்யா நாவிற் கபிலன்'***
(புறம் - 174 (10)

- என்று
**மாறோக்கத்து நப்பசலையாரும்,**

***'நிலமிசைப் பரந்த மக்கட்***
***கெல்லாம்***
***புலனழுக் கற்ற அந்த ணாளன்'***
(புறம் - 126 (10,11)

- என்று அதே
**மாறோக்கத்து நப்பசலையாரும்,**

***'கபிலன்***
***இன்றுளன்ஆயின் நன்றுமன்'***
(புறம் - 53 (12,13)

- என்று **சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை** கூறியதாகப் **பொருந்தில் இளங்கீரனாரும்,**

***'இலவமலர் அன்ன அம்செந் நாவின்***
***புலம் மீக்கூறும்'*** (அகம் - 142 (1,2)

- என்று கபிலரின் பெயரைக் குறிப்பிடாமல் பரணரும் தங்களது பாடல்களிலே கபிலரைப் பற்றிப் பாராட்டிக் கூறியுள்ளார்கள்.

இவ்வாறு கபிலர் சங்கப் பாடல்களிலே ஏழு இடங்களில் மற்ற புலவர்களால் பாராட்டப்பட்டுள்ளார். வேறு எந்தச் சங்கப் புலவரும் இதுபோல் அதிக இடங்களில் மற்ற புலவர்களால் பாராட்டப்படவில்லை. எனவே இந்தப் பெருமை சங்கப் புலவர்களிலேயே **கபிலருக்கு மட்டுமே உண்டு.**

சங்கப் புலவர்களின் காலத்தில் உண்மையான நட்புக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்து காட்டியவரும் கபிலரே.

**பிசிராந்தையார்** தம் நண்பன் **கோப்பெருஞ்சோழன்** உயிர் நீத்த உடனேயே அவன் பிரிவை ஆற்றாது தாமும் உயிர் நீத்தார். ஆனால் கபிலர் இறந்து போன தம் நண்பன் பாரியோடு உயிர் துறக்காமல் உயிரோடு வாழ்கின்ற தம் நண்பனின் மகள்களுக்காகத் தம் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து பின்புதான் உயிர் நீத்தார். தனது உயிரனைய நண்பனாம் பாரியின் மறைவுக்குப் பிறகும், தனது நண்பனின் மகள்களின் திருமணத்தை நடத்திக் காட்டிய பிறகே மறைந்தார் என்பது கபிலரின் பெருமைக்குப் பெருமை சேர்ப்பதன்றோ?

***'மொய்வைத் தியலும் முத்தமிழ் நான்மைத்***
***தெய்வக் கவிதை செஞ்சொற் கபிலன்'***

- என்ற திருக்கோவிலூரில் உள்ள கி.பி.11ம் நூற்றாண்டைச் சேர்ந்த **இராசராசன்** கல்வெட்டு கபிலரை மிகவும் சிறப்பாகப் புகழ்கிறது. இவ்வாறு வேறு எந்தச் சங்கப் புலவரும் பிற்காலக் கல்வெட்டினால் சிறப்பாகப் புகழப்படவில்லை.

எனவே, பிற்காலக் கல்வெட்டு ஒன்றினால் மிகச் சிறப்பாகப் புகழப்படும் ஒரே சங்க காலப் புலவர் **கபிலர்** மட்டும்தான். இந்தப் பெருமை வேறெந்தச் சங்கப் புலவருக்கும் கிடையாது.



**கபிலர் குன்று - கலைஞரின் அரசால் சீரமைக்கப்பட்ட பின் இன்று.**

சங்க காலப் புலவர்களிலே கபிலருடைய வாழ்க்கையைப் பற்றித்தான் நமக்கு மிகுதியான வரலாற்றுக் குறிப்புகள் கிடைத்துள்ளன. கபிலருக்குக் கிடைத்துள்ளது போன்ற வரலாற்றுக் குறிப்புகள் சங்க காலப் புலவர்களிலே வேறெந்தப் புலவருக்கும் கிடைக்கவில்லை. பிறரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைத் தமது பாடல்களிலே கூறிய பரணரைப் பற்றிக் கூட இவ்வளவு வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கவில்லை. எனவே இந்தப் பெருமை சங்கப் புலவர்களிலே கபிலருக்கு மட்டுமே உண்டு.

ஆரிய அரசன் பிரகதத்தனைத் தமிழறிவித்தற்காகவே கபிலர் குறிஞ்சிப்பாட்டைப்பாடினார். இவ்வாறு ஒரு பாடலின் மூலம் வேற்று இனத்தான் ஒருவனுக்கு நமது தமிழினப் பெருமையைக் கபிலர் வெளிக்காட்டியது போலச் சங்க காலத்திலே வேறெந்தப் புலவரும் வேறு ஏதாவது ஒரு விதத்தில் நமது தமிழினப் பெருமையை வெளி உலகிற்குக் காட்டினார்கள் என்பதற்குச் சங்க இலக்கியங்களிலே சான்றுகள் இல்லை.

தமிழ் மொழியில் முதன் முதலாகக் காரண காரியத் தொடர்பு அறாமல் ஒரு சிறுகதையைக் கபிலர் குறிஞ்சிப்பாட்டில் முற்றிலும் சித்திரித்திருக்கிறார். எனவே அவர் தம் பாடலின் அமைப்பு முறையில் அதுவரை எவரும் கையாளாத ஒரு புதுமையைப் புகுத்தியிருக்கிறார். ஆகவே தமிழ் இலக்கிய உலகிலே முதன் முதலாக ஒரு புதிய அமைப்பு முறையைத் தோற்றுவித்தவரும் கபிலர்தான்.

மேலும், கபிலர் குறிஞ்சிப்பாட்டில் 99 வகையான பூக்களின் பெயர்களை வரிசையாகக் கூறித் தமது படைப்பாற்றலை மிகச் சிறப்பாக வெளிப்படுத்திப் பெருமை பெற்றுள்ளார்.

கபிலர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து திணைகளிலும் பாடல்களைப் பாடியுள்ளார். மற்ற புலவர்கள் எல்லாம் ஓரிரு திணைகளில்தான் பாடல்களைப் பாடியுள்ளார்கள். எனவே, சங்கப் புலவர்களிலே ஐந்து திணைகளையும் பாடிய ஒரே புலவர் என்ற சிறப்பும் கபிலருக்கே உண்டு.

பத்துப்பாட்டு, எட்டுத் தொகை எனப்படும் சங்க இலக்கிய நூல்களிலே பத்துப் பாட்டில் கபிலர் எழுதிய குறிஞ்சிப்பாட்டு இடம் பெற்றுள்ளது. இதுபோல் எட்டுத் தொகை நூல்களிலே பரிபாடலைத் தவிர மற்ற ஏழு தொகை நூல்களிலேயும் கபிலரது பாடல்கள் இடம் பெற்றுள்ளன. பரிபாடலில் மட்டும்தான் இவரது பாடல்கள் இடம் பெறவில்லை. ஆனால் பரிபாடல் நமக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. ஆகவே, அது முழுமையாகக் கிடைக்காத வரை அதிலே கபிலரது பாடல்கள் இடம் பெற்றுள்ளதா? அல்லவா? என்பதை அறுதியிட்டுக் கூற இயலாது.

பரணர், நக்கீரர், ஔவையார் உள்ளிட்ட வேறெந்தப் புலவர்களின் பாடல்களும் இதுபோல் அனைத்து நூல்களிலும் இடம் பெறவில்லை. ஆகவே இந்தப் பெருமை சங்கப் புலவர்களிலே கபிலருக்கு மட்டுமே உண்டு.

**திருக்கோவிலூரில் உள்ள கபிலர் குன்றின்** மீது ஏறி நின்று குன்றின் உச்சிப் பகுதியான இந்த இடத்தில்தான் கபிலரின் உயிர் பிரிந்தது என்று இன்றும் கபிலரின் உயிர் பிரிந்த இடத்தைச் சுட்டிக் காட்ட முடியும். சங்கப் புலவர்களிலே கபிலரைத் தவிர வேறெந்தப் புலவர் உயிர் நீத்த இடத்தையும் சுட்டிக் காட்டிட இயலவில்லை.

இவ்வாறு சங்க காலத்தைச் சார்ந்த 600 புலவர்களிலே வேறெந்தப் புலவருக்கும் இல்லாத பல பெருமைகள் கபிலருக்கு மட்டுமே உண்டு.

சங்கப் புலவர்களிலே மிகுதியான பாடல்களைப் பாடிய ஒரே புலவர் என்ற சிறப்பு மட்டுமின்றி மேலும் பல கோணங்களிலும், மற்ற புலவர்களைக் காட்டிலும் சிறப்புப் பெற்றவரான கபிலரை, '**சங்க காலத் தலைமைப் புலவர்**' என்று அழைத்திட இயலுமன்றோ?

## விலைவாசியைக் கட்டுப்படுத்த முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ள விற்பனை வரிச் சலுகைகள்

- ★ பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் பொருட்கள் கிடைத்திடும் அடிப்படையில், ரூ.450 கோடிக்கு வரிவிலக்குச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. ஒருமுனை வரிவிதிப்பு, வரி சீர்திருத்தம் முதலானவைகள் அமலாக்கப்பட்டுள்ளன.
- ★ சாதாரண மக்கள் பயனடையும் வகையில் பருப்பு, மஞ்சள், மிளகாய் போன்றவைகளுக்கு அறவே வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- ★ கணிப்பொறி, தொலைக்காட்சிப் பெட்டி, காகிதம், பொறிகடலை, சாதாரண பிஸ்கெட்டுகள், ஆயத்த ஆடைகள் போன்றவற்றிற்கு வரிக்குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.
- ★ பனியனுக்கு வரி அறவே நீக்கப்பட்டுள்ளது.
- ★ மூலப்பொருட்களின் மீது விதிக்கப்படும் வரி 3% அளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளது.
- ★ ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்கள், வர்த்தகர் சங்கப் பிரமுகர்கள் அடங்கிய 'வணிகவரி சீரமைப்புக் குழு' அமைத்து, வணிக வரிவிதிக்கும் முறை சீரமைக்கப்பட்டுள்ளது.

### கபிலர் குன்றின் பழமையை நிலைமை

இவ்வாறு பல பெருமைகளைப் பெற்ற சங்க காலத் தலைமைப் புலவரான கபிலர் உயிர் நீத்த இடமான திருக்கோவிலூரில் உள்ள கபிலர் குன்று, 23 ஆண்டுகளுக்கு முன்பு வரை கபிலர் உயிர் நீத்த இடம் என்று வெளியுலகிற்குச் சரிவரத் தெரியாமல் கேட்பாரற்றுக் கிடந்தது.

கபிலர் இக்குன்றின் மீதுதான் உயிர் நீத்தார் என்பதற்கான கல்வெட்டுச் சான்றையும் அதற்குரிய தெளிவான விளக்கங்களையும் கொண்டு நான் இக்குன்றைத் தமிழ்நாடு அரசுக்கு முதன் முதலில் அடையாளம் காட்டி இதை அரசு தம் பொறுப்பில் ஏற்றுக்கொண்டு பராமரிப்பதுடன் கபிலர் நினைவாகத் திருக்கோவிலூரில் கபிலர் கோட்டம் ஒன்றையும் கட்டுவிக்க வேண்டும் எனக் கோரி 13-11-1975 முதல் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விளைவாக,

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையின் அன்றைய இயக்குநர் டாக்டர் இரா.நாகசாமி அவர்களும் வேறு சில தொல்லியர் ஆய்வாளர்களும் இங்கு வருகை தந்து கபிலர் குன்றையும், கபிலர் உயிர் நீத்த செய்தியைக் கூறும் கல்வெட்டையும் பார்வையிட்டார்கள். கல்வெட்டுத் தொடருக்கு நான் கூறிய தெளிவான விளக்கங்களை ஏற்றுக்கொண்டு இக்குன்றில்தான் கபிலர் உயிர் நீத்த செய்தியைக் கூறும் கல்வெட்டையும் பார்வையிட்டார்கள். இக்குன்றில்தான் கபிலர் உயிர் நீத்தார் என்பதை உறுதி செய்து இந்த இடம் தொல்பொருள் ஆய்வுத் துறையின் சார்பில் பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனக் கூறிச் சென்றார்கள்.

அதன்பிறகு தமிழக அரசு கபிலர் குன்றை 17-1-1985 அன்று தொல்பொருள் ஆய்வுத்துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னமாக 'அரசு ஆணை எண் 20/தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறை' மூலம் அறிவித்தது.

அன்று முதல் இக்குன்று தொல்பொருள் ஆய்வுத் துறையின் பாதுகாப்பில் இருந்து வருகிறது. இக்குன்றின் மீது 1992 ஆம் ஆண்டில்

அறிவிப்புப் பலகையொன்றையும் இத்துறை நிறுவியது. அத்துடன் இக்குன்றிற்கு 1993 ஆம் ஆண்டில் பகுதி நேரக் காவலர் ஒருவரையும் இத்துறை நியமித்தது.

### கபிலர் குன்று சீரமைப்பு

ஆனால் இக்குன்றின் மீதுள்ள கோவிலும் படிக்கட்டுகளும் மிகவும் பாழடைந்த நிலையில் இருந்தன. இதனால் பார்வையாளர்கள் இக்குன்றின் மீது ஏறிப்பார்ப்பதற்கு அஞ்சினார்கள். எனவே இதனை உடனடியாகச் சீரமைக்க வேண்டும் எனக் கோரி 1996 ஆம்ஆண்டு ஜூன் மாதத்தில் நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் **கலைஞர்** அவர்களுக்கு நான் மடல்கள் எழுதினேன்.

பின்னர் சென்னைத் தலைமைச் செயலகத்திற்குச் சென்று தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர், முனைவர் **தமிழ்க் குடிமகன்** அவர்களை நேரில் சந்தித்து இக்கோரிக்கையை நிறைவேற்றும் படி வலியுறுத்தினேன். உடனே நமது **கலைஞரின்** அரசு இக்குன்றை ரூ.50 ஆயிரம் செலவில் மிகவும் சிறப்பான முறையில் சீரமைத்தது. இதனால் இக்குன்று தற்பொழுது பார்வையாளர்களுக்கு மிகவும் பாதுகாப்புள்ள இடமாகவும் பழமை சிறிதும் மாறாமல் புதிய பொலிவிலும் காட்சி அளிக்கிறது.

### பள்ளிக்குக் 'கபிலர்' பெயர்

**பாரியின்** மகள்கள் **அங்கவை, சங்கவை** ஆகிய இருவரும் தமிழ்ப் புலமையில் ஆற்றல் மிக்கவர்களாக இருந்தனர். இவர்கள் எழுதிய பாடல் புறநானூற்றில் 112ஆம் பாடலாக இடம் பெற்றுள்ளது. எனவே தமிழ்ப் புலமையோடும் எங்கள் ஊர் வரலாற்றோடும் தொடர்புடைய **'கபிலர்'** பெயரை எங்கள் திருக்கோவிலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கும் பாரி வள்ளலின் மகள்கள் **'அங்கவை, சங்கவை'** ஆகியோர் பெயர்களை எங்கள் ஊர் அரசு மகளிர் மேல்நிலை பள்ளிக்கும் சூட்டவேண்டும் எனக்கோரி 1996ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நம் முதல்வர் மாண்புமிகு டாக்டர் **கலைஞர்** அவர்களுக்கும் கல்வி அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க.**அன்பழகன்** அவர்களுக்கும் மடல்கள் எழுதினேன்.




கபிலர் குன்று உருவப்படத்தை, முதலமைச்சருக்கு அளித்து மகிழ்கிறார், கட்டுரையாசிரியர்.

பின்னர் தலைமைச் செயலகத்திற்குச் சென்று கல்வியமைச்சர் அவர்களிடம் இதுபற்றி நேரில் வலியுறுத்தியதன் விளைவாக, **கலைஞரின்** அரசு எங்கள் ஊர்ப் பள்ளிகளுக்குக் 'கபிலர்', 'அங்கவை, **சங்கவை** ஆகியோர் பெயர்களைச் சூட்டி 14-3-1997 அன்று 'அரசாணை நிலை எண்.115/பள்ளிக் கல்வித்துறை' மூலம் ஆணை பிறப்பித்தது.

### கபிலரின் இறுதிக் காலம் பற்றிய ஒரு குழப்பமான வரலாறு

சங்கப் புலவர்களிலேயே மற்ற புலவர்களைக் காட்டிலும் கபிலரைப் பற்றித்தான் மிகுதியான வரலாற்றுக் குறிப்புகள் கிடைத்துள்ளன என்பதை நாம் ஏற்கெனவே பார்த்தோம். அவ்வாறு இருந்தும் கபிலரின் இறுதிக் காலத்தைப் பற்றி ஒரு குழப்பமான வரலாறு கடந்த நூறாண்டுகளாக நமது தமிழ் ஆய்வு உலகில் நிலவி வருகிறது.

கபிலரின் இறுதிக் காலத்தைப் பற்றி நாம் அறிந்து கொள்ள நமக்குக் கிடைத்திருக்கும் ஒரே சங்க இலக்கியச் சான்றான புறம் 236ஆம் பாடலின் பண்டைய அடிக்குறிப்பு 'வேள்பாரி துஞ்சிய வழி அவன் மகளிரைப் பார்ப்பார்ப் படுத்து வடக்கிருந்த கபிலர் பாடியது' எனக்கூறுகிறது. அதாவது 'கபிலர் பாரியின் பெண்களைப் பார்ப்பனர்களிடம் ஒப்படைத்து விட்டு வடக்கிருந்து உயிர் நீத்தார்' என்பது இதற்குப் பொருள்.

ஆனால் புறநானூறு கூறும் இச்செய்திக்கு நேர் முரணாகத் திருக்கோவிலூரில் உள்ள கி.பி.11ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இராசராசன் கல்வெட்டு (தென் இந்தியக் கல்வெட்டுக்கள்-தொகுதி:7) (S.I.I.Volume-VII) எண் 863) 'கபிலன் பாரி தன்னடைக்கலப் பெண்ணை மலையர்க்குதவிக் கனல்புகும்' எனக் கூறுகிறது. 'கபிலர் பாரியின் பெண்ணை மலையருக்குத் திருமணம் புரிவித்து விட்டுத் தீப்பாய்ந்து உயிர் நீத்தார்' என்பது இதற்குப் பொருள்.

அதாவது, புறநானூறு 'பாரிக்கு இரு பெண்கள் (பாரி மகளிரை)' எனக்கூறுகிறது. ஆனால் திருக்கோவிலூர்க் கல்வெட்டு இதற்கு முரணாக 'ஒரு பெண (பாரிதன் னடைக்கலப் பெண்ணை)' எனக் கூறுகிறது.

'கபிலர் வடக்கிருந்து உயிர் நீத்தார் (வடக்கிருந்து)' எனப் புறநானூறு கூறுகிறது. ஆனால் திருக்கோவிலூர்க் கல்வெட்டு இதற்கு முரணாகக் 'கபிலர் தீப்புகுந்து உயிர் நீத்தார் (கனல்புகும்)' என்று கூறுகிறது.

இவ்வாறு கபிலரைப் பற்றிப் புறநானூறு கூறும் ஒவ்வொரு செய்திக்கும் நேர் முரணான செய்தியைத் திருக்கோவிலூர்க் கல்வெட்டு கூறுவதாகச் சொல்லப்படுகிறது. இதனால் கபிலரின் இறுதிக் காலத்தைப் பற்றி ஒரு குழப்பமான வரலாறு இன்று வரை நிலவி வருகிறது.

புறநானூறும் திருக்கோவிலூர்க் கல்வெட்டும் கூறுகின்ற இந்த முரண்பாடான செய்திகளைப் பற்றி 1913ஆம் ஆண்டில் மு.இராகவையங்கார் அவர்கள் தமது 'வேளிர் வரலாறு' நூலிலும் 1921ஆம் ஆண்டில் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தமது 'கபிலர்' நூலிலும் 1936ஆம் ஆண்டில் வே.வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் தமது 'கபிலர்' நூலிலும் 1937ஆம் ஆண்டில் இரா.இராகவையங்கார் அவர்கள் தமது 'பாரி காதை' நூலிலும் அதன்பிறகு தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் தமது 'இலக்கியமும் கல்வெட்டுக்களும்' என்ற நூலிலும் ஆய்வு செய்து அவரவர்கள் வழியில் சமன்படுத்தி எழுதியிருந்தார்கள்.

ஆனால் இவர்களுடைய இந்தச் சமன்பாடுகளை நமது ஆய்வு உலகம் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் இந்த முரண்பாடுகள் இன்று வரை முரண்பாடுகளாகவே நிலவி வருகின்றன.

## குடிசை மாற்று வாரியம்

★ குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில் குடிசை மாற்று வாரிய வீடுகளில், வசித்து வருவோர் விரும்பினால், அத்தகு 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏழைகளுக்குத் தவணை முறையில் குறைந்த விலையில் அந்தந்த வீடுகளே சொந்தமாக்கப்படும் என்று முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

★ 25 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட குடிசை மாற்று வாரிய வீடுகள் ரூ.9.50 கோடியில் புதுப்பிக்கப்படுகின்றன.

★ சென்னை மற்றும் நகராட்சிகளில் குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகளுக்கென ரூ.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புறநானூறு உ.வே.சாமிநாத ஐயர் அவர்களால் முதன்முதலில் 1894ஆம் ஆண்டு வெளிக்கொணரப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டது. திருக்கோவிலூர்க் கல்வெட்டு 1902ஆம் ஆண்டு வெளிக் கொணரப்பட்டது. கபிலரின் இறுதிக் காலத்தைப் பற்றிக்கூறும் இந்த இரண்டு வரலாற்றுக் குறிப்புகளும் வெளிக்கொணரப்பட்டு ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு ஆகியும் இந்த வரலாற்றுக் குழப்பம் இன்னும் நீங்கவில்லை.

இதன் காரணமாகப் புறநானூறும் திருக்கோவிலூர்க் கல்வெட்டும் கூறுகின்ற இந்த முரண்பாடான செய்திகளைப் பற்றி இக்கட்டுரையாசிரியர் இரண்டு ஆண்டுகளாகச் சங்கப் பாடல்களிலே மறைந்திருக்கும் தடயங்களையும் பிற்காலத் தடயங்களையும் கொண்டு முழுக்க முழுக்க மொழியாராய்ச்சியின் மூலம் மிகவும் நுணுக்கமாக ஆய்வு செய்து இறுதியில் புறநானூற்றின் 'வேள்பாரி துஞ்சிய வழி அவன்மகளிரைப் பார்ப்பார்ப் படுத்து வடக்கிருந்து கபிலர்' என்கின்ற அடிக்குறிப்பு என்ன செய்திகளைக் கூறுகிறதோ அதே செய்திகளைத்தான் 'கபிலன் பாரிதன் னடைக்கலப்பெண் மலையர்க்குதவிக் கனல்புகும்' என்ற திருக்கோவிலூர்க் கல்வெட்டுத் தொடரும் கூறுகிறது. அதாவது 'கபிலர் பாரியின் இருபெண்களைத் திருமணம் புரிவித்துவிட்டு உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்தார்' என்ற ஒரே செய்தியைத்தான் இவ்விரண்டுமே கூறுகின்றன. எனவே இவ்விரண்டும் முரண்பாடான செய்திகளைக் கூறவில்லை என்ற உண்மையை மறுக்க முடியாத சான்றுகளைக் கொண்டு நிறுவிப் 'புறநானூற்றுச் செய்திகளை உறுதி செய்யும் கபிலர் கல்வெட்டு (கபிலரின் இறுதிக் கால வரலாறு) என்ற தலைப்பில் 600 பக்கங்கள் கொண்ட ஒரு ஆய்வு நூலை எழுதி விரைவில் வெளியிட உள்ளார்.

### கபிலர் குன்றின் உலகப் பெருமை

கபிலர் உயிர்நீத்து 2200 ஆண்டுகளாகியும் அவர் உயிர் நீத்த இடம் இன்றும் சுட்டிக் காட்டப்படுகிறது என்பது உலகிலே மிகவும் வியப்புக்குரிய ஒரு செய்தியாகும்.

கபிலர் காலத்திலோ அல்லது அவர் காலத்திற்கு முன்போ உலகில் - வாழ்ந்த வேறெந்த மனிதன் உயிர் நீத்த இடமும் உலகில் இதுபோல் இன்று சுட்டிக் காட்டப்படவில்லை. அதாவது கபிலர் காலத்திற்குப் பின்பு வாழ்ந்த மனிதர்கள் உயிர்நீத்த இடங்கள்தான் இன்று சுட்டிக் காட்டப்படுகின்றனவே ஒழிய, அவருக்கு முன்பு வாழ்ந்த மனிதர்களின் உயிர் பிரிந்த இடங்கள் இன்று சுட்டிக் காட்டப்படவில்லை. எனவே உலகிலேயே இந்தப் பெருமை திருக்கோவிலூரில் கபிலர் உயிர் நீத்த இடமான கபிலர் குன்றுக்கு மட்டுமே என்றே கருதிட முயலும்.

உலகிலேயே மிகவும் நீளமான நதி நைல் நதி. உலகிலே மிகவும் உயரமான சிகரம் எவரெஸ்ட் சிகரம். இதுபோல் உலகிலே மிகவும் அதிகமான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு மனிதன் உயிர்நீத்த இடம் கபிலர் குன்று ஆகும்.

### சுற்றுலாத்தலமாக உருவாக்கல்

கபிலரின் பெருமையையும் கபிலர் குன்றின் பெருமையையும் தமிழ் மக்கள் மட்டுமின்றி உலக மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் பொருட்டுத் திருக்கோவிலூரில் கபிலர் குன்றுக்கு அருகில் உள்ள ஆற்றங்கரையில் 'கபிலர்' பெயரில் 'கோட்டம்' ஒன்றை அமைத்து அங்கே ஆண்டுதோறும் அரசின் சார்பில் 'கபிலர் விழா' நடத்த வேண்டும்.

கபிலர் குன்றை முதன்மைக் காரணமாகக் கொண்டு திருக்கோவிலூரைச் சுற்றுலாப் பயணிகள் வந்து பார்வையிடுவதற்கு ஏற்றவாறு கபிலர் குன்றைச் சுற்றி அனைத்து வகையான சுற்றுலா வசதிகளையும் உணவகம், தங்கும் விடுதி ஆகியவற்றையும் ஏற்படுத்தலாம்.

சங்க காலத்தை நினைவுகூரும் வகையில் 'சங்க காலக் கோட்டம்' ஒன்று இதுவரை தமிழ்நாட்டில் எங்கும் அமைக்கப்படவில்லை. சங்க காலத் தலைமைப் புலவர் கபிலர் பாரி வள்ளலின் மகள்களுக்குத் திருமணம் புரிவித்துப் பல ஆண்டுகள் வாழ்ந்து உயிர் நீத்த ஊராகிய திருக்கோவிலூர்தான் சங்க காலக் கோட்டத்தை அமைப்பதற்குத் தமிழ்நாட்டிலேயே மிகவும் பொருத்தமான இடமாகும். எனவே சங்க கால வரலாறு முழுவதும் இடம்பெற்ற 'சங்க காலக் கோட்டம்' ஒன்றையும் கபிலர் கோட்டத்திற்கு அருகில் அமைத்து அங்கே ஆண்டுதோறும் 'சங்க கால விழா' ஒன்றை அரசு நடத்தவேண்டும்.

கபிலர் குன்றை ஒட்டியவாறு ஆற்றின் இரு கரைகளையும் இணைக்கும் தரைப்பாலம் ஒன்று ஏற்கெனவே உள்ளது. வலுவிழந்த நிலையில் உள்ள இப்பாலத்தைச் சிறிது உயரப்படுத்திச் சீரமைப்பதுடன் கரைகளிலிருந்து இப்பாலம் தொடங்கும் இருமுனைகளிலும் கபிலர் பெயரில் மிகப்பெரிய நுழைவு வாயில்களை அமைக்கலாம்.

கபிலர் குன்றின் படிக்கட்டுகளுக்கு நேர் எதிரே ஆற்றில் ஓர் உயரமான நீண்ட பாறை உள்ளது. இப்பாறை மீது கபிலர் பாரி மகளிர் அங்கவை, சங்கவையை மலையமான் திருக்கண்ணன், சிறுகண்ணன் ஆகியோருக்குத் திருமணம் செய்து வைப்பது போலவும் அருகில் மணமகன்களின் தந்தை மலையமான் திருமுடிக்காரி நிற்பது போலவும் பெரிய அளவிலான சிலைகளை அமைக்கலாம்.

கபிலர் குன்றுக்கும் இச்சிலைகள் அமையவிருக்கும் பாறைக்கும் நடுவில் உள்ள இடமும் பாறைகளாகவே உள்ளன. எனவே கபிலர் குன்றையும் சிலைகள் அமையவிருக்கும் பாறையையும் சுற்றி ஆற்றில் சுவர் எழுப்பி இடையில் உள்ள இடத்தில் பூங்கா ஒன்றை அமைக்கலாம்.

சிலைகள் அமையவிருக்கும் பாறைக்கும் அதன் அருகில் செல்லும் தரைப்பாலத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் சுற்றுலாப் பேருந்துகள் வந்து நிற்பதற்கு வசதியாகச் சிமெண்ட் தளம் அமைக்கலாம்.

ஆற்றங்கரையிலிருந்து நேராகக் கபிலர் குன்று பகுதிக்குச் சுற்றுலாப் பயணிகள் நடந்து செல்வதற்குத் தரைப்பாலம் ஒன்றை அமைக்கலாம்.

'திருக்குறளிலே திளைத்து **குறளோவியம்** நூலையும்
வள்ளுவர் கோட்டத்தையும் தந்தார் **கலைஞர்**!"
"சிலப்பதிகாரத்திலே திளைத்துப் பூம்புகார் திரைப்படத்தையும்
புதிய பூம்புகார் நகரையும் தந்தார் **கலைஞர்**!"
என்கின்ற வரலாறு தற்பொழுது நிலவி வருவது போலச்
சங்க இலக்கியத்திலே மூழ்கிச் சங்கத் தமிழ் நூலையும்
கபிலர் கோட்டத்தையும் தந்தார் **கலைஞர்**!"

- என்ற புதிய வரலாறு கலைஞர் அவர்களால் படைக்கப்படும் என்பது உறுதியே!

கலைஞர் அவர்கள் திரும்பவும் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு கபிலர் குன்றைச் சீரமைக்க வேண்டும் என்றும் பள்ளிக்குக் 'கபிலர்' பெயரைச் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றி வைத்த கலைஞர் அவர்கள் இப்பகுதி மக்களின் இக்கோரிக்கைகளை உறுதியாக நிறைவேற்றித்தருவார் என்ற நம்பிக்கை வீண்போகாது; ஏனெனில், **கபிலர், கலைஞர் வியக்கும் கபிலரல்லவா!** ★

# சிறுகதைக்கோர்

# புதுமைப்பித்தன்

## தொ.மு.சி.ரகுநாதன்

இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதைக்கு மகாகவி பாரதி (1882-1921) எவ்வாறு தன்னிகரில்லாத தலை மகனாகத் திகழ்ந்தாரோ, அவ்வாறே தமிழ்ச் சிறுகதைக்குத் தன்னிகரில்லாத் தலைமகனாகத் திகழ்ந்தவர் புதுமைப்பித்தன் ( 1906 - 1948).

பாரதி அமரராகி முக்கால் நூற்றாண்டுக் காலத்துக்கு மேலாகியும், தமிழில் எளிமையும், புதுமையும், வலிமையும் மிக்க நல்ல கவிதைகளை எழுதுவோருக்கும், எழுத விரும்புவோருக்கும் இன்றும் அவரது கவிதைகள் எவ்வாறு பாலபாடமாகவும் மூலபாடமாகவும் விளங்கி வருகின்றனவோ, அவ்வாறே புதுமைப்பித்தன் புகழுடல் எய்திக் கிட்டத்தட்ட அரைநூற்றாண்டுக் காலம் கடந்தும் இன்றும், தமிழில் புதுமையும், வலிமையும், சமூக உணர்வும் மிக்க நல்ல சிறுகதைகளை எழுதுவோருக்கும், எழுத விரும்புவோருக்கும், புதுமைப்பித்தனின் கதைகள் பாலபாடமாகவும், மூலபாடங்களாகவும் விளங்கி வருகின்றன. ஆம், கவிதை உலகில் தமது தனித்த முத்திரையைப் பதித்த பாரதியைப் போல், சிறுகதை உலகில் தமது தனித்த முத்திரையைப் பதித்துவிட்டுச் சென்ற சிறுகதை ஆசிரியர் புதுமைப்பித்தன்.

சொல்லப்போனால், பாரதி காலத்தில் ஏனைய புலவர்கள் உலாவென்றும், மடலென்றும், ஒருதுறைக் கோவையென்றும் பாடித் தமது புலமையைப் புலைப்பொருளாய் வீணடித்துக் கொண்டிருந்த அதே சமயம், பாரதி, நிலைகெட்ட மனிதரை நினைத்து எவ்வாறு நெஞ்சு பொறுக்காமல் பாடினாரோ, அதேபோல் புதுமைப்பித்தனின் சமகாலத் தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்கள் பலரும், காதல், கத்திரிக்காய் என்று கதை பண்ணிக்கொண்டு., அம்மாயி - அத்திம்பேர் - அத்தங்கார் கதைகளையும், அப்பளக் கச்சேரிக் கதைகளையும் எழுதிக் குவித்துவந்த காலத்தில், புதுமைப்பித்தன் ஒருவரே வாழ்க்கையில் பிறர் கண்ணெடுத்துப் பார்ப்பதற்குக் கூசிய சமுதாயச் சீர்கேடுகளையும், அவலங்களையும், சமூக முரண்பாடுகளையும் கீறிப் பிளந்து காட்டி சீறியெழும்பும் கேள்விக் குறிகளை எழுப்பிய கதைகள் பலவற்றையும் எழுதி வந்தார்.

### தாவிச்செல்லும் நடை

அவரது கதைகளில் உருவம், உள்ளடக்கம், உத்தி, நடை எல்லாமே அவர் புனைந்து கொண்ட பெயருக்குப் பொருத்தமாகப் புதுமை வேட்கையில் பிறந்தவையாக விளங்கின. உண்மையில் அவர் தமது கதைகளுக்குத் தேர்ந்தெடுத்துக் கொண்ட உள்ளடக்கமே அவற்றின் உருவம், நடை, உத்தி யாவற்றையும் தீர்மானித்தது எனலாம். அவரே தமது சிறுகதைத் தொகுதியொன்றின் முன்னுரையில், “கருத்தின் வேகத்தையே பிரதானமாகக் கொண்டு, வார்த்தைகளை வெறும் தொடர்புச் சாதனமாக வைத்துத் தாவிச் செல்லும் நடை ஒன்றை அமைத்துக் கொண்டேன். இது நானாக எனக்கு வகுத்துக்கொண்ட பாதை. தமிழ்ப்பண்புக்கு முற்றிலும் புதிது" என்று எழுதியிருக்கிறார். அவரே குறிப்பிட்ட இந்தத் தாவித் தாவிச் செல்லும் தவளைப் பாய்ச்சல் நடை, அவரது ஆரம்பக் காலக் கதைகள் பலவற்றுக்கும் அநாயாசமாகக் கைகொடுத்து உதவியது.

உதாரணமாக, வயிற்றுக்கொடுமையால் வாலிப உடலை விற்றுப் பிழைப்பவருக்கும்கூட, மான உணர்ச்சி உண்டு என்ற கருத்தை வலியுறுத்தித் தாம் எழுதியுள்ள 'கவந்தனும் காமனும்' என்ற கதையில், தெருமுனையில் அவள் நின்ற நிலையை, “அலங்கோலமான ஸ்திதியில் ஒரு பெண். பதினாறு பதினேழு வயது இருக்கும். காலணா அகலக் குங்குமப் பொட்டு, மல்லிகைப் பூ, இன்னும் விளம்பரத்துக்குரிய சரக்குகள்" என்று வருணிக்கிற புதுமைப்பித்தன், “நீங்கள் போட்டிருக்கிறீர்களே பாப்ளின் ஷர்ட், உங்கள் ஷெல் பிரேம் கண்ணாடி! எல்லாம் அவர்கள் வயிற்றில் இருக்க வேண்டியதைத் திருடியதுதான். ரொம்ப ஜம்பமாக, நாசூக்காகக் கண்ணை மூட வேண்டாம். எல்லாம் அந்த வயிற்றுக்காகத்தான்" என்று அந்தப் பெண்ணின் இத்தகைய அவல நிலைக்குக் காரணமான சமுதாயச் சுரண்டலை நறுக்குத்தெறித்தாற்போல் சாடி விடுகிறார். இதேபோல், காய்ச்சலில் கிடக்கும் தன் கணவனுக்குக் கஞ்சி காய்ச்சி ஊற்றுவதற்காகத் தன் கற்பை முக்கால் ரூபாய்க்கு விற்க நேர்ந்த அம்மாளுவின் நிலையைக் கூறும்'பொன்னகரம்' என்ற சேரி மக்களைப் பற்றிய கதையில்,

அங்குள்ளோர் "எல்லோரும் ஏகதேசக் குடியர்கள்தான். 'டல் சீச'னில் பசியை மறக்க வேறு வழி? பசி ஐயா பசி! 'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்று ஒய்யாரமாக, உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே, அங்கு நீர் ஒருநாள் இருந்தால், உமக்கு அடிவயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்!" என்று உல்லாசபுரியாருக்கு நெஞ்சில் உறைக்கிற மாதிரிச்சாட்டையடி கொடுத்துவிட்டுக் கதையைத் தொடர்கிறார்.

இவ்வாறு ஓரிரு வார்த்தைகளைப் பிரயோகித்து, உள்ளத்தில் ஊசி குத்துகிற மாதிரி சில உண்மைகளை உணர்த்தி விடுவது புதுமைப்பித்தனுக்குக் கைவந்த கலையாக இருந்தது. உதாரணமாக, பாலிய மணத்தின் கொடுமையைக் கருவாகக் கொண்ட 'ஆண்சிங்கம்' என்ற கதையை, "சீனிவாசனுக்குக் கலியாணமானது நினைவில் இல்லை. ஏனெனில் அது பெப்பர்மின்ட் கலியாணம்" என்று நெஞ்சில் தைக்கிற மாதிரிக் கூறிவிட்டுத் தான் கதையை மேலும் தொடர்கிறார். இதுபோல், இலங்கைத் தேயிலைத் தோட்டத்தில் வெள்ளைக்கார முதலாளிகளின் சுரண்டலுக்கு ஆளாவதோடு, அவர்களிடம் தமது, கற்பையும் பறிகொடுக்க நேர்ந்த அபலைப் பெண்களின் வாழ்க்கையைப் பற்றிக் கூறும் 'துன்பக்கேணி' என்ற கதையில், வெள்ளை முதலாளிகளுக்குத்தேயிலைத் தோட்டக்கூலி பெண்களை 'ஏற்பாடு' செய்து கொடுக்கும் ஸ்டோர் மானேஜரைப் பற்றிக் கூற வரும்போது, அவர் "கண்ணப்ப நாயனார் ரகத்தைச் சேர்ந்த பேர்வழி. தனது இஷ்ட தெய்வத்துக்குத் தான் ருசித்துப் பார்த்துத்தான் சமர்ப்பிப்பார்" என்று உவமித்துக்கூறி, அந்தப் பெண்களின் கற்பு பலராலும் சூறையாடப் படுவதைப் புதுமைப்பித்தன் உணர்த்தி விடுகிறார்.

காலத்துக்கும் களத்துக்கும் ஏற்ற நடை மாற்றம்

இதுபோலவே 'ஒரு நாள் கழிந்தது' என்ற கதையில், "சென்னையில் ஒட்டுக் குடித்தனம் என்பது ஒரு ரசமான விஷயம். வீட்டுச் சொந்தக்காரன் குடியிருக்க வருகிறவர்கள் எல்லோரும்



திருக்கழுக்குன்றத்துக் கழுகு என்று நினைத்துக் கொள்வானோ என்னவோ?" என்று எழுதுகிறார் புதுமைப்பித்தன். எங்கிருந்து வந்தது, பிறகு எங்கே சென்றது என்ற சுவடே தெரியாமல், உணவு நேரத்துக்கு மட்டும் வந்து தலைகாட்டிவிட்டு மறையும் திருக்கழுக்குன்றத்துக் கழுகை அறிந்தவர்கள், இந்த உவமானத்தின் மூலம் புதுமைப்பித்தன் ஒட்டுக் குடித்தனத்தில் அடங்கியுள்ள உபத்திரவங்களையெல்லாம் ஒரே வரியில் எவ்வாறு உணர்த்தி விடுகிறார் என்பதைச் சுலபமாக உணரலாம்.

புதுமைப்பித்தன் கதைகள் எல்லாமே இத்தகைய தவளைப் பாய்ச்சல் நடையிலேயே இருந்தன என்று சொல்ல முடியாது. கவிதையின் உள்ளடக்கத்துக்கும் உணர்ச்சிக்கும் ஏற்ப எவ்வாறு தாள லயமும் சொல்லாட்சியும் மாறுகின்றனவோ, அதேபோல் புதுமைப்பித்தன் கதைகளிலும், கதையின் கருப்பொருளுக்கும் காலத்துக்கும் களத்துக்கு ஏற்ப நடையும் மாறும்.

சிலர் சமூகக் கதை எழுதினாலும், சரித்திரக் கதை எழுதினாலும், தம்புராவைப் போல ஒரே சுருதியில் ஒரே மாதிரியான நடையில் எழுதிச்செல்வர். ஆனால் புதுமைப்பித்தன் கதைகளில் அவரது வசன நடை ஒரே சுருதியில் பேசிக் கொண்டிராது. கதையின் கரு, காலம், பாத்திரம், களம் ஆகியவற்றுக்கேற்ப அவரது நடையும் சுருதியும் கதியும் மாறிப் பேசும். எடுத்துக்காட்டாக திருநெல்வேலி வட்டார வாழ்க்கை பற்றிய கதையான 'நினைவுப்பாதை' என்ற கதையில், 'மேலச்சேவல் வைரவன் பிள்ளை' என்ற பாலசுப்பிரமணியப் பிள்ளையின் மனைவி வள்ளியம்மை ஆச்சி நேற்றுத்தான் இறந்துபோனாள்...இன்று காடேற்று, நீண்ட நாள் வியாதி ஒன்றும் இல்லை. போன சனிக்கிழமை புழக்கடையில் கால் வழுக்கி விழுந்தாள். இடுப்பிலும் விலாவிலும் ஊமையடி அதில் படுத்தவள்தான், எழுந்திருக்கவே இல்லை" என்றுதான் கதையே தொடங்கும். தொடர்ந்து, "போன மாசமே சுப்புப்பிள்ளை அண்ணாச்சி சொல்லலே... ஆச்சிக்கு ஒரு கண்டமிருக்குன்னு. நானும் அன்னைக்கு விளையைப் பாத்துட்டு வரப்போ பேசிக்கிட்டுத் தானே வந்தேன். வெள்ளிக்கிழமை கழிஞ்சாத்தான்னார். காலன் வாரதுக்குக் கணக்கின்னும் நேரமின்னும் உண்டுமா?" என்று சுந்தரம் பிள்ளை வட்டார வழக்கில் பேசுவதும் நமக்குக் கேட்கும்.

உவமைகளும் உருவகமும்

இதேபோல் அவர் இருபதாம் நூற்றாண்டின் வட்டார வாழ்க்கையை விட்டுவிட்டு, மாணிக்கவாசகர்

**ஓரிரு வார்த்தைகளைப் பிரயோகித்து உள்ளத்தில் ஊசி குத்துகிற மாதிரி சில உண்மைகளை உணர்த்திவிடுவது புதுமைப்பித்தனுக்குக் கைவந்த கலையாக இருந்தது.**

காலத்துக்குச் சென்று, பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி வாங்கிய பித்தனைப் பற்றிய 'அன்றிரவு' என்ற கதையை எழுத முனையும்போதோ, அவரது நடை காவிய கம்பீரத்தையும் கனத்தையும் பெற்றுவிடுகிறது. உதாரணமாக, சொக்கேசனின் வருகையை எதிர்பார்த்து, அங்கயற்கண்ணி ஊஞ்சலாடிய காட்சியைப் புதுமைப்பித்தன் பின்வருமாறு வருணிக்கத் தொடங்கிவிடுகிறார். "விளக்கமற்ற வெளிச்சத்திலே, புலன்விளக்கு எட்டாத ஒளிப்பிரவாகத்திலே, மணியூசல் விசையோடு ஆடியது. அளகச்சுருள், புலன் உணர்வு நுகரும் இருட்டுடன் இருட்டாகப் புரள, கால் விசைத்து, உந்திச்சுழி குழிந்து, அலைபோல் உகள, கொங்கை பூரித்து விம்மிக் குலுங்க, அன்னை மணியூசல் ஆடினாள். ஆலவாய் ஈசன் அழகன் சொக்கன் வருகை நோக்கி மணியூசல் ஆடினாள். அங்கயற்கண்ணியின் அதரத்திலே கீற்றோடிய புன்சிரிப்பு; மருங்கிலே துவட்சி, கண்களிலே விளையாட்டு; நெஞ்சிலே நினைவு. செல்வி மணியூசல் ஆடினாள். அண்டபகிரண்டங்களையும் சகல சராசர பேதங்களையும் தன்னுள் அடக்கும் ஆலிலை வரிவிட்டுப் புரண்டு விளையாடியது".

இதேபோல் புதுமைப்பித்தன் கையாள்கின்ற உவமையும் உருவகமும் கூடப் புதிய அனுபவத்தை வழங்குபவையாக விளங்கும். 'மனித எந்திரமாக' வாழும் வர்த்தகக் குமாஸ்தா மீனாட்சி சுந்தரம் பிள்ளையை அவர், 'பொறுப்பு, ஏமாற்று, சுயமரியாதை, நம்பிக்கை என்று நியதியற்றுச் சுழலும் ஒரு கிரக மண்டலத்தையே தூக்கிச் சுமக்கும் பிறவி'யாக இனம் காட்டுவார். "தமிழ்க் கவிஞர்களின் கனவுகள் எல்லாம் திரண்டு வடிவெடுத்தது போன்றது அவள் தேக அமைப்பு" என்று அழகியொருத்தியை அவர் அடையாளம் காட்டுவார். "எங்கெங்கோ வாரியிறைத்த பிரமதேவனின் நம்பிக்கைகள் போல, வாழ்க்கை எரியிட்ட கனல்கள் போன்ற" என்று நட்சத்திரங்களை அவர் வருணிப்பார். அந்திமாலையின் செக்கர் மயக்கத்தை, "அந்தித் தேவனின் சோக நாடகம், அந்தச் சாயங்காலம் சீதையின் சோகத்தையும் கதேயின் பாஸ்டையுமே நினைவுக்குக் கொண்டு வரும்" என்று புதுமையாகக் குறிப்பிடுவார்.

உத்திகள் என்று பார்த்தால் புதுமைப்பித்தன் தமது கதைகளில் கையாண்ட உத்திகள் பலப்பல. அவை அவர் எடுத்துக்கொண்ட கதைப்பொருளுக்கும் வலியுறுத்த விரும்பும் கருத்துக்கும் ஏற்பவே வடிவெடுத்தன. கதையை, இப்படித்தான் தொடங்கவேண்டும், இப்படித்தான் முடிக்க வேண்டும் என்ற எந்த சம்பிரதாயமான தடத்தையும் அவர் பின்பற்றியதில்லை. யானை போனால் அது போன வழிதான் அதற்குத்தடம் என்பது போலவே அவரது உத்தியும் இருந்தது. அவரே தமது கட்டுரையொன்றில், "சிறுகதைக்கும், தனிப்பாட்டு என்ற 'லிரிக்'குக்கும் உள்ள வித்தியாசம் ஒன்றுதான். வரிக்கு ரூபம் அவசியம். சிறுகதையில் ரூபம் கதை எழுதுவோனின் மனோதர்மத்தைப் பொறுத்தது" என்று கூறுகிறார். எடுத்துக்காட்டாக, ஒரு மரணத்தைக் கருப் பொருளாகக் கொள்ளும் கதாசிரியர்கள் பலரும், அந்த மரணம் நிகழ்வதையே முத்தாய்ப்பாக்கி, அதனைக் கதையின் இறுதியில்தான் கூறுவார்கள். ஆனால் புதுமைப்பித்தன் தமது 'செல்லம்மாள்' என்ற கதையைக் கூறும்போது, 'செல்லம்மாளின் மூச்சும் அடங்கிற்று" என்றுதான் கதையைத் தொடங்குகிறார். கதையின் முடிவிலோ இறந்துபோன செல்லம்மாளை நமது இதயத்தில் வாழவைத்துவிடுகிறார்.

**மைல் கல், சகாப்தம்**

1943இல் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் 'புதுமைப்பித்தன் கதைகள்' என்ற தலைப்பிலேயே அவர் உரையாற்றியபோது, அவரே இவ்வாறு குறிப்பிட்டார்: "இவ்வாறுதான் கதை எழுதவேண்டும் என்று சிலர் சொல்கிறார்கள். அவ்வாறு பாத்தி கட்டிக்கொண்டு கதை எழுத என்னால் முடியாது. சில எழுத்தாளர்களுக்கு நிலவும் தென்றலும் வராவிட்டால் கதையே வராது. ஆனால் எனது செண்பகராமன் பிள்ளை இருட்டிலேதான் புறப்பட்டுப்போனார். இருட்டிலேயே திரும்பி வந்தார். "சம்சார பந்தத்தில் சலிப்பேற்பட்டு சன்னியாசியாகப் புறப்பட்டுச் சென்ற செண்பகராமன் பிள்ளை மீண்டும் சம்சாரபந்தத்துக்கே திரும்பி வர நேர்ந்ததை விவரிக்கும் 'சித்தி' என்ற தமது கதையைக் கருத்தில் கொண்டே புதுமைப்பித்தன் இவ்வாறு கூறினார்.

பாரதியைப்போல, புதுமைப்பித்தனும் அற்பாயுசில் மறைந்தவர்தான். அவரது இலக்கிய வாழ்க்கைக் காலமும் இருபது ஆண்டுகளுக்குக் குறைந்ததுதான். இந்தக் குறுகிய காலத்துக்குள் அவர் மொத்தத்தில் ஏறத்தாழ நூறு கதைகளே எழுதியிருக்கிறார். எனினும் அவற்றில் பலவும் நூறாண்டுகாலம் மங்காது வாழும் தெம்பும் திறனும் படைத்தவை.

ஆம் தமிழ்ச் சிறுகதை வரலாற்றிலும் வளர்ச்சியிலும் புதுமைப்பித்தன் ஒரு மைல்கல், ஒரு திருப்புமுனை; ஒரு சகாப்தம், அதில் சந்தேகமில்லை.

★★★

## கால்நடை பராமரிப்பு

★ கால்நடை மற்றும் கோழி இனங்களுக்கு அதிக அளவிலான உடல் நலன் பேணும் நோக்குடன் 10 கால்நடை மருந்தகங்களை, கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன; பத்து புதிய இடங்களில் கால்நடை மருந்தகங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. கடலூர் மாவட்டம், விருத்தாச்சலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு கால்நடை பராமரிப்புக் கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

★ கால்நடைகளுக்குத் தீவிர உடல்நல சிகிச்சை அளிக்கும் பொருட்டு 1997ஆம் ஆண்டு 60 இடங்களில் புதிய கால்நடை மருந்தகங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன; 20 கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 3 கால்நடை மருத்துவமனைகளை பிரதம மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. கால்நடை பராமரிப்புத்துறையின் நிர்வாக நலனை முன்னிட்டும் மேற்பார்வையின் திறனை அதிகரிக்கும் நோக்குடனும் புதிதாக 6 மண்டலங்கள் தோற்றுவிக்கப்பட்டன. 2126 கிராமங்களில் ரூ.42.5 இலட்சம் செலவில் கால்நடை உப கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

★ தேசிய வெக்கை நோய் தடுப்புத் திட்டத்தின் தீவிர தடுப்பூசிப் பணி திட்டத்தின் பலனாக மாநிலமெங்கும் கால்நடைகளுக்கும், ஆடுகளுக்கும் அதிக அளவில் ஏற்படும் இறப்புத் தவிர்க்கப்பட்டுள்ளது.

★ புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்சமயம் செயல்பட்டு வரும் டென்மார்க் கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தினை, இரண்டாவது கட்டமாக, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களின் 46 பஞ்சாயத்து யூனியன்களுக்கு ரூ.27.50 கோடி செலவில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

## பால்வளம்

★ கடந்த 1½ ஆண்டுகளில், 17 மாவட்ட ஒன்றியங்கள், 10,446 முதன்மைச் சங்கங்கள் ஆகியவற்றின் சீரிய பணிகளின் வாயிலாக, நாளொன்றுக்கு 16.4 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

★ இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 1995-96, 1996-97ஆம் ஆண்டுகளில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூ.336.63 இலட்சங்கள், 100% மான்யமாக வழங்க தேசிய பால் நிறுவனம் இசைவு நல்கியுள்ளது.

★ ஆதிதிராவிடர் நல்த்திட்டத்தின் கீழ், கறவை மாடுகள் வாங்க ஆதிதிராவிடர் பயனாளிகளுக்கு 50% மானியத்தில் கடனுதவிகள் வழங்கப்படுகின்றன.

### அட்டைப்பட விளக்கம்:

**முதல் பக்க அட்டை:**

சர்தார் வேதரத்தினம் பிள்ளை அஞ்சல் தலை வெளியீடு

**இரண்டாம் பக்க அட்டை:**

கபிலர் குன்று

**கடைசிப்பக்க அட்டை:**

கூட்டுறவுத் துறையின் சில பணிகள்

# பறந்து செல்க!



- கவிஞர் சாமி.பழநியப்பன்

காதலெனும் உயிர்ப்பொருளை மூட்டை கட்டி
கடைத்தெருவில் விலைபேசி விற்று விட்டு
மாதர்களை மதுவுலரும் மலர்க ளாக
மதிக்கின்றார் இந்நாளில் இவ்வையத்தார்!

கொதிக்கின்ற உள்ளமே உனக்கிப் பாரில்
குடியிருப்புக் கிடமில்லை பறந்து செல்க !

உடுப்பதுவும் உண்பதுவும் அல்லால் தன்னை
உய்வித்த தாய்நாட்டை உளத்தே எண்ணிக்
கடுகளவும் தொண்டுசெயற் கெண்ணி டாமல்
கண்மூடி வாழுகிறார் இவ்வையத்தார்!

கொதிக்கின்ற உள்ளமே உனக்கிப் பாரில்
குடியிருப்புக் கிடமில்லை பறந்து செல்க !

தெய்வங்கள் பலவாக்கி மக்கள் நெஞ்சில்
தீமைநிறை மடமையினை வளரச் செய்யும்
பொய்யர்களைப் பொய்யரென் றறிந்திடாமல்
போற்றுகிறா(ரி) இந்நாளில் இவ்வையத்தார்!



கொதிக்கின்ற உள்ளமே உனக்கிப் பாரில்
குடியிருப்புக் கிடமில்லை பறந்து செல்க!

வகையற்ற மக்களின்நல் வாழ்விற் காக
வாகையுறுஞ் செயலேதும் ஆற்றி டாமல்
நகைமுகத்தைக் காட்டிநமை நாசஞ் செய்யும்
நரியார்தாள் பணிகின்றார் இவ்வையத்தார்!

கொதிக்கின்ற உள்ளமே உனக்கிப் பாரில்
குடியிருப்புக் கிடமில்லை பறந்து செல்க!

அறிவுடைமை என்பதனை ஆடிக் காற்றில்
அகன்றோடும் பதராகப் பறக்க விட்டு
பிறரையுமந் நிலைமைக்குள் ளாக்கு கின்ற
பெற்றியினர் நிறைந்துள்ளார் இவ்வையத்தே!

கொதிக்கின்ற உள்ளமே உனக்கிப் பாரில்
குடியிருப்புக் கிடமில்லை பறந்து செல்க!

# எங்கள் ஊர்ப் பிரச்சினை

**பிரச்சினை :**

கன்னியாகுமரி மாவட்டத்தில் பரவன்-பரதர் சமுதாய மக்கள் ஏழை மீனவர்கள். இவர்கள் பெரும்பாலும் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள். எங்கள் குழந்தைகள் கல்வி மற்றும் வேலைவாய்ப்புப் பெறத் தேவைப்படும் சாதிச் சான்றிதழ் 89ஆம் ஆண்டு முதல் 93ஆம் ஆண்டின் தொடக்க காலம் வரை, மிகவும் பிற்படுத்தப்பட்டவர் (Most Backward class) என வழங்கப்பட்டது. ஆனால் 1993ஆம் ஆண்டின் இடைக்காலம் முதல் தொடர்ந்து 97ஆம் ஆண்டு வரையிலும் பிற்பட்டோர் (Backward class) என வழங்கிவருகின்றனர். ஆனால் தமிழகத்தின் பிற மாவட்ட பரவன்-பரதர் சமுதாய மக்களுக்கு "மிகவும் பிற்படுத்தப்பட்டோர்" (Most Backward class) என்று சாதிச் சான்றிதழ் வழங்கிவருகின்றனர். ஒரு வீட்டில் இரு குழந்தைகளுக்கு ஒருவருக்கு Most Backward Class என்றும் அடுத்தவருக்கு Backward Class என்றும் உள்ளது. இதனால் - பள்ளி, கல்லூரிகளில் குழப்ப நிலை ஏற்படுகின்றது. எனவே, தாங்கள் தயவுசெய்து கன்னியாகுமரி மாவட்ட ஏழை மீனவ மக்கள் பயன்பெற, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம்பெற, இப்பிரச்சினையைத் தமிழரசு புத்தகத்தில் இடம்பெறச் செய்து அதன் தீர்வையும் தருமாறு வேண்டுகிறேன்.

பரவன்-பரதர் சமுதாயமக்கள்,
மருங்கூர்-629 402.
கன்னியாகுமரி மாவட்டம்.



**தீர்வு :**

அரசு ஆணையில் வரிசை எண்.27இல் பரவர் இனத்தவர் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலியிலுள்ள செங்கோட்டா வட்டங்களில் ஆதிதிராவிடர் எனவும் மாநிலத்தின் பிற பகுதிகளில் இவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர் எனவும் ஆணையிடப் பட்டுள்ளது. இதில் கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாறியவர்களும் அடங்குவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு ஆணை எண்.28/பிற்பட்டோர் நலம், நாள்:19.7.94 பத்தி-1ல் இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய அனைவரும் பிற்பட்டவர்களாகவே கருதப்படுவர் என ஆணையிடப்பட்டுள்ளது. எனவேதான், அந்த ஆணை வரப்பெற்ற தேதி முதல் பரவர் இனத்தவருக்கும் தற்போது பிற்பட்டவர் எனச் சான்று வழங்கப்பட்டு வருகிறது.

**ஆர்.சுப்பிரமணியன்,**
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

**பிரச்சினை:**

வேலூர் மாவட்டம், வாலாசா வட்டம், செங்காடு கிராமத்தில் அமைந்து இருக்கும் அரசுக்குச் சொந்தமான ஸ்ரீவைகுண்ட பெருமாள் கோயில் உள்ளது. இந்தக் கோயில் மிகவும் பழைமை வாய்ந்த கோவில். இதற்குச் சொந்தமான நஞ்சை நிலம் 7 ஏக்கர், பாசனக் கிணறும் உள்ளது. தவிர, தமிழ்நாடு தலைநகர் சென்னையில் திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி கோயில் பின்புறம் இந்தக் கோயிலுக்குச் சொந்தமான ஓட்டு வீடும் உள்ளது. இவ்வளவு சொத்துக்கள் இருந்தும் விளக்குகள் ஒன்றுகூட எரிவது கிடையாது. பூஜை நடந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. கோயில் ராஜகோபுரம் இடிந்து விட்டது. புஜ கம்பம் (காம்பவுண்ட்) சுற்றுச் சுவர் மற்றும் அறைகள் எல்லாம் மிகவும் பழுது அடைந்து உள்ளது. இந்தக் கோயில் எங்கள் கிராமத்திற்குச் சுற்று வட்டக் கிராமங்களுக்கு மிகவும் பெயர் பெற்ற கோயில். எனவே, இக்கோயிலின் பழுது நீக்கிப் புதுப்பித்துத் தரும்படி தங்களை மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**ந.வடிவேலன்,**
செங்காடு, வேலூர் மாவட்டம்.

**தீர்வு:**

வேலூர் மாவட்டம், வாலாசா வட்டம், செங்காடு ஸ்ரீவைகுண்ட பெருமாள் திருக்கோயில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் உள்ள பட்டியலில் சாராத - ஆனால் ஆளுகைக்குட்பட்ட கோயில் என்பதால் செயல் அலுவலரால் திருக்கோயில் நிர்வாகம் கவனிக்கப்பட்டு வருகிறது.

இத் திருக்கோயிலுக்கு மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு ஏழு ஏக்கர் நஞ்சை புஞ்சை நிலங்களும், சென்னையில் திருவல்லிக்கேணி பகுதியில் வீடும் உள்ளது. நிலங்கள் அனைத்தும் துறை சட்ட விதிகளின்படி பொது ஏலத்தில் குத்தகை விடப்படுகிறது. சரியான பாசனவசதி இல்லாத காரணத்தாலும், கிராம முரண்பாடுகளின் காரணமாகவும், அதிகத் தொகைக்குக் குத்தகை எடுக்க வாய்ப்பில்லை. ஏற்கெனவே, குத்தகை எடுத்த குத்தகைதாரர்கள் நிலுவை குத்தகைத் தொகையினை முறையாகக் கட்டுவதில்லை. நிலுவைத் தொகையினை வசூல் செய்ய அவ்வப்போது துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சொற்பமாக



வசூல் ஆகும் தொகையில் திருக்கோயில் பூஜை சாமான்கள், எண்ணெய் வாங்குவதற்கும் செலவிடப் படுகிறது. ஆலய அர்ச்சகரால் பூஜை ஒழுங்காக நடைபெற்று வருகிறது.

இவ்வாலயத்திற்கு சொந்தமாகச் சென்னை நகரில் உள்ள வீட்டின் வாடகை, வரப்பெறாமையால், வாடகை நிலுவைக்காகவும், வீட்டைக் குடியிருப்பவர் காலி செய்யவும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வாடகைதாரர் மீது வழக்குத் தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

இத்துறையின் கீழ் உள்ள ஆலயத்திற்குத் திருப்பணி மேற்கொள்ளும்போது துறை உதவிப் பொறியாளரால், மதிப்பிடு தயாரிக்கப்பட்டு திருப்பணிக்காக ஆகும் செலவுத் தொகை ஒன்றில் மூன்று பங்கு பொதுமக்கள் மூலம் நன்கொடை பெற்றுத்தான் வேலைகள் துவங்கமுடியும், ஊர்ப் பொது மக்கள் ஆலயத் திருப்பணிக்காக - உபயமாக நிதி உதவியினைப் பெரும் அளவில் அளித்தும், அரசின் நிதி உதவியும் பெற்றுத்தான் ஆலயத் திருப்பணி செய்யப்பட வேண்டும். ஆலயத்திற்கு வரவினம் அதிகப்படியாக இல்லாத நிலையில் ஆலயம் புதுப்பிக்கப்பட இல்லாமல் இருக்கும் நிலை தொடர்கிறது என்பதைக் கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- ப.வி.ச. டேவிதார், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
வேலூர் மாவட்டம்.

**பிரச்சினை :**

பெரியார் மாவட்டத்தில் சத்தியமங்கலத்திலிருந்து 14 கி.மீ தொலைவில் உள்ளது காவிலிப்பாளையம் என்ற கிராமம். இந்தக் கிராமத்தில் தண்ணீர் மிகவும் பிரச்சினையாக உள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன் ரூ.200/- பைப் பராமரிப்புக்காக அனைவரும் கட்டினோம். பணத்தைக் கடைசித்தேதி அறிவித்து குறித்த நேரத்தில் தவறாமல் சரியாக வசூல்செய்து விட்டார்கள். ஆனால் 10 நாட்களுக்கு ஒரு முறை 4 நாட்களுக்குத்தண்ணீர் தடைப்படுகிறது. காரணம் வண்டிப்பாளையம் (தண்ணீர் வரும் வழி) என்ற இடத்தில் அடிக்கடி பி.வி.சி பைப்பை உடைத்து வயல்களுக்குத் திசை திருப்பிக்கொள்கிறார்கள். மாதத்தில் தவறாமல் 3 முறை இவ்வாறு நடக்கிறது. பி.வி.சி. பைப்பிற்குப் பதிலாக இரும்புக் குழாய்கள் போட்டால் நன்றாக இருக்கும். இதற்கு அரசு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், இங்குச் சரியான ரோடு வசதி, தெரு விளக்கு வசதிகள், ஆஸ்பத்திரி வசதி இல்லை. இப் பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து வைக்க தாங்கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

- ஊர்மக்கள்
காவிலிப்பாளையம், ஈரோடு மாவட்டம்.

**தீர்வு :**

காவிலிப்பாளையம் குக்கிராமத்திற்குத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் புதுக்கொத்துக்காடு கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மேற்கண்ட கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் முறையாக வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், காவிலிப்பாளையம் குக்கிராமத்திற்குச் சாலை வசதி, தெருவிளக்கு வசதிகள், ஆஸ்பத்திரி வசதி போன்றவைகளை ஊராட்சியின் நிதி வசதியைப் பொறுத்து முன்னுரிமை அடிப்படையில் ஊராட்சியின் மூலம் செய்துகொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-வளர்ச்சி அலுவலர் (சிற்றூராட்சி)
ஈரோடு மாவட்டம்.

**பிரச்சினை :**

எங்கள் ஊர் ஈரோடு மாவட்டம், அந்தியூர் ஒன்றியத்திற் குட்பட்ட பர்கூர் ஊராட்சியில் உள்ள சுண்டப்பூர் ஆகும். இங்கு சுமார் 300 குடும்பங்கள் வாழ்ந்துவருகின்றனர். இந்த ஊருக்குச் சரியான பாதை வசதி இல்லை. இவ்வூர் காட்டு விலங்குகள் வசிக்கும் பகுதியில் வனத்தில் உள்ளது. இவ்வூர் மக்கள் மளிகைப் பொருட்கள் வாங்க வேண்டுமெனில் காட்டுப்பகுதியில் 8 கி.மீ. வனப் பகுதியில்தான் நடந்து வரவேண்டும். இந்தப் பகுதிக்கு பஸ், லாரி, போன்ற போக்குவரத்து வசதி ஏதுமில்லை. சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு இந்த ஊருக்குப் பஞ்சாயத்து ரோடு போடப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு, தண்ணீர் வசதி இல்லை, கிணறு இல்லை, போர்வெல் இல்லை, மருத்துவ வசதி இல்லை. மருத்துவ சிகிச்சைக்கு, தொட்டில்கட்டி பர்கூர் அல்லது அந்தியூர் 32 கி.மீ. செல்லவேண்டும். எனவே, தாங்கள் தக்க நடவடிக்கை எடுத்து எங்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

- ஊர்ப்பொதுமக்கள்
சுண்டப்பூர், ஈரோடு மாவட்டம்.

**தீர்வு :**

பர்கூர் ஊராட்சி சுண்டப்பூர் பர்கூரிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. மேற்படி கிராமம் தாமரைக்கரை - பர்கூர் சாலையிலிருந்து 4 கி.மீட்டர் தள்ளி வனப் பகுதிக்குள் அமைந்துள்ளது. மெயின் ரோட்டிலிருந்து குடியிருப்புக்குச் செல்லும் சாலை வனத்துறைச் சாலை ஆகும். வனத்துறைச் சாலையை ஊராட்சியிலிருந்து பழுது

பார்க்க இயலாது. சுண்ணாப்பூர் குடியிருப்பில் சுமார் 125 வீடுகள் உள்ளன. மக்கள் தொகை சுமார் 600. இக் குடியிருப்பில் திறந்தவெளி குடிநீர்க் கிணறுகள் உள்ளன. நடப்பாண்டில் குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து புதிய குடிநீர் கிணறுவெட்டித் தரைமட்டத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்யத் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. பப்பூரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

வளர்ச்சிஅலுவலர் (சிற்றூராட்சி)
ஈரோடு மாவட்டம்.

**பிரச்சினை :**

எங்கள் ஊரில் குடிநீருக்காக ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி உள்ளது. இதன் மூலம் விநியோகமாகும் குடிநீர் அனைத்துப் பகுதிகளுக்கும் சீராகச் செல்வதில்லை. குறிப்பாகப் பேருந்து நிலையம் அருகில் உள்ள பகுதிகளுக்குச் சரியாக குடிநீர் கிடைப்பதில்லை. தாழ்வான பகுதிகளுக்கே நீர் அனைத்தும் சென்றுவிடுகிறது. மேலும் பேருந்து நிலையத்தில் அருகில் உள்ள ஆழ்துளைக் குழாய் கிணற்றில் நீர் வருவதே கிடையாது. மேலும் இந்தப் பகுதியில் உள்ள அரசு கிணற்றில் ஒரே ஒரு உருளை மட்டுமே உள்ளது. அதுவும் எந்த நிமிடம் கிணற்றுக்குள் விழுமோ தெரியவில்லை. எனவே, எங்கள் பகுதியில் சீரான குடிநீர் விநியோகத்திற்கும் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கவும், கிணற்றுக்கு உருளைகள் போடவும் ஏற்பாடு செய்து தருமாறு எங்கள் ஊர் பொதுமக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மு. ரவிச்சந்திரன்
வெள்ளித்திருப்பூர்,
ஈரோடு மாவட்டம்.



**தீர்வு :**

வெள்ளித்திருப்பூரில் காவிரிக்காட்டூர்கூட்டுக் குடிநீர்திட்டத்தின் மூலம் நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து விநியோகம் ஆகும் வைப்புகளை மேடான பகுதிகளுக்கும் குடிநீர் சீராகச் செல்லும் வகையில் ஊராட்சிப் பணியாளர்களை வைத்துச் சரி செய்யப்பட்டுள்ளது.

வெள்ளித்திருப்பூர் பேருந்துநிலையம் அருகில் இருக்கும் ஆழ்குழாய்க் கிணற்றில் நீர் ஊற்று வற்றிவிட்டது. இருப்பினும் அப்பகுதியில் குடியிருக்கும் பொது மக்களுக்குக் காவிரிகூட்டுக்குடி நீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் செல்வதால் தண்ணீர் பிரச்சினை இல்லை.

வெள்ளித்திருப்பூர் பேருந்துநிலையம் அருகில் இருக்கும் கிணற்றுக்கு மேலும் இரு இரும்பு உருளைகள் போடப்பட்டு, தண்ணீர் எடுக்க வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், அருகில் உள்ள திறந்தவெளிக் கிணறுகளுக்கும் எட்டு இரும்பு உருளைகள் தண்டவாளங்கள் போன்றவை ஊராட்சி நிதியிலிருந்து வாங்கிப் பொறுத்தப்பட்டுள்ளது.

மேலும், வெள்ளித்திருப்பூர் ஊராட்சியில் முலையூர் என்ற குக்கிராமத்தில் பொதுமக்களின் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்க புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. ஒன்றியப் பொது நிதியிலிருந்து வெள்ளித் திருப்பூர் ஊராட்சி, செட்டிப்பாளையம் எம்.ஜி.ஆர். நகரில் ரூ.50,000/ மதிப்பில் ஆழ்குழாய்க் கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சி அலுவலர் (சிற்றூராட்சி)
ஈரோடு மாவட்டம்.

**பிரச்சினை :**

ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், வீராட்சிமங்கலம் அதிக அளவு தாழ்த்தப்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். நூலகத்திற்கு வருகைபுரியும் வாசகர்கள் நூறுக்கு மேல் இருக்கும்.

ஆகவே, தாராபுரம் வட்டம், வீராட்சி மங்கலம் கிரர்மக் கிளை நூலகத்திற்கு க.ச.எண்.215 இடம் தருவதற்குப் பஞ்சாயத்து தயாராக இருக்கிறது. எனவே, வீராட்சிமங்கலம் கிளை நூலகத்திற்குக் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்து தருமாறு எமது அமைப்பின் சார்பாகக் கோருகிறோம்.

தேவேந்திரகுல வேளாளர் கூட்டமைப்பு
ஈரோடு மாவட்டம்

**தீர்வு :-**

ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம் வீராட்சிமங்கலம் கிளை நூலகத்திற்குப் பெறப்பட்டுள்ள காலிமனையில் கிளை நூலகக் கட்டடம் கட்ட ஈரோடு மாவட்ட நூலக அலுவலருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். கட்டடம் விரைவில் கட்டப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது நூலக இயக்குநர்
சென்னை - 2.

**பிரச்சினை:**

நீலகிரி மாவட்டம் கூடலூர் தாலுக்காவில் அம்பலவயல் அரசு உயர்நிலைப்பள்ளியில் சுமார் 500க்கு மேற்பட்ட மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

மாணவர்களாகிய எங்களுக்குப் பேருந்து வசதியின்மை முக்கியத் தடையாக உள்ளது. நாங்கள் தினம் 8 கிலோ மீட்டர் தூரம் நடந்து வருகிறோம். 12 ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருந்த பேருந்தையும் நிறுத்திவிட்டார்கள்.



இதனால் நாங்கள் குறித்த நேரத்தில் பள்ளி செல்ல இயலாமல் பெரும் அவதிக்குள்ளாகிறோம்.

எனவே, எங்களின் பேருந்து வசதியை உடன் பூர்த்தி செய்யத் தாங்கள் தக்க நடவடிக்கை எடுத்துதவுமாறு மிகவும் பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

மாணவ, மாணவியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி
அம்பலவயல், மூனநாடு அஞ்சல்,
நீலகிரி

**தீர்வு :**

**கூ**டலூரிலிருந்து அம்பலவயல் வரை இயக்கம் செய்து இரவு அம்பலவயலில் தங்கல் செய்யப்படும் பேருந்தில் டீசல் திருடப்பட்டுள்ளது. இது குறித்து காவல்துறையிடம் புகார் கொடுக்கப்பட்டு பின்னர் பேருந்து இயக்கம் தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளது. பயணிகள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளின் நலனை கருத்தில் கொண்டு கடந்த 2.12.97 முதல் பேருந்து இயக்கம் செய்யப்பட்டு வருகிறது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொது மேலாளர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
கழகம் (கோவை-கோட்டம்3)

**பிரச்சினை :**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 52 வார்டு பகுதியைச் சேர்ந்த கல்வங்காடு கிராம மக்கள் உய்யக் கொண்டான் ஆற்றங்கரையைப் பாதையாகப் பயன்படுத்திவருகிறோம். இதைத் தவிர வேறு பாதை கிடையாது. எங்கள் பகுதிக்குப் போதிய பாதை வசதி இல்லாத காரணத்தால் நெடுஞ்சாலையை அடைவதற்கு நாங்கள் படும்பாடு அளவில்லததாகும். மேற்படி பாதை பல வருடங்களாக பராமரிப்பு இன்றி குண்டும் குழியுமாக ஒழுங்கற்ற நிலையில் மண் அரிப்பினால் சேதமடைந்து மிகவும் மோசமான நிலையில் பாதை இருக்கிறது. மேற்படி பாதை பொதுப் பணித்துறை ஆற்று நீர் கோட்டத்திற்குச் சொந்தமானது. திருச்சி மாநகராட்சிக்குத் தார்சாலை அமைத்து கொள்வதற்கு ஆற்று நீர் கோட்டம் அனுமதியும் வழங்கியுள்ளது. இதுநாள்வரை தார்சாலை அமைக்கப் படவில்லை. இந்தப்பிரச்சினையில் தலையிட்டு எங்கள் பகுதிக்குத் தார்சாலை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஆர். மலையாளி
கல்லங்காடு
வண்ணாரப்பேட்டை வழி, திருச்சி

**தீர்வு :-**

**கோ.** அபிசேகபுரம் கோட்டம்-திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண். 52 ல் உள்ள கல்லாங்காடு பகுதிக்கு செல்வதற்கு உய்ய கொண்டான் ஆற்றின் கரையில் தார்சாலை அமைக்க மதிப்பீடு ரூ.7,20,000/ க்கு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது. அனுமதி பெறப்பட்டவுடன் தார்சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை சமர்ப்பிக்கப்படுகிறது.

உதவி ஆணையர்,
கோ. அபிசேகபுரம் கோட்டம்
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

## நீதித் துறை

நீதிமன்றங்களின் சீரிய செயல்பாட்டிற்காகக் கூடுதல் பணியிடங்கள் தோற்றுவித்தல், புதிய கட்டடங்கள் கட்டுதல், மரச்சாமான்கள் வாங்குதல், ஆகிய தேவைகளுக்காக ரூ.21.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முன்பிருந்த ஆட்சியில் நடைபெற்ற ஊழல் குறித்த வழக்குகளை விசாரிக்க மாவட்ட நீதிபதிகள் தரத்தில் உள்ள தனி நீதிபதிகள் தலைமை வகிக்கும் மூன்று கூடுதல் நீதிமன்றங்கள் ரூ.49 இலட்சத்து 32 ஆயிரம் செலவில் நிறுவப்பட்டன.

தமிழகத்தில் உள்ள அனைத்து வழக்குரைஞர் கழகங்களுக்கும் நூலகங்கள் மற்றும் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற ரூ.31.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பணிகள் நடை பெறுகின்றன.



# இதயநோயா ? அலட்சியம் வேண்டாம் !

**மா**டிப்படி ஏறும்போது மூச்சு வாங்கினால் அலட்சியமாக இருக்கக்கூடாது. முதுமையில் இதய நோய்கள் வராமல் பார்த்துக் கொள்ள 40 வயது முதலே உணவு, உடற்பயிற்சி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பொதுவாகச் சைவ உணவே நல்லது. அசைவம் சாப்பிடுபவர்களாக இருந்தால் முட்டை, இறைச்சி வேண்டாம். மீன், கோழி ஆகியவற்றை 10 தினங்களுக்கு ஒருமுறை சாப்பிடலாம். வெண்ணெய் உள்பட கொழுப்புச் சத்து உள்ள உணவுப் பண்டங்களைத் தவிர்த்துவிட வேண்டும்.

உடல் எடைக்கும் இதயத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. உடல் பருமன் நல்லது அல்ல. ஏனெனில் உடல் பருமன் காரணமாக இதயத்தின் வேலை அதிகரிக்கும். உயரத்துக்கு ஏற்ற எடை கீழுள்ள அட்டவணைப் படி இருந்தால் தவறில்லை.

**இரத்த அழுத்தம்**

| வயது | உயர்நிலை எம்.எம்/ஜி | கீழ்நிலை எம்.எம்/ஜி |
|---|---|---|
| 30 - 40 | 120 | 80 |
| 40 - 60 | 130 | 90 |
| 60 - 70 | 140 | 90 |
| 70-க்கு மேல் | 160 | 90 |

நவீன வாழ்க்கை முறையில் சொகுசு அதிகரித்துவிட்டதால், உடற்பயிற்சி குறைந்துவிட்டது. தினந்தோறும் காலை அரை மணி நேரம் இரண்டு முதல் மூன்று கிலோமீட்டர் தூரம் நடந்தால் நல்லது. மிக வேகமாகவோ அல்லது மிக மெதுவாகவோ நடக்கக்கூடாது. நடக்கும்போது பேசினால் மூச்சு வாங்காத அளவுக்கு உரிய வேகத்தில் நடக்கவேண்டும். இரத்த அழுத்தத்தைச் சீராகப் பராமரிக்க நடைப்பயிற்சி உதவும்.

60 வயது நிரம்பியவர்களுக்கு இயல்பான இரத்த அழுத்த அளவு, உயர் நிலையில் 140 எம்.எம்./ஜி-ம் கீழ் நிலையில் 90 எம்.எம்.ஜி.-ம் இயல்பானது. எனினும் இரத்த அழுத்தம் உயர் நிலையில் 130 எம்.எம்./ஜி என்ற அளவைத் தொட்ட உடனேயே உப்பைக் குறைத்துக் கொள்ளுவது நல்லது. ஊறுகாய் சாப்பிடக் கூடாது.

புகைப்பழக்கம் காரணமாக இதய இரத்தக் குழாய்கள் சுருங்கிவிடும். இதயத் துடிப்பு சீராக இருக்காது. எனவே புகை பிடிப்பதை விட்டுவிடுவது நல்லது.

மாடிப்படி ஏறும்போது படபடப்பு ஏற்பட்டால், இதயச் செயல்பாட்டுக்கு அதிக ஆக்சிஜன் தேவைப்படுகிறது என்று பொருள். இப்பிரச்சினை உள்ளவர்கள் இரத்த அழுத்த அளவைப் பரிசோதித்துக் கொள்ளவேண்டும். 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மாதம் ஒரு முறையாவது இரத்த அழுத்தத்தைப் பரிசோதனை செய்து கொள்ளவேண்டும்.

இந்தியாவில் நகர்ப்புறங்களில் 40 சதவீத முதியோரும், கிராமப்புறங்களில் 16 சதவீத முதியோரும் இதய நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.

கிராம மக்களிடையே இதயநோய்கள் குறைவாக இருப்பதற்கு, உடல் உழைப்புடன் கூடிய அவர்களது வாழ்க்கை முறையே காரணம்

- டாக்டர் **டி. வைத்தியநாதன்.**

## கின்னஸ் சாதனை ரயில் எஞ்ஜின்

**கி**ன்னஸ் சாதனைப் புத்தகத்தில் இந்தியாவைச் சேர்ந்த 143 ஆண்டுக்காலம் பழமை வாய்ந்த நீராவி என்ஜின் இடம் பெற்றுள்ளது.

**'தேவதை ராணி' (Fairy Queen)** என்ற பெயர் கொண்ட அந்த ரயில் என்ஜின் 1855-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தில்லி - ஆல்வார் செல்லும் சுற்றுலா ரயிலில் இப்போது அது இயக்கப்படுகிறது.

கரிய வண்ணத்தில் அழகுற அமைந்த இதற்கு உலக சாதனைச் சான்றிதழ் கிடைத்துள்ளது. தேசிய ரயில் அருங்காட்சியகத்தில் காட்சிக்காக இது வைக்கப்படும். ஏற்கெனவே 79 கண்காட்சியிலும் இடம் பெற்றுள்ள இந்த என்ஜின், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், கிழக்கிந்தியக் கம்பெனிக்காக உருவாக்கப்பட்டது.



மருத்துவம்:

# பிள்ளைப்பேறு

- ஜோசப் சந்திரகுமார்

இந்தியா, மக்கள் பெருக்கத்தால் அவதிப்படும் நாடுதான் என்றாலும், இந்த நாட்டிலும் திருமணமாகியும் பல்லாண்டுகள் மகப்பேறு இல்லாமல் குழந்தைக்காகத் தவம் கிடக்கும் பல்லாயிரக்கணக்கான தம்பதிகளும் இருக்கத்தான் செய்கின்றனர். திருமணமான ஒவ்வொரு பெண்ணும் தாய்மை நிலையை அடையவேண்டுமென்று ஏங்குவது இயற்கையே. குழந்தை இல்லாத குறையினால் குடும்பத்தில் மன வேறுபாடும் சமூகத்தில் தாழ்வு மனப்பான்மையும் வாழ்க்கையில் விரக்தியும் ஏற்படுகின்றன.

இந்திய நாட்டில், திருமணமான தம்பதிகளில் 10 முதல் 15 சதவிகிதம் பேர் குழந்தைச் செல்வம் இல்லாமல் தவிக்கின்றனர். குழந்தை பெறுவதற்காக இவர்கள் பல்லாயிரக் கணக்கான ரூபாய் செலவிடவும் தயாராக இருக்கின்றனர்.

சிலர், நல்ல மருத்துவர்களை அணுகி நடைமுறை ரீதியான ஆலோசனையைப் பெறுகின்றனர்; மற்றும் பலர் போலி மருத்துவர்களிடம் சிக்கி பணத்தைப் பறி கொடுக்கின்றனர்.

குழந்தைப்பேறு இன்மைக்கு 40 சதவிகிதம், பெண்ணின் மலட்டுத்தன்மையும், 40 சதவிகிதம் ஆணின் மலட்டுத்தன்மையும் 20 சதவிகிதம் இருவரின் மலட்டுத்தன்மையும் காரணம் என்று மதிப்பிடப்பட்டு இருக்கிறது.

**பெண்ணைக் குறை சொல்லுவதா?**

இந்தியாவைப் பொருத்தவரை, ஆண்களின் மலட்டுத்தன்மை 40 முதல் 45 சதவிகிதம் வரை இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் வேதனை தரும் வேடிக்கை என்னவென்றால், குழந்தை இல்லாத பெண்தான் சமுதாயத்தில் மலடியெனப் பட்டம் சூட்டப்பட்டு, பழிக்கப்படுகிறாள். இவ்வாறு அவதிப்படும் பெண்களில் பலர் உடற்கூறு ரீதியில் குழந்தை பெறும் பாக்கியம் பெற்றவர்களேயானாலும், இவர்களின் கணவர் உடலில் விந்தணு உற்பத்தி ஆகாமலோ அல்லது விந்தணு எண்ணிக்கையில் குறைந்தோ இருப்பதால்தான் குழந்தை பெற முடியாத நிலை ஏற்படுகிறது. அண்மைக்காலம் வரை ஆண்களுக்கே உரிய வறட்டுப் பெருமை காரணமாகக் கணவன்மார் மகப்பேறு பரிசோதனைக்குத் தங்களை உட்படுத்திக்கொள்ள முன்வரவில்லை.

ஆனால் இப்போது, திருமணமாகி ஓராண்டு ஆகியும் குழந்தை பிறக்காத பெண்களைத் தீவிரப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு முன்னர், கணவனின் உடல் பரிசோதனையும் விந்தணு பரிசோதனையும் அவசியம் என்று மகப்பேறு நிபுணர்கள் கட்டாயப்படுத்துகின்றனர்.

**சினைமுட்டை**

ஆண் மற்றும் பெண் பாலரின் அடிப்படை இனப்பெருக்கக் காரணிகளான விந்தணு மற்றும் சினை முட்டையின் முக்கியத்துவத்தைப் பற்றித் தெரிந்துக்கொள்ள வேண்டியது அவசியம். ஆணின் விந்தணுவின் தலை பாகத்தில், பாரம்பரியக் குணாதிசயங்களை நிர்ணயிக்கும் க்ரோமோசோம்கள் எனும் மரபுணுக்கள் இடம் பெற்றிருக்கின்றன.

மனிதனின் உடலில் இருக்கும் இதர அணுக்கள் ஒவ்வொன்றிலும் 46 க்ரோமோசோம்கள் இருக்கும்போது, விந்தணுவில் மட்டும் 23 க்ரோமோசோம்கள்மட்டுமே இடம் பெற்றிருப்பது விந்தைதான். ஆணின் விந்தணு, பெண்ணின் சினைப் பையிலிருந்து வெளிவரும் சினை முட்டையுடன் இணையும் போது விந்தணுவில் இருக்கும் 23 க்ரோமோசோம்களும் சினை முட்டையில் இருக்கும் 23 க்ரோமோசோம்களும் ஆகமொத்தம் 46ம் சேர்ந்து குழந்தையின் குணாதியசங்களை நிர்ணயிப்பதுதான் ஆண்டவன் படைப்பின் அதிசயமாகும். ஆகவேதான், குழந்தைக்காக ஏங்கும் தம்பதிகள் தங்கள் சொந்த விந்தணுவும் சினை முட்டையும் சேர்ந்து கரு உற்பத்தி ஆகவேண்டும். அதுவே தங்கள் சொந்த ரத்தமாக இருக்க முடியும் என்று நினைப்பது நியாயம்தானே.

**செயற்கை முறையில் உயிர் அணுவைக் கருவூட்டல்**



நுண்ணிய 'பிப்பட்' மூலம் கருமுட்டையினைப் பிடித்தல்



கருமுட்டையினுள் உயிர் அணுவை நுண்ணியமாக நுழைத்தல்

## சோதனைக் குழாய்க் குழந்தைகள்

பல பெண்களுக்குச் சினை முட்டை உருவாகியும், அவை வந்தடையும் குழாயில் அடைப்புகள் இருப்பதால் அவர்களால் குழந்தை பெற முடிவதில்லை. இவர்களில் ஒரு சிலரே அறுவைச் சிகிச்சை மூலம் பயன்பெற முடியும்.

1978ஆம் ஆண்டில் கேம்பிரிட்ஜைச் சேர்ந்த ஸ்டெப்டோ, எட்வர்ட்ஸ் என்ற நிபுணர்கள் கண்டுபிடித்த ஐ.வி.எஃப்.எனும் இன் விட்ரோ ஃபெர்டிலைசேஷன் என்ற கண்டுபிடிப்பு, இப்படிப்பட்ட பெண்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது. இதுவே பின்னர் 'சோதனைக் குழாய்க் குழந்தை' முறை என்று பிரபலமாகியது.

இந்த முறையில், ஊசி மூலம் பெண்ணின் சினை முட்டையை வெளியே எடுத்து ஆய்வுக் கூடத்தில் தக்க வெப்ப நிலையில் கணவனின் விந்தணுக்களை அதனுடன் சேர்த்துக் கருவுறச் செய்கிறார்கள். இப்படி உருவான கருவினை மீண்டும் மனைவியின் கர்ப்பையில் செலுத்தி, குழந்தையை வளரவைத்து விஞ்ஞானச் சாதனை புரிந்தார்கள். இதைத் தொடர்ந்து உலகெங்கும் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் உடல் ஊனம் இன்றி நல்ல முறையில் பிறந்து குழந்தையில்லாத பலரது மனக்குறையைத் தீர்த்துவைத்தன.

## ஆண் மலட்டுத்தன்மை

சோதனைக் குழாய் முறையானது, பெரும்பாலும் மலட்டுத்தன்மை கொண்ட பெண்களுக்கே பெரிதும் பயன்பட்டது. ஆண் மலட்டுத்தன்மையை நீக்க இது பயன்படவில்லை. ஏனென்றால், சோதனைக் குழாய் மூலம் குழந்தை பிறக்க வேண்டுமானால் ஆணின் விந்தணுக்கள் எண்ணிக்கையில் ஏராளமாகவும் உயிரோட்டம் மிக்கவையாகவும் இருக்க வேண்டும். மலட்டுத்தன்மை கொண்ட ஆண்களைப் பரிசோதிக்கும்போது உயிரணுக்கள் 40 கோடி என்ற எண்ணிக்கை இருப்பதற்குப் பதிலாக 4 அல்லது 5 அணுக்களே இருப்பது தெரிய வந்தது. அது மட்டுமல்லாமல், உயிரோட்டம் பெற்று வேகமாக நீந்திச் செல்ல வேண்டிய நிலையில் இருக்க வேண்டிய உயிரணுக்கள், இத்தகைய ஆண்களுக்கு நெளிந்தும் அசைந்தும் செல்லும் நிலை காணப்படுகிறது.

ஹார்மோன் மருந்து சிகிச்சை மூலம் இந்த நிலையை சரிசெய்ய முடியாது. இவர்களைப் பொறுத்தவரை ஐ.வி.எஃப். அல்லது சோதனைக் குழாய் முறை பயனளிப்பதில்லை.

## புதிய கண்டுபிடிப்பு:

இந்தச் சூழ்நிலையில்தான் 1992ஆம் ஆண்டில், பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த டாக்டர் வான் ஸ்டெயிர்டஜெம் என்பவர் தலைமையிலான நிபுணர்குழு இன்ட்ரா சைடோப்ளாஸ்மிக் ஸ்பெர்ம் இன்ஜெக்ஷன் (ஐ.சி.எஸ்.ஐ) எனும் புதிய முறையை உலகுக்கு அறிமுகப்படுத்தியது.

இந்த முறையில், பயிற்சிபெற்ற நிபுணர்கள், மிக நுட்பமான சாதனங்களைப் பயன்படுத்தி ஒரே ஒரு ஆண் விந்தணுவைப் பெண்ணின் சினை முட்டைக்குள் ஊசி போன்ற கருவியின் மூலம் செலுத்துகின்றனர். கரு உண்டானதும் அதனை மறுபடியும் பெண்ணின் கருப்பைக்குள் செலுத்தி குழந்தை வளரச் செய்கின்றனர்.

சோதனைக்குழாய் முறைபோல் அல்லாமல் ஐந்து விந்தணுக்கள் மட்டுமே உடைய, மலட்டுத்தன்மை கொண்ட ஆண்கள், விந்தணுவின் உயிரோட்டம் குறைந்தவர்கள் ஆகியோரும் தங்கள் மனைவியைக் கருத்தரிக்க வகை பிறந்துள்ளது. இன்னொரு விஷயம் சிலவகை மலட்டுத்தன்மை உடைய ஆண்களுக்கு ஆண் விதையில் உயிரணுக்கள் உருவானலும் விந்து வெளிப்படும்போது அதில் உயிரணுக்கள் காணப்படாததால் இப்படிப்பட்டவர்கள் தங்கள் மனைவியைக் கருத்தரிக்கச் செய்ய முடிவதில்லை.

இத்தகைய நிலையில் உள்ளவர்களுக்கும் ஒரு நல்ல செய்தி. இவர்களுடைய ஆண் விதையிலிருந்து ஊசி மூலம் நேரடியாக உயிரணுக்களை வெளியே எடுத்து, ஆய்வுக் கூடத்தில் பெண்ணின் சினை முட்டைக்குள் செலுத்தி கருத்தரிக்கச் செய்ய இந்த ஐ.சி.எஸ்.ஐ. முறை வழி வகுக்கிறது.

இவர்களுடைய உயிரணுக்களில் வால் பகுதி இல்லாமல் போனாலும் பரவாயில்லை. தலைப்பகுதி மாத்திரம் உருக்குலையாமல் இருந்தால் போதும்.

உலகிலுள்ள பல பெரு நகரங்களில் ஐ.சி.எஸ்.ஐ. முறையைப் பயன்படுத்துவதற்கு நவீன சாதனங்கள் உருவாகி, பல ஆராய்ச்சி நிலையங்கள் செயல்படத் துவங்கிவிட்டன. பெல்ஜியம் நாட்டில் மட்டும் 1994 ஆகஸ்ட் மாதம் வரையில் 400-க்கு மேற்பட்ட குழந்தைகள் இந்த வகையில் பிறந்திருக்கின்றன. ஆணின் விதையில் உண்டாகும் உயிரணு, பாதையில் அடைப்பு காரணமாக வெளிவர முடியாமலும், அறுவை சிகிச்சை பயன்படாமலும் இருப்பவர்களுக்கும் விந்தணு எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பவர்களுக்கும் ஐ.சி.எஸ்.ஐ. முறை ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது.

ஆண் மலட்டுத்தன்மையை நீக்கும் இந்த அரிய மகப்பேறு சிகிச்சை இப்போது சென்னையிலும் கிடைக்கத் துவங்கியிருக்கிறது. ஆண் மலட்டுத்தன்மை ஆராய்ச்சி மற்றும் சிகிச்சை முறையின் முன்னோடியாக இருப்பவரும் சென்னையில் உள்ள மார்ச்-2 நிறுவனத் தலைவருமான டாக்டர் ஏ. ராஜசேகரன், ஐ.சி.எஸ்.ஐ. முறை மூலம் மகப்பேறு சிகிச்சை அளிக்க ஒரு இலட்சம் ரூபாய் வரை செலவாகும் என்றும் இதில் சுமார் 30,000 ரூபாயை மருந்துக்கென்று ஒதுக்கவேண்டும் என்றும் கூறுகிறார்.

இந்தச் சிகிச்சை நிறைவு பெற, சுமார் ஒன்றரை மாதம் பிடிக்குமாம். குழந்தையில்லாத மலட்டுத் தம்பதி என்று சமுதாயத்தால் முத்திரை குத்தப்பட்டு நொந்துபோயிருப்பவர்கள், தங்களுடைய சொந்தக் குழந்தையைப் பெற்றெடுக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியோடு ஒப்பிட்டால் இந்தச் செலவு சாதாரணம்தானே! ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : ரா. சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை-தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை - 600 002. தொலைபேசி: 568926, 568927, 564906



தூய
பட்டு
தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23





